கல்கி

KALKI 2.7.89 ரூ. 2.




NEW
Rexona
FOR SOFT AND GLOWING SKIN
Rexona
தகதக தங்கப் பட்டுடன்
தழுவுது தங்கப் பட்டுடல்
இப்போது, தூய தேங்கா-
யெண்ணெய் வளம் செறிந்து வரும்
புதிய ரெக்ஸோனா: உங்கள் மேனிக்கு
தங்கப் பட்டுமென்மை, பட்டொளி
மெருகு, மோகனப் புதுமணம்,
புது வடிவம், உமதாசை தீர்க்கும்
அனைத்துகுண சோப் புது ரெக்ஸோனா.
புதிய
ரெக்ஸோனா
பொன்னான மென் பட்டு மேனி மெருகுக்கே.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
தூய தேங்காயெண்ணெய் செறிந்

கல்லூரி மாணவர்கள் திரைப்பட இயக்குனர்கள் ஆகின்றார்கள்

இந்த ஆண்டு திரைப்படக் கல்லூரியில் இறுதியாண்டு இயக்கம் **(Film Direction)** படித்துக் கொண்டிருக்கும் இளவரசன், பார்த்திபன், ஆகிய இரண்டு மாணவர்களின் திறமையை அறிந்து தயாரிப்பாளர்கள் அவர்களைத் தங்கள் படங்களை இயக்க ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இந்த இரண்டு மாணவர்களையும் திரைப்படக் கல்லூரி முதல்வர் தியாகராசன் நமக்கு அறிமுகப்படுத்தினார். அவர்கள் சினிமாவில் என்ன புதுமை செய்யப் போகின்றார்கள்?

ஆர். இளவரசன்:

"தமிழில் வரும் படங்கள் எதுவுமே தனித்



பார்த்திபன்

தன்மை கொண்டவையாக இல்லை! க்ரைம், காதல், குடும்பப் பிரச்னை, ஜோக்ஸ், டான்ஸ் என்று எல்லாம் கலந்து குழப்பிவிடுகின்றார்கள். 'க்ரைம்' சப்ஜெக்ட் என்றால் முழுக்க முழுக்க க்ரைமாகவே இருக்க வேண்டும். அதில் போய்க் காதலையோ ஜோக்சையோ திணிக்கக் கூடாது. என்ன சொல்ல நினைக்கின்றோமோ அதை மட்டும் ஆடியன்சைக் கவரும் வண்ணம் 'போர்' அடிக்காமல் சொல்ல வேண்டும். ஒரு நல்ல 'த்ரிலிங்கான' ஆங்கிலப் படத்தைத் தமிழில் காப்பி அடித்து எடுக்கின்றார்கள். அப்படியே எடுக்க வேண்டாமா? அதில் தமிழ் சினிமாத்தனத்தைக் கலந்து மொத்தப் படத்தையும் 'குப்பை'யாக்கி விடுகின்றார்கள். என் படத்தில் ஏதாவது ஒரு தனித் தன்மை நிச்சயம் இருக்கும்.

ஜே. பார்த்திபன்:

என்னைப் பொறுத்த வரை கலை, கலைக்காக அல்ல; மக்களுக்காகத் தான். அதே நேரம் ஜனங்களுக்கு இதுதான் பிடிக்கும் என்று தேவை இல்லாத விஷயங்களைத் திணிப்பதில் எனக்கு உடன்பாடில்லை. அவசியமில்லாமல் பாடலும் க்ரூப் டான்ஸும் கூட எதற்கு? அதெல்லாம் ஜனங்களைத் தியேட்டரில் உட்கார வைப்பதற்குத் தான். எடுத்துக் கொண்ட சப்ஜெக்டால் அதைச் சாதிக்க முடியாதா? விஷயத்தைத் திறம்படச் சொன்னாலே மக்கள் கவனத்தைப் பெற முடியும்.

பெண்கள் சம்பந்தப் படாத விஷயங்கள் வாழ்க்கையில் எத்தனையோ நடக்கின்றன. அவற்றை மையப் படுத்தி 'பெண்களே' இல்லாமல் ஒரு படம் பண்ண வேண்டும் என்று விரும்புகிறேன். ஓடுமா? என்பார்கள். சொல்லுகின்ற விதமாகச் சொன்னால் ஓடும். தயாரிப்பாளர்களும் சினிமாவில் கணிசமான மாறுதல் செய்யத் தயாராகத்தான் இருக்கின்றார்கள். அந்த மாறுதல்களை நிகழ்த்திக் காட்டும் விதத்தைத் தயாரிப்பாளரிடம் விளக்கிக் கூறத்தான் தமிழ் சினிமாவில் ஆள் இல்லை!



இளவரசன்

— நமது நிருபர்

படங்கள்: ஸ்ரீஹரி.

கல்வி:

மாநகரில் பெறுவதா? சிறுநகரில் சிறப்பதா?

கடலூர் கந்தசாமி நாயுடு கல்லூரியில் படித்த மாணவி விஜயலக்ஷ்மியும் சென்னை வைஷ்ணவாக் கல்லூரி மாணவர் நாகராஜனும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கிறார்கள்.



நாகராஜன்: எங்க காலேஜ்ல சில கிராமத்து மாணவர்கள் படிக்கறாங்க. ஆரம்பத்துல ரொம்ப ஒதுங்கி, கூச்சமாக இருந்த அவங்க இப்போ நல்லாப் பழகறாங்க. தங்கள் தேவைகளுக்குப் போராடக் கூடத் தயாராயிட்டாங்க!

விஜயலக்ஷ்மி: அது நிச்சயமா நகரத்துக்கு வந்ததோட பாதிப்புதான். அங்கயே (கிராமங்கள் மற்றும் சிறு நகர்கள்) படிக்கறவங்க கிட்ட இத்தனை துணிச்சல் எதிர்பார்க்க முடியாது. அரசியல் ரீதியான தலையீடுகளால போராட்டங்கள் வரலாமே யொழிய தங்களுக்காக அவங்க, போராடறது குறைவு. வீட்லயும் சரி, காலேஜ்லயும் சரி கட்டுப்பாடுகள் ரொம்ப அதிகம்.

நாகராஜன்: இங்கே காலேஜுல கட்டுப்பாடுகள் குறைவு — அட் லீஸ்ட ஆண்கள் காலேஜ்ல சுதந்திரம் அதிகம்....

விஜயலக்ஷ்மி: எங்களுக்கு நேர் மாறுதல்! ஸ்கூல் மாதிரிதான் காலேஜ்ல கட்டுப்பாடுகள் தொடரும். ஒரு நாளைக்கு ஆறுவகுப்புன்னா, ஆறு வகுப்பையும் நாங்க அடெண்ட் பண்ணியே ஆகணும். நீங்க நினைச்சா கிளாஸை விட்டு வெளிநடப்பு செய்வீங்க.....

நாகராஜன்: அபாண்டம்! அபாண்டம்! சினிமாக்கள்லகாட்றஸ்டுடண்ட்இமேஜைப் பார்த்துட்டு நீங்க இந்த முடிவுக்கு வந்துட்டீங்க. எங்களுக்குப் பிடிக்கலைன்னா கிளாஸ் கட்டடிப் போமேயொழிய பாதியில் வெளிநடப்பு செய்து ஆசிரியரை அவமானப் படுத்த மாட்டோம்.

விஜயலக்ஷ்மி: நாங்க வகுப்புக்குப் போகாம இருந்தால் 'ரவுண்ட்ஸ்' வர மேடம் கிட்ட நிச்சயம் மாட்டிக்குவோம். பேராசிரியர்களின் தனிப்பட்ட கவனம் எப்பவும் எங்களைச் சுத்தி வேலியா இருக்கும்.

நாகராஜன்: இந்த மாதிரி அதிகமா கட்டுப்படுத்தறதாலதான் தேவையான விஷயங்களுக்குக் கூடப் போராடறதுக்கு

உங்களுக்குத் துணிவு இருக்கமாட்டேங்குது!

விஜயலக்ஷ்மி: மே. பி! ஆனா அதிக சுதந்திரமும் ஆபத்துதானே. எவ்வளவு மாணவர்கள் இந்தச் சுதந்திரத்தைச் சுவாசிக்கறேன்னு கெட்ட பழக்கங்களுக்கும் போதை மருந்துக்கும் அடிமை ஆயிடறீங்க..! உங்க கிட்ட நிறைய பணம் வேறே புழங்கும். எங்கள் ஊர்ப் பக்கமெல்லாம் படிப்பு, பஸ் செலவுக்கு மேலே எக்ஸ்ட்ராவா ஒரு பைசா கேட்டா கூட பெற்றோர் ஆயிரம் கேள்வி கேட்பாங்க....

நாகராஜன்: பாயிண்ட்ல பிடிச்சுட்டீங்க! சரி பஸ் செலவுன்னதும் நினைவு வருது... உங்க ஊர்ப்பக்கமெல்லாம் போக்குவரத்து, ஹாஸ்டல் வசதிகள்லாம் எப்படி?

விஜயலக்ஷ்மி: ஐயோ! அது பெரிய பிரச்னைங்க! தென்னார்காடு மாவட்டத்துல இருக்கிற ஒரே பெண்கள் கல்லூரி எங்களுடையது. விழுப்புரம் பண்ருட்டி, சிதம்பரம் போன்ற ஊர்கள்லேர்ந்து வர மாணவிகள் பஸ்ஸைத்தான் நம்பியிருக்காங்க. ஹாஸ்டல் வசதி கிடையாது. காலையிலே சாப்பிடாமேயே கிளம்பி வந்துடுவாங்க. மாலை நாலு மணிக்கு வகுப்பு முடிஞ்சு கிளம்பி வீடு போய்ச் சேர்றத்துக்குள்ள போதும் போதும்னு ஆயிடும். ஆண்கள் சிலர் மைல் கணக்கா சைக்கிள்ல போவாங்க....

நாகராஜன்: நேரம் கழித்து வீட்டுக்குப் போனா, சோர்வாவேற இருப்பாங்க; படிக்கவே தோணாது...

விஜயலக்ஷ்மி: அது மட்டுமில்ல. அனேகமா குடும்பத்திலே காலேஜ்லே படிக்கற முதல் தலைமுறையா இவங்க இருப்பாங்க. ஆண் பசங்களை விவசாயத்துக்கும் வெளி வேலைக்கும் ஏவிக்கிட்டே இருப்பாங்க. பெண்களை வீட்டு வேலை செய்யாம விடமாட்டாங்க... கட்டாயப்படுத்திப் பாதி படிப்பிலேயே கல்யாணம் பண்ணி வைச்சுடுவாங்க... பெற்றோருக்குப் படிப்பறிவு இல்லாததால அவங்க வழிகாட்டுதலை எதிர்பார்க்க முடியாது! இதனால பரீட்சை நேரத்துல ரொம்பத்திண்டாடுவாங்க.

நாகராஜன்: இதனாலதான் கிராமத்து மாணவர்களுக்குப் பொது அறிவு சராசரியைவிடக் குறைச்சலாக இருக்கோ....?

விஜயலக்ஷ்மி: அதை வளர்த்துக்கற ஆர்வம் ஒண்ணும் குறைச்சலா இல்லையே! வாய்ப்புக்கள் தான் குறைவு. பாடப் புத்தகங்களையே நாங்க அலைஞ்சு திரிஞ்சு கஷ்டப்பட்டு வாங்கணும். லைப்ரரிகள் நிறைய கிடையாது. தப்பித் தவறி இருந்தாலும் தேவையான நூல்கள் கிடைக்காது. அப்படி இருந்தாலும் ஓரளவுக்கு எங்க கல்லூரியில பாடத்திட்டத்துக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகள் நடத்தி எங்களை ஊக்குவிச்சாங்க. எங்களுக்கு வசதிகள் குறைவு – அதனால எதையும் பெரிய அளவுல செய்ய முடியாது.





நாகராஜன்: உங்க ஊர்ப் பக்கங்களில் இன்னமும் மாணவர்களும் மாணவிகளும் சமமாப் பழகறது ரொம்பப் பிரச்னைகளை ஏற்படுத்தும் இல்லையா...?

விஜயலக்ஷ்மி: அது 'பேச்சுக்கு' இடங் கொடுக்கும். மேலும் பெண்ணோ, ஆணோ வலியப் போய் சகஜமா எதிர்ப்பாலினர் கிட்டே பழகினா அவங்க அதை இயல்பா எடுத்துக்காம பிரமிச்சுப் போயிடறாங்க.... பிரச்னைகள் எழுகின்றன. இது சினிமா பாதிப்பு. இதனால்தான் எங்க பேராசிரியர்களும் இந்த விஷயத்துல ரொம்பக் கண்டிப்புக் காட்டறாங்க...

நாகராஜன்: இங்க ஈவ் டீஸிங் இன்னும் இருக்கு. ஆனா சினிமாவே வாழ்க்கைன்னு நினைச்சிருந்த நிலைமை கொஞ்சம் கொஞ்சமா மாறி வருது...

விஜயலக்ஷ்மி: சரி, பொதுவா கல்லூரி வாழ்க்கை பற்றி நீங்க என்ன நினைக்கறீங்க....?

நாகராஜன்: நிறைய மாற்றங்கள் வரணும்னு நினைக்கிறேன். கல்வி, வாழ்க்கையோட தொடர்புள்ளதா ஆகணும். படிப்பு நடைமுறைக்குப் பயனில்லாம இருக்கேன்ற சலிப்பு இப்ப எங்களிடையே நிறைய இருக்கு.... அங்கே எப்படி...?

விஜயலக்ஷ்மி: நாங்களும் ஃபீல்ட் வொர்க்கை அதிகப்படுத்தினால் வரவேற்போம். எப்போதாவது என்.எஸ்.எஸ். காம்ப் போகும் போதுதான் வாழ்க்கையை, பிரச்னைகளை நாடி பிடித்துப் பார்க்கிறோம். மற்றபடி ஒரு சின்ன வட்டத்துலயே வளைய வர்றோம்.


நாகராஜன்: நாங்களும் கிராமங்களுக்குக் கேம்ப் போகும் போதுதான் எவ்வளவு பிரச்னைகள் உலகத்துல இருக்குன்னு தெரிஞ்சுக்கறோம். மற்றபடி நாங்களும் ஒரு வட்டத்துக்குள்ளதான் வளைய வரோம்னு தோணுது. என்ன.... எங்க வட்டத்தின் விட்டம் வேணுமானால் கொஞ்சம் அதிகமா இருக்கலாம்.....

விஜயலக்ஷ்மி: பாடத்திட்டத்தை நடைமுறைக்கு ஏற்றவாறு சீர் செய்வதன் மூலம் நம் எல்லோருக்குமே நிறைய நன்மை ஏற்படும்னு நினைக்கிறேன்.

— நமது நிருபர்

படங்கள்: யோகா

ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



உங்களுக்கும் உங்களது முன்னேற்றத்திற்கும் இடையில் இப்பொழுது உள்ள தூரம் ஒரு போஸ்ட் கார்டு தான் என்று நாங்கள் கூறினால் அது சற்று மிகையாகத் தோன்றும். ஆனால் உண்மை அதுதான்.

நீங்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஆங்கில மொழியில் போதிய பயிற்சியின்மை ஒரு தடையாக இருந்திருந்தால்........

மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசும் போது அதை ஓரளவு புரிந்து கொண்டும், அதற்கு ஆங்கிலத்திலேயே பதிலளிக்க முடியவில்லையே என்ற குறை உங்களிடம் குடி கொண்டிருந்தால்,

பல புத்தகங்களைப் படித்தும் ஆங்கிலத்தில் பேச முடியவில்லையே என்ற சலிப்பு உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்,

நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை இப்பொழுது அடைய ஒரே ஒரு போஸ்ட்கார்டுபோதும்...ஆமாம்!

ஆங்கிலத்தில் இலக்கணப் பிழையின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுத வேண்டும், தயக்க மின்றி சரளமாகப் பேசவேண்டும் என்ற உங்களது விருப்பத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்று போற்றப்படும் விவேகானந்தா கல்வி நிலையத் திற்கு இன்றே அனுப்புங்கள்.

நீங்கள் மேற்கொள்ள வேண்டிய பயிற்சியைப் பற்றியும் மற்ற தகவல்களையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள்.

வீட்டிலிருந்த படியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இந்த எளிய பயிற்சி முறையை நீங்கள் மேற்கொள்ளலாம்.

"நேர்முகப்பயிற்சியும் உண்டு."

என்ன?.....எங்கே கிளம்பி விட்டீர்கள்? போஸ்ட் கார்டு வாங்கத்தானே?

உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி துவங்கிவிட்டது.

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி

விவேகானந்தா கல்வி நிலையம்
9, மேட்லி ரோடு,
தி. நகர், சென்னை - 17.

NAGA

வழி காட்டுபவர்களுக்கு காட்டியவர்கள்...

வி. சி. குழந்தைசாமி:
துணைவேந்தர், அண்ணா பல்கலைக் கழகம்.



நான் சேலம் கல்லூரியில் இடைநிலை வகுப்பு (Intermediate) முடித்தபின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம் அல்லது பொருளாதாரத்தில் B.A. (Hons.) படிக்க விரும்பினேன். பேராசிரியர் தேவநேயப்பாவாணர் அவர்கள் கொடுத்த அறிமுகக் கடிதத்துடன் பேராசிரியர் சிதம்பரநாதன் செட்டியார் அவர்களைப் பார்த்தேன். எனக்கு உதவ அப்பொழுது அங்கு B.A. படித்துக் கொண்டிருந்த நண்பர் திரு. K.A. மதியழகன் உடன் வந்தார். பேராசிரியர் சிதம்பரநாதன், ''ஆங்கிலம், பொருளாதாரத்தில் இடம் கிடைப்பது கடினம். முயற்சி செய்யுங்கள்; B.A. (Hons). தமிழ் இலக்கியம் படிப்பதாயின் உதவு கிறேன்'' என்று கூறினார். நண்பர் திரு. மதியழகன் என்னையே, பொருளாதாரப் பேராசிரியர் Dr. R. N. பொதுவால் (Dr. R.N. Poduval) அவர்களை நேரில் சென்று பார்க்குமாறு கூறினார். அச்சத்துடன், தயக் கத்துடன் அவர் அறைக்குச் சென்றேன். பார்க்க அனு மதித்தார். பொருளாதாரத்தில் B.A. (Hons.) இல் இடம் வேண்டும் என்று அரைகுறையாகக் கூறி எனது இடைநிலை (Intermediate) வகுப்பு மார்க் தாளை அவ ரிடம் கொடுத்தேன். கவனமாகப் பார்த்தார். பின்னர் ''என்ஜினியரிங் கல்லூரிக்கு விண்ணப்பம் போட வில்லையா?'' என்று கேட்டார். அரசு பொறியியல் கல்லூரிகட்குப் போட்டிருக்கிறேன் என்று சொன் னேன். அதன் முடிவு தெரிந்தபின் வந்து பார்க்கச் சொன்னார். ''அது கிடைக்கிறதோ இல்லையோ இப் பொழுது பொருளாதார வகுப்பில் சேர்ந்து கொள் கிறேன்'' என்றேன். ''அங்கு இடம் கிடைக்கா விட்டால் நான் உறுதியாக இடம் கொடுக்கிறேன்; கவலைப்படாதே'' என்று கூறி அனுப்பி விட்டார். அதன்பின் இரண்டு நாளில் பொறியியற் கல்லூரி அனுமதி பற்றி வந்திருந்த கடிதத்தை எடுத்துக் கொண்டு என் தந்தை கிராமத்திலிருந்து சிதம்பரம் வந்து சேர்ந்தார். அப்பொழுதும் எனக்குப் பொருளா தாரம் அல்லது ஆங்கில இலக்கியம் படிக்க வேண்டு மென்ற ஆசை போகவில்லை. மறுபடியும் பேராசிரியர் Dr. பொதுவாலைச் சென்று பார்த்தேன். ''என்ஜினி யரிங் கல்லூரியில் இடம் கிடைத்திருக்கிறது. இருந்தா லும் பொருளாதாரம் படிக்க விரும்புகிறேன்'' என்று சொன்னேன். அதற்கு அவர் சொன்ன பதில் பசுமை யாக இன்றும் நினைவிலிருக்கிறது.

"If you do that, you must be a damn fool!

''நீ கிராமத்துப் பையன்; உனக்கு விவரம் தெரிய வில்லை. என்ஜினியரிங் படிப்பதற்கு எவ்வளவு போட்டி. அதில் கிடைத்த இடத்தை விடலாமா; போய்ச் சேர்'' என்று கூறி அனுப்பி வைத்தார்.

எனது பெற்றோர்களுக்கோ, உறவினர்களுக்கோ எனது வாழ்க்கைப் பாதையில் வழிகாட்டும் திறனும், தெளிவும் இல்லாத எனது பின்னணியில், பள்ளிக் கல்வியிலும் சரி, பல்கலைக் கழகக் கல்வியிலும் சரி, என் பயணத்தின் திசையை நிர்ணயித்தவர்கள் ஆசிரியர்கள்தான். அவர்களில் எனக்கு நன்றாகத் தெரிந்தவர்களுமுண்டு; எனக்குத் தெரியாதவர்களு முண்டு. எனக்கு முன்பின் தெரியாத, ஆனால் ஒரு முக்கிய கட்டத்தில் திசையைத் தேர்ந்தெடுக்க உதவி யவர் பேராசிரியர் பொதுவால்.

சிவ. சிவராமலிங்கம்:

தமிழ்ப் பேராசிரியர் — துறைத் தலைவர், எஸ். ஐ. வி. இ. டி. கல்லூரி, சென்னை.

எங்கள் ஆசிரியர் மு. வரதராசனார் வகுப்பு என்றாலே எங்களுக்கெல்லாம் ஒரே குதூகலம்தான். வாரத்தில் ஒருநாள் மட்டும் மு.வ.வின் வகுப்பு இறுதி வகுப்பாக இருக்கும். அதில் மாநிலக் கல்லூரி தமிழ் மாணவர்களும் எங்கள் பச்சையப்பன் கல்லூரிக்கு வந்து கலந்து கொள்ளுவது வழக்கமாக இருந்தது. ஒருநாள் மதியம் நல்ல மழை பிடித்துக் கொண்டது. சாலையெங்கும் இடுப்பு ஆழத்திற்கு மழைத் தண்ணீர் ஓடுகின்றது. பஸ்ஸுகள் எதுவும் ஓடவில்லை. சென்னையிலுள்ள கல்லூரிகளுக்கெல்லாம் விடுமுறை. நாங்கள் விடுதியை விட்டு வெளியே வர முடியவில்லை. மழையில் கல்லூரி வளாகத்தில் உள்ள மரங்கள் திடீர் திடீரென்று முறிந்து விழுந்து கொண்டிருந்தன! யாரையும் வெளியில் விடாமல் தடுத்துக் கொண்டிருந்தார்கள்.


எங்களுக்கெல்லாம் ஒரே வருத்தம். இன்றைய மு.வ.வின் வகுப்பு போய் விட்டதே என்று! மு.வ.வின் வகுப்பு நேரம் வந்தது. மார்போடு புத்தகத்தை அணைத்துக் கொண்டு வகுப்பை நோக்கி நனைந்து கொண்டே நடந்தனர் சிலர். இந்த மழையில் மு.வ. வருவாரா? சரியென்று நானும் கிளம்பினேன். முழுவதுவுமாய் நனைந்து கொண்டு மாநிலக் கல்லூரி மாணவ மாணவியர்களும் உள்ளே சரியான நேரத்தில் நுழைந்தனர்! இது எப்படிச் சாத்தியம்? வகுப்பறையில் சென்று பார்த்தால் தும்பை மலராய் நனைந்த கதருடையில் எங்கள் மு.வ! வெளியே மழை பூமியைக் கிழித்துக் கொண்டிருந்தது. உள்ளே வகுப்பு ஆரம்பமாயிற்று.

இப்போதும் மழை பெய்வதைப் பார்த்தால் என் மனத்தில் இந்த நிகழ்ச்சிதான் பசுமையாய் வந்து படிந்து விடுகின்றது.



சந்திப்பு: சரஸ்வதி

படங்கள்: ஸ்ரீஹரி



தமயந்தி



'சாரா டக்கர் கல்லூரியில் எம்.ஏ. ஆங்கில இலக்கியம் படித்துக் கொண்டிருக்கும் மாணவி நான்' — என்ற அடக்கமான அறிமுகத்துடன் கூடிய கதைகள் கல்கிக்கு வருவதுண்டு. அவற்றுள் பல பிரசுரிக்கப்பட்டு அமோக வரவேற்பு பெற்றுள்ளன. அக்கதைகள் மாணவ எழுத்தாளர் தமயந்தியுடையவை. அவரைப் பற்றி, அவர் வார்த்தைகளில்...

ஏழாம் வகுப்பில் எழுத ஆரம்பித்தது. கங்காருக் குட்டி மாதிரி மடியிலேயே கட்டி வைத்துக்கொண்ட கதைகள் அவை. வெளிச்சம் நோக்கி கைகாட்டியது, அழைத்துச் சென்றது எல்லாமே என் உடன்பிறவாச் சகோதரர் திரு. சத்தீஷ் வைத்தியநாதன். முதல் கதை விகடன் ஜாக்பாட் போட்டியில் (1987) ("நிழல்") வெளியாயிற்று. கல்கியில் "பயணம்" கதையில் கதை உலகப் பயணம் ஆரம்பமானது. திரும்பி வந்த கதைகள் மேலும் எழுதத் தூண்டுதலாய் அமைந்து போனதன் காரணம் தோல்வி கண்டு தளர்ச்சி இல்லாத மனசு. சின்னவளை விட்டு வெளியே வரத் துடித்தவளுக்குச் சத்தியமான மனசுடன் சில எதிர்ப்புகளை எதிர்த்துச் சகலமுமாய் நின்று, வளை வாசல் பெரிதாக்கிய அம்மா, அப்பா; சின்னத் திரியாய் எரிய ஆரம்பித்தவளைத் தூண்டி, நல்ல இலக்கியம் அறிமுகப்படுத்திய ஆத்மார்த்தமான ஸ்நேக மனசுடைய ஜெகந்நாதன் — எல்லோருமே ஊக்கப்படுத்தினவர்கள். லட்சியம் "கல்கி"யில் தொடர்கதை எழுதுவது. Inspiration சுற்றி வாழும் மனுஷர்கள். மனுஷர்களை நேசிக்கிற வரையில் இந்த எழுத்து தொடரும். நேசிப்பும் வாழ்க்கை முழுக்கத் தொடரும்.


ஏறும்பு நெரிசலாய் மனுஷ கூட்டம். பாங்க் திறந்து ஒரு மணி நேரமாகியிருக்கும். கௌண்டர் வழியாக "என்ட்ரி போடும்மா" என்று முதுகு வளைத்துப் பார்த்துக் கேட்கும் மனுஷ முகம், பின்னால் "சீக்கிரம்... என்ன இவ்ளோ நேரம்" என்று அவசரப்படும் மனுஷன். க்யூ — நீளமாய் எறும்பு ஊறின மாதிரி க்யூ. மனுஷ எறும்புகள்.

சுகன்யாவுக்குச் சட்டென்று பசி அமிலமாய் வயிற்றுக்குள் படர்ந்தது. காலையில் சாப்பிடவில்லை. ஆபீஸுக்குப் போகிற அவசரம். வாசல் வரைக்கும் இட்லித் தட்டை எடுத்துக் கொண்டு பின்னாலேயே வந்த அம்மா ஊட்டின ஒரு வாய். இரண்டாவது வாய் எடுக்கும் போது சைக்கிள் மிதித்துத் தெருக்கோடிக்கு வந்தாகி விட்டது.

மூன்றாவது தெருவைத் தாண்டி மெயின் ரோட்டுக்கு வந்த போது சைக்கிள் கல்லில் ஏறியது. புஸ்ஸ்... பின் டயர் மூச்சு விட்டுச் சப்பையாயிற்று. சுகன்யா அவசரமாய் மணி பார்த்தாள். ஒன்பது நாற்பது. கடவுளே! என்ன செய்ய?

சைக்கிளை ஸ்டாண்ட் போட்டாள். முகத்தைத் துடைத்து விட்டுச் சுற்றும் முற்றும் பார்த்தாள். தெரிந்த முகம் ஒன்று கூட இல்லை. கிட்டத்தில் சைக்கிள் கடை கிடையாது. பங்சர் ஒட்ட வேண்டும் என்றால் திரும்பவும் வீட்டுப் பக்கம் போக வேண்டும். தள்ளிக் கொண்டு போய் ஒட்டித் திரும்ப நேரமாகி விடும். வீட்டுக்குக் கொண்டு போய் சைக்கிளை விட்டு விட்டு பஸ்ஸில் போனாலும் அதே கதிதான். மானேஜர் இளநீர்க் கண்ணை உருட்டி "லேட்டா!" என்பார். ஆனாலும் வேறு வழியில்லை — வீட்டுக்குத் தள்ளிக் கொண்டு போய் விட்டு விட்டு பஸ் பிடித்துப் போவது தவிர.

சுகன்யா ஸ்டாண்ட் எடுத்து விட்டு சைக்



கிளை வீடு நோக்கித் திருப்பினாள். ஸ்கூலுக்குப் போக மாட்டேன் என்று கை கால் உதைத்துத் தரதரவென்று இழுத்துப் போகப்படுகிற குழந்தையாய் சைக்கிள் டயர் நகர்ந்தது. சுகன்யா சலிப்போடு சீட் பின்னால் கை கொடுத்து நகர்த்தினாள்.

''என்ன சுகன்யா? என்னாச்சு?''

பழக்கமான குரல். சுகன்யா சட்டென்று நிம்மதி மனசில் ஜீவனிக்கத் திரும்பினாள். சுந்தர்! முதல் முதலாக ராயப்பேட்டை ஈஸ்வரி வாடகை நூல் நிலையத்தில் புத்தகம் மாற்றும் போது ''இது வாசிங்க... நல்ல புத்தகம்'' என்று தானாகவே அறிமுகம் செய்து கொண்ட சுந்தர். இரண்டு வருஷங்களாயிற்று. நல்ல ஸ்நேகிதனாய், மனசின் ஊன்றுகோலாய், பல நேரங்களில் சந்தோஷம், துக்கம் சகலத்தையும் பகிர்ந்து கொண்டவன். சுகன்யா மறுபடியும் ஸ்டாண்ட் போட்டாள். ஹேண்டில் பாரைச் சுந்தர் கைக்குள் திணித்தாள்.

''சுந்தர்... சைக்கிள் பங்சராயிடுச்சு. ப்ளீஸ்... இதைக் கொண்டு போய் வீட்லே வச்சிடுங்களேன். மேனேஜர் கத்தும் சுந்தர். லேட்டா போனா... ப்ளீஸ்.''

''இதுக்கு எதுக்கு ப்ளீஸ்? சைக்கிளைக் கொடு. இந்தா, டிபன்–பாக்ஸைப் பிடி. பஸ்ல போயிருவியா? காசு இருக்கா பாரு.''

சுகன்யா பதற்றமாய் ஹேண்ட்–பாக்கைத் துழாவினாள். பத்து பைசா வந்தது. ''பத்து பைசாதான் இருக்கு சுந்தர். காசு தாங்க.''

சுந்தர் ஐந்து ரூபாய்த் தாளை நீட்டினான். சுகன்யா அவசரமாய் வாங்கி பஸ் வருகிறதா என்று பார்த்தாள்.

''சாயங்காலம் எப்படி வருவே?''

''பஸ்ல வந்திடுவேன்.''

''நான் அந்தப் பக்கம் வந்தேன்னா சைக்கிள் பங்சர் ஒட்டிக் கொண்டு வந்திடுறேன்.''

''சரி, வரட்டா?''

தூரத்து வளைவில் பஸ் திரும்புவது தெரிந்தது. சுகன்யா ஓடி ஏறினாள். ஆபீஸுக்குப் பத்து மணிக்குள் நுழைந்து ''அப்பாடா'' என்று உட்கார்ந்தாள். கூட்டம் கூடியது. க்யூ நீள ஆரம்பித்தது. மனுஷர்கள் எறும்பு மனுஷர்கள்.

ஒவ்வொருத்தராய்ப் போக சுகன்யா சீட்டில் சாய்ந்து உட்கார்ந்தாள். இனி பேலன்ஸ் எல்லாவற்றையும் சரி பார்க்க வேண்டும். அவ்வளவுதான். அக்கௌண்ட்ஸ் செக்ஷன் பார்த்தசாரதி வாசல் பக்கமாய் நின்று 'வா' என்று கை காட்டினார்.

''என்ன ஸார்?''

''உன்னைப் பார்க்க ஒரு பையன் வருவானே... அவன் வந்திருக்கான்!''

''யாரு?''

''அதான்ம்மா... சுந்தர்.''

சைக்கிளோடு சுந்தர் வாசலில் நின்றிருந்தான். சுகன்யாவைப் பார்த்ததும் பளிச்சென்று சிரித்தான்.

''சரி பண்ணியாச்சு சுகன்யா. இந்தா.''



''வாங்களேன். பார்த்தசாரதி ஸார்கிட்ட அறிமுகப்படுத்தறேன்!''

''வேணாம்மா. கிழம் பார்க்கிற பார்வையே சரியில்லை. 'யாரு சைக்கிள்? சுகன்யாவோடதா? ஏன் நீங்க கொண்டு வந்தீங்க'ங்கிறார்.''

''நீங்க சுத்த சந்தேகப் புத்தி கேஸ்! சும்மா வாங்க...''

சுகன்யா நடக்க, சுந்தர் தயக்கமாகப் பின்னால் நடந்தான். பார்த்தசாரதி முன்னால் போய் நிற்க அவர் மேலும் கீழுமாகப் பார்த்தார்.

''ஹி இஸ் சுந்தர் ஸார்... இவர்தான் மிஸ்டர் பார்த்தசாரதி.''

''ஹலோ.''

பரஸ்பரம் கை குலுக்கிக் கொண்டார்கள். பார்த்தசாரதி டீ குடிக்கக் கூப்பிட சுந்தர் வேண்டாம் என்றான். ஸ்நேகமாய்ச்



சிரிக்க முயன்றான்.

''எங்கே வேலை பார்க்கறீங்க?''

''வேலை தேடிட்டிருக்கேன். அப்ப நான் வரட்டா சுகன்யா?''

''சாயங்காலம் வீட்டுக்கு வாங்க. ரெண்டு புத்தகம் இருக்குது.''

''சரி சுகன்யா. வரட்டா ஸார்.''

பார்த்தசாரதியிடம் மறுபடி கைகுலுக்கினான். பார்த்தசாரதி பெரிசாய்த் தலையசைத்துச் சிரித்தார். உள்ளே போகத் திரும்பினவர் சுந்தர் கூடவே சுகன்யா வாசல் வரை பேசி நடந்ததைப் பார்த்து மறுபடியும் திரும்பிக் கதவில் சாய்ந்து நின்று—

இருவரையும் கண் இமைக்காமல் வெறித்தார்.

ஒரு வாரத்தில் மின்னல் வேகமாய் அமைந்து விட்டது. புதன் கிழமை பெண் பார்த்து, வெள்ளிக் கிழமை நிச்சயதார்த்தம். கஸ்டம்ஸில் வேலை பார்க்கிற மாப்பிள்ளை. சுகன்யா பரவசப்பட்டு நின்றாள். சுந்தர் எல்லாமுமாய் இருந்தான். மாப்பிள்ளை வீட்டாருக்குக் காப்பி கொடுப்பதிலிருந்து பூ ஆர்டர் செய்வது வரை சகலமும் கவனித்தான்.

சனிக்கிழமை அவனாகவே இரண்டு புறாக்கள் பறக்கிற மாதிரி அழைப்பிதழ் டிசைன் செய்தான். ப்ரூஃப் திருத்தி அச்சுக்குக் கொடுத்தான். ஒவ்வொரு கவராய்ப் பெயர் எழுதினான். பாங்க் ஊழியர்கள் என்று தனியாய் ஒரு பெரிய கவரில் போட்டுக் காலையில் பாங்க் கிளம்பும் போது கையில் கொடுத்தான்.

''எல்லார் பேரையும் எழுதிட்டேன். அந்த அட்டெண்டர் பேர் என்ன சுகன்யா?''

''கந்தசாமி.''

''அதுதான் விட்டுட்டேன். பேனா தா.''

பேனா வாங்கி ஸ்டூல் மேல் கவர் வைத்து எழுதித் தந்தான். பார்த்தசாரதிக்கு அழைப்பிதழ் மேலாக வைத்தான்.

''ஞாபகமா அவருக்கு முதல் இன்விடேஷன் வச்சிருக்கீங்களே சுந்தர்?''

''அவர் பார்த்த பார்வை சரியில்லை சுகன்யா. அதான் மேலே வச்சிருக்கேன். பார்த்த உடனே அசந்திடுவார் பாரேன். என்ன சுகன்யா... மாப்பிள்ளை சுந்தர் இல்லியான்னு கேப்பார்.''

''ஒண்ணும் அசர மாட்டார். சாதாரணமா பார்த்தாலே சந்தேகம்தான்னு தீர்மானிக்கிறது தப்பு சுந்தர். ஓர் ஆணும் பெண்ணும் ஸ்நேகமா இருக்கிறதுல என்ன பெரிய சந்தேகம் வந்திடப் போகுது?''

''உனக்குப் புரியலை சுகன்யா. நீ கிளம்பு.''

''புரியலைன்னு இல்லை. நீங்க பயப்படறீங்க. சமூகத்துக்கு மாறுகண் அது இதுன்னு கற்பனை பண்ணிட்டுப் பார்க்கறீங்க. சாதாரண பார்வை கூட பட்டுனு வேற மாதிரி பார்வையா உங்களுக்குத் தோணுது. அப்படி கெடையாது சுந்தர். போன வாரம் கூட பார்த்தசாரதி ஸார் எங்கிட்ட 'சுந்தர் நல்லாயிருக்கானாம்மா? வேலை ஏதாச்சும் கிடைச்சுதான்'னு கேட்டார்.''

''எங் கல்யாண வேலையா இருக்கார்னு சொல்ல வேண்டியதுதானே?''

''மூணாவது மனுஷர்கிட்ட இதெல்லாம் சொல்ல முடியுமா?''

''எதெல்லாம்?''

''ச்சீய்...''

சுகன்யா வெட்கப்பட்டாள். மனசுக்குள் குளிர்க் காற்று வீசிற்று.

சீட்டில் உட்கார்ந்து பக்கத்து சீட் கஸ்தூரியிடம் முதலில் அழைப்பிதழ் கொடுத்தாள். கஸ்தூரி ''ஏய்...'' என்று பாங்க் முழுக்கக் கேட்க அலறிக் கை கொடுத்தாள். நிமிஷத்தில் பாங்க் முழுவதும் செய்தி பரவிற்று.

''கங்ராட்ஸ்... கை கொடும்மா.''

பார்த்தசாரதி அவசரமாக டெஸ்கை உள்ளே தள்ளி ஓடி வந்தார். அழைப்பிதழை அவசரமாகப் பிரித்தார். கரு விழி அங்கும் இங்கும் நகர வாசித்தவர் தீ சுட்ட மாதிரி நிமிர்ந்து பார்த்தார். ஒன்றுமே பேசாமல் வெறுமனே கஷ்டப்பட்டுச் சிரித்து விட்டு நகர்ந்தார். கூட்டம் பொதுவாகக் கலைய, லெட்ஜர் சரி பார்க்க, சுகன்யா அவர் அறைக்குப் போனாள்.

''ஸார்... இந்த லெட்ஜர்ல...''

''சுகன்யா... நான் மூணாவது மனுஷன் தான். ஆனா வயசுல உன் தகப்பனுக்குச்



"பிரின்சிபால் ஐயா...! எம்புள்ளைக்கு ஒரு காலேஜ் சீட் தர்மம் போடுங்க எசமான்...!"

சமானம். அந்த உரிமைல நான் ஒண்ணு கேக்கலாமா?"

"என்ன ஸார்?"

"சுந்தருக்கு வேலை இல்லைன்னு தானே நீ வேறே யாரையோ கல்யாணம் பண்ணிக்கறே?"

"ஸார்...!"

கடவுளே! சுந்தர் சொன்னது நிஜமா? வாய் கிழியப் பேசினேனே. அது நிஜமில்லாததா?

"அவனுக்கு எப்படியிருக்கும்னு யோசி சுகன்யா.

"நாங்க ரெண்டு பேரும் ஸ்நேகமா பழகினோம்ஸார். கல்யாணம் பண்ணிக்கணும்னு நாங்க நினைச்சதில்லை."

"ஏம்மா பொய் சொல்றே. நீ அவனை விரும்பலே?"

"விரும்பினேன் ஸார். ஆனா கல்யாணம் பண்ணிக்க நினைக்கலை."

"அசிங்கமா இருக்குது சுகன்யா நீ சொல்றது. லவ் என்ன விளையாட்டா? இன்னிக்குக் கைக் கோத்துட்டுப் பட்டுனு நாளைக்கு விட்டுட?"

சுகன்யா லெட்ஜரை மேஜை மேல் வைத்தாள். நெஞ்சுக்குள் தாமிரபரணியாய் அலை புரண்டது. பார்த்தசாரதி எதிரில் இருந்த நாற்காலியை இழுத்துப் போட்டாள். "நான் உக்காந்துக்கலாமா ஸார்" என்று கேட்டுப் பதில் எதிர்பார்க்காமல் அவர் முன்னால் உட்கார்ந்தாள்.

"லவ்னா என்ன ஸார்? காதலா? காதல் மட்டும்தானா? அன்பு, நேசம், ஸ்நேகம், பாசம், காதல், கருணை இன்னும் நிறைய... எல்லாமே லவ் தானே ஸார். சகலமும் லவ் தான். ராத்திரி முழுக்கக் கை வலிக்க சுந்தர் கல்யாண கார்டுல பேர் எழுதினது லவ்தான். சாயங்காலம் பஸ்ல கூட்டத்துல அடிபட்டு வருவானேன்னு பங்சர் ஒட்டி முகமுகனு சைக்கிள் ஓட்டி வந்து கொடுத்தது லவ் தான் ஸார். ஐ லவ் சுந்தர். ஐ லவ் மை வுட்-பி. ரெண்டுமே வேற வேற லவ். நம்ம நாட்டுல அம்மா அப்பாட்ட 'ஐ லவ் யூ' சொல்ற மகளோ மகனோ குறைச்சல் ஸார். சகலரையும் லவ் பண்றது குறைச்சல். நான் எல்லாரையும் நேசிக்கறேன். சுந்தரை ரொம்ப நேசிக்கிறேன் - புரியுதா ஸார்?... அந்த ரீதியிலே சொன்னா, இவ்வளவு பொறுமையா என் உணர்ச்சிகளை உங்களுக்கு விளக்கறேனே. ஏன்...? ஐ லவ் யூ...."

சுகன்யா மேல் மூச்சு வாங்கப் பேசினாள். பார்த்தசாரதிக்கு லேசாகப் புரிந்தது. 'கடவுளே! இந்தப் பெண்ணின் கணவர் இவளுக்குத்தகுதியானவரா இருக்கணுமே' என்று வேண்டிக் கொண்டார்.

This Child has Everything

This child knows the pain of hunger, the cold of loneliness and the fear of being unwanted. This child can have all the love and care it needs to feel wanted at UDAVUM KARANGAL.

UDAVUM KARANGAL is a secular organisation aligned to neither sect nor creed or receiving aid from the Government or Abroad. We depend on the general Public– AND THAT MEANS YOU. Remember no donation is too small – It's the love that goes with it that matters.

Our children need Food, Medicine, Clothing and Education.

You can help us in more ways than one. Write to us and tell us about yourself. We need volunteers too.



DONATIONS ARE EXEMPTED UNDER SEC 80 (G) OF THE INCOME-TAX ACT.

UDAVUM KARANGAL (REGD)

(CENTRE FOR HUMAN SERVICES)

460, NSK NAGAR
MADRAS - 600 106 PHONE : 426141.


மம்முச்சி வேணாம்!..
ஐஸ் க்ரீம் சாப்பிடலாம்! எங்கிட்ட
வா கண்ணு!
பஞ்சாயத்துகள்
நிதி உதவி
மாநில அரசுகள்
மத்திய அரசு
அவசர நிலை பிரகடனம்
தெலுங்கு கங்கை திட்டத்துலெ
ராமாராவ் தமிழ் நாட்டுக்குத் துரோகம்
பண்றார்னு சொன்னீங்க. தண்ணி கொடுக்க
ஒப்பந்தம் ஆயிடுச்சி. இப்ப ராமராவ் ஆந்திரர்
களுக்குத் துரோகம் பண்றார்னு
சொல்லுவாங்களோன்!



கல்கி

1989 ஜூலை 2
மலர் 47 இதழ் 48
சுக்ல ஆனி 18



இலங்கையில் நெருக்கடி நிலை

இலங்கையில் தற்போது நிலவும் பிரச்னைகளைச் சமாளிப்பதற்காகப் பிரேமதாசா கையாண்ட அணுகுமுறைகள் படுதோல்வி அடைந்திருக்கின்றன. இதனை, அங்கு மீண்டும் நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதே நன்கு உணர்த்தும்.

தமிழர்களின் உரிமைகளை மதித்து, விட்டுக் கொடுப்பதை விரும்பாத ஜே. வி. பி. இயக்கத்தின் வன்முறைப் போக்கு,பிரேமதாசாவுக்குப் பெரிய தலைவலி அளித்து வருகிறது. சிங்களப் பெரும்பான்மையினரை அவரால் பகைத்துக் கொள்ள முடியவில்லை. அவர்களைச் சமாதானப்படுத்தும் நோக்கில் இந்திய அரசை ஓரம் கட்டி, விடுதலைப் புலிகளைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தார். இந்தியா அமைதிப் படையை வாபஸ் பெற வேண்டும் என்று அறிக்கைவிட்டு,காலக் கெடுவும் நிர்ணயித்தார். பிரேமதாசாவின் இந்த நடவடிக்கைகள் கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதை ஆயிற்று. இந்திய அரசை ஓரம் கட்டியதால் நம்மவருக்கு வருத்தம்; உள்ளுக்குள் குமுறும் கோபம். அமைதிப் படை, பிரேமதாசாவின் உத்தரவைச் சிரமேற்கொண்டு திரும்பி விடுவதாக இல்லை! 'ஆகட்டும் பார்க்கலாம்; ஒப்பந்தத்தின் இதர அம்சங்களின் கதி என்ன? அதைக் கொஞ்சம் கவனியுங்கள்' என்கிறது இந்திய அரசு. விடுதலைப் புலிகளுடன் நடக்கும் பேச்சு வார்த்தைகளிலோ இம்மி அளவும் முன்னேற்றமில்லை. எதையுமே புலிகள் விட்டுக் கொடுக்கவில்லை என்பதோடு, இந்திய அரசு மீதும் அமைதிப் படை மீதும் அவதூறுகளைச் சுமத்த இந்தச் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். புலிகள் தங்கள் போர் நிலைகளை ஸ்திரப்படுத்திக் கொள்ள வாய்ப்பும் அவகாசமும் தந்ததாயிற்று. யாரைத் திருப்திப்படுத்தப் பிரேமதாசா இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டாரோ, அந்த ஜே. வி. பி. இயக்கத்தினரும் சிறிதளவும் மகிழ்ச்சி அடையவில்லை. மாறாக, வேலை நிறுத்தம், பந்த், படுகொலைகள் எல்லாம் அதிகரிக்க, கடைசியில் வேறு வழியின்றி பிரேமதாசா தம்மால் நீக்கப்பட்ட நெருக்கடி நிலைச் சட்டத்தைத் தாமே மீண்டும் அமல் படுத்தியிருக்கிறார்.

பிரேமதாசாவின் ராஜதந்திரம்தான் பலிக்கவில்லை, இந்தியாவின் சாணக்கியமாவது வெற்றி பெற்றதா என்றால் அதுவும் பூஜ்யம்தான்! அமைதிப் படைக்காக மக்களின் வரிப் பணம் பல நூறு கோடி செலவாகிறது; நமது வீரர்கள் பலர் உயிர்த் தியாகம் செய்ய நேர்கிறது; படுகாயமடைந்து துன்பப்படவும் நேர்கிறது. இதையெல்லாம் நாம் தாங்கிக் கொள்வோம் — நற்பலன் விளையுமானால். ஆனால் நடந்திருப்பது எதுவும் மகிழ்ச்சி அளிப்பதாக இல்லையே! அமைதி காக்கச் சென்ற படை, விடுதலைப் புலிகளுடன் ஆயுதம் ஏந்திய போராட்டம் நடத்த வேண்டியிருந்தது. அதையும் சட்டுப்புட்டென்று முடித்துக் கொண்டு திரும்ப முடியவில்லை. பகைவன் என்று கருதவும் முடியாத, நண்பன் என்று நினைக்கவும் முடியாத இரண்டுங்கெட்டான் நிலை. போதாக்குறைக்கு நம் ராணுவத்தினர் சிலர் அத்துமீறி நடந்து கொண்டு விட்டதாக 'அம்னெஸ்டி அறிக்கை' அவப்பெயரைத் தேடித் தந்திருக்கிறது. பிரேமதாசா, 'வாபஸ் வாங்குங்கள்' என்று சொன்ன பிறகும் தொடர்ந்து நமது ராணுவம் ஈழத்தில் இருப்பது, 'அமைதிப் படை அல்ல; ஆக்கிரமிப்புப் படை' என்று வர்ணிக்கப்பட வழிவகுத்ததாகும்.

இவ்வாறு இரு அரசாங்கத் தலைவர்களுமே ராஜதந்திர வறட்சியில் ஒருவருக்கொருவர் சளைத்தவரில்லை என்று நிரூபித்திருக்கின்றனர்.

பிரச்னையின் ஆணி வேர், விடுதலைப் புலிகளின் தனிச் சுதந்திர ஈழ நாடு கோரிக்கையும் அதனை அடைய ஆயுதமேந்திய அவர்களது போராட்டமும்தான். இந்தக் கொள்கையை அவர்கள் கைவிட்டு, ஜனநாயக ரீதியில் செயல்பட்டு மக்களின் ஆதரவைப் பெற்றுப் பதவிக்கு வருவது; தமிழர்களின் உரிமைக்காகச் சாத்துவிக ரீதியில் போராடுவது என்று தீர்மானித்து விட்டால் எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்து போகும். அமைதிப் படைக்கு அப்புறம் வேலையில்லை. இந்திய ராணுவம் திரும்பி விட்டால் ஜே. வி. பி. போன்ற சிங்களத் தீவிரவாதிகளின் இயக்கத்துக்கு அவசியமே இல்லாமல் போய்விடும். மக்களின் ஆதரவு இவர்களுக்குக் கிட்டாத போது அடங்கிப் போவார்கள். அடங்கவில்லையெனில் அடக்குவது அந்நிலையில் எளிதாகிப் போகும்.

ஆக, இலங்கை அரசும், இந்திய அரசும் ஒத்துழைத்து விடுதலைப் புலிகளிடம் ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்துவதையே முக்கிய குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். இதற்காகக் கௌரவம் பாராது யாருடைய உதவியையும் நாடலாம்; என்ன விலையையும் தரலாம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

வாசகர் பங்கு — I

மாணவப் பருவம்: மங்காத இன்பம்!

பிறந்த நாள் பரிசு!

OO என் பிறந்த நாளன்று போஸ்டில் ஒரு விலையுயர்ந்த பாண்ட் — ஷர்ட் வந்து சேர்ந்தது. என் பெற்றோருக்கு ஒரே ஆச்சரியம். பார்வையற்ற என் நண்பர் இளங்கோதான் அதை அனுப்பியிருந்தார்! நான் பிளஸ்டூ படிக்கையில், தினமும் மாலையில் இரண்டு மணி நேரம் அவருக்கு எம். ஏ. பாடங்கள் படித்துக் காட்டி உதவினேன். பரீட்சை முடிந்து தில்லிக்குப் போகுமுன் அவர் என் பிறந்தநாளைப் பேச்சுவாக்கில் கேட்டுத் தெரிந்து கொண்டு போனார். எதற்கு என்று நான் யோசிக்கவுமில்லை. இப்போது நன்றியறிதலுடன் பரிசு அனுப்பியிருந்தார். நான் நெகிழ்ந்து போனேன்.

சென்னை — 75, எஸ். கணேசன்.

துணைவியை நாடு!

OO கல்லூரியில் பாடம் நடத்திக் கொண்டிருந்த தமிழாசிரியர் ஒரு குறிப்பிட்ட செய்யுளுக்குத் துணைவனில் (guide) விளக்கம் உள்ளது, நீங்களே படித்துக் கொள்ளுங்கள்' என்றார். ஒரு மாணவன், ''நாங்கள் துணைவியைத்தான் நாடுவது வழக்கம்'' என்று குறும்புத்தனமாகச் சொல்ல, அவருக்கு வந்ததே கோபம்! பிறகு அம்மாணவன் எழுந்து விளக்கினார்:

'''கண்ணா,' 'கோனார்' துணைவன்கள் எனில் 'ப்ரியா'வைத் துணைவி என்று சொல்வதுதானே பொருத்தம்?''

சிரிப்பொலி அடங்க ஐந்து நிமிடங்களாயிற்று.

மதுரை — 2, சுகா ராஜ்.



படிப்புச் செலவுக்குச் சம்பாதி

OO காலையில் ஒரு மணி நேரம் பேப்பர் போடுவதன் மூலமும் மாலையில் ஒரு மணி நேரம் பேப்பர் கவர்கள் தயார் செய்தும் மாதம் சுமார் நூறு ரூபாய் சம்பாதிக்கிறேன். குறைந்த சம்பளத்துக்குக் குழந்தைகளுக்கு டியூஷன் எடுப்பதும் உண்டு. நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த எனக்கு இதில் கிடைக்கும் பணம் கல்லூரிச் செலவுகளுக்கு உதவுகிறது. படிப்புச் செலவுக்குப் பெற்றோரைக் கஷ்டப்படுத்துவதில்லை!

தூத்துக்குடி. ஜி. பி. ஆறுமுகம்.

எனக்கு மட்டும் ஏன்...?

OO தமிழ்ப் பாடம் நடந்து கொண்டிருக்கையில் வகுப்பே அமைதியாயிருக்க ஒரு மாணவன் மட்டும் அடிக்கடி 'கமெண்ட்' அடித்துக் கொண்டிருந்தான். பேராசிரியர் ''நீ மட்டும் ஏன் தொந்தரவு கொடுக்கிறாய்?'' என்று தட்டிக் கேட்டபோது, ''என்ன செய்யட்டும் சார்! இந்த வகுப்பிலே எனக்கு மட்டும் இன்னும் தூக்கம் வர மாட்டேங்குது!'' என்றான். வகுப்பு கரவொலியால் நிறைந்து போனது.

மன்னார்குடி, ப. ராஜகோபாலன்.

நூதன ராகிங்

OO சென்னை கிறித்துவக் கல்லூரியில் ராகிங் முறை நூதனமானது. விரிந்து பரந்த கல்லூரி வளாகத்தில் சுமார் ஐந்நூறு வகை மரங்கள் உண்டு. அவற்றின் தாவரவியல் பெயர்கள் பலகைகளில் எழுதப்பட்டிருக்கும். புது மாணவர்கள் நூறு பெயர்களையாவது பட்டியலிட்டுக் கொண்டு வர வேண்டும்!

செங்கல்பட்டு, த. அருள்சிவபாலன்.

மூட்டை தூக்கிய ராஜராஜன்

OO பள்ளியில் படித்த நாட்களிலேயே மற்ற மாணவர்களினின்று வேறுபட்டு நின்றான் என் நண்பன். வறட்டு கௌரவத்தையும் போலித்தனத்தையும் சாடுவான். உரக்கடையில் மூட்டை தூக்கிச் சம்பாதித்துத் தன் கல்விச் செலவுகளைத் தானே பார்த்துக் கொண்டான். கடந்த ஆண்டு பி. காம் பட்டத்தைத் தங்க மெடலுடன் பெற்றான் அவன். இப்போது பூம்புகார் பேரவைக் கல்லூரியில் எம். காம். படித்து வருகிறான் ராஜராஜன்!

ஓசூர், வி. பாஸ்கரன்.



வென்றேன் ஆம்லெட்!

OO சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்த புதிது. 'ராகிங்' கடுமை என்று எச்சரித்திருந்தார்கள். சீனியர் மாணவர்கள், ஹாஸ்டலில் என் அறைக்குப் படை எடுத்து வந்தனர்.

"உனக்கு என்ன சாப்பிடப் பிடிக்கும்?" என்றனர் சீனியர்கள்.

"ஆம்லெட்" என்றேன்.

முதலில் ஆம்லெட் வேண்டும் என்று அழுது அடம்பிடிப்பது போல் என்னை நடிக்கச் செய்தனர்.

பிறகு, ஒரு பாத்ரூமில் சோப் தேய்த்துக் கொண்டு மறு கோடியில் இருந்த இன்னொரு பாத்ரூமுக்குப் போய்க் குளிக்க வேண்டும் (துணியில்லாமல்தான்!) என்றனர். அவ்வாறு செய்யாவிட்டால் நான் எல்லோருக்கும் ஆம்லெட் வாங்கித் தரவேண்டும்; செய்தால் அவர்கள் எனக்கு வாங்கித் தருவார்கள். பார்த்தேன்... 'நூறு ரூபாய் தண்டச் செலவாகும். இங்கோ பெண்கள் இல்லை... குளித்து விடுவோம்' என்று அவர்கள் சொன்னபடியே செய்துவிட்டேன்!

சீனியர்கள் கைகுலுக்கிப் பாராட்டியதுடன் மாலை ஆம்லெட்டும் வாங்கித் தந்தனர்!

சிறுமுகை, 'மதுரை வீரன்.'

காதல் நோய்க்கு மருந்து

OO பதினேழாவது வயதில் கல்லூரியில் அடியெடுத்து வைத்த போது எனக்குக் காதலைப் பற்றிய சிந்தனையே இல்லை. இரண்டாவது செமஸ்டர் வருவதற்குள் சக மாணவிகளுடன் ஆண்கள் பற்றிப் பேசி, ஒருத்தரை ஒருத்தர் கேலி செய்து கொள்ளும் அளவுக்கு 'முன்னேற்றம்.' என் வகுப்பில் படித்த முஸ்லிம் மாணவர் ஒருவரின் அமைதியும் அடக்கமும் என்னைக் கவர, அவரைப் பற்றி நான் குறிப்பிட, தோழிகள் என்னை அவருடன் இணைத்துக் கேலி பேச, என்னுள்ளும் ஒரு மாறுதல் ஏற்பட ஆரம்பித்தது. அம்மாணவன் வகுப்புக்கு வராவிட்டால் எனக்கு நிலை கொள்ளாது. அவன் காலணிச் சப்தம் தனியாக அடையாளம் தெரியும். அந்தச் சப்தம் கேட்டதும் தான் நிம்மதி. தினமும் அவனைப் பார்த்தே ஆக வேண்டும் என்று ஆகிவிட்டது. தோழிகள் வேறு தூபம் போட்டனர். படிப்பில் மனம் பதியாமல் போயிற்று.

Study leave வந்தது. தனிமையில் சிந்தித்த நான் விழித்துக் கொண்டேன். இரண்டு சகோதரிகளையுடைய இந்துப் பெண்ணான நான் ஒரு முஸ்லிம் இளைஞரைக் கல்யாணம் செய்து கொள்வது ஆகாயத்தில் நீர்ப் பாலம் போடுவதற்குச் சமம். பெற்றோர் வேறு உடைந்து போவார்களே!

காதல் நோய்க்கு மருந்து தேடினேன். இறையுணர்வு கலந்த வைராக்கியமே சரியான மருந்தெனக் கண்டேன். 'இராமகிருஷ்ணரின் உபதேச மஞ்சரி' 'விவேகானந்தர் அருளுரை' — இவை நான் படித்து மன வலிமை பெற்ற நூல்கள்.

இப்போது டிகிரி முடித்து விட்டு எம்.சி.ஏ. படிக்கிறேன். கோ—எட் கல்லூரிதான். இப்போது ஆண்களுடன் பழகினாலும் மனத்தில் சஞ்சலம் இல்லை.

அதற்காகக் காதலைக் கண்டு பயந்து ஒதுங்கவுமில்லை. படிப்பு முடிந்து வேலை கிடைத்ததும் காதலித்துத்தான் கல்யாணம் செய்து கொள்வேன். எனவே 1992—93 இல் 25 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களின் அம்மாக்களே! உங்களில் ஒருவரது வரதட்சணை வாங்கிக் கொட்டிக் கொள்ளும் ஆசையில் மண்ணைப் போட நான் ஒருத்தி இருக்கிறேன்!

தேவகோட்டை, எம். சாவித்ரி.



ஸ்வீட் கமெண்ட்!

OO எனது நண்பர் குலசேகரபாண்டியன் கமெண்ட் அடிப்பதில் 'கிங்'. கடைசி வருடம் படித்து முடிக்கையில், கல்லூரி வாசலில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த மாணவிகளிடம் சென்று, தமது ஆட்டோகிராப் கல்வெட்டில் அவர்களது 'ஸ்வீட் கமெண்டை'ப் பதிக்கச் சொன்னார். எல்லாப் பெண்களும் தயங்கிய போது ஒருத்தி மட்டும் முன் வந்து,

"ஒவ்வொரு உற்சாக 'ஹலோ'வுக்குப் பின்னும்
ஒரு சோக 'குட்பை' உண்டு"

என்று எழுதினாள். மனத்தை இதமாக, சோகமாகக் கவ்விப் பிடித்தன அவ் வரிகள்.

திருவிடைமருதூர், எஸ். நாதன்பாபு.

இளைஞர் காங்கிரஸ் இனியன்:



தாயை எதிர்க்கவும் தயங்காதவர்!

இனியன் சம்பத்தை மத்திய சிறையில் சந்தித்தோம். தோளில் துண்டைப் போட்டுக் கொண்டு அங்குமிங்கும் துறுதுறுப்பாக ஓடிக் கொண்டிருந்தார். இளைஞர் காங்கிரஸ் தலைவராகப் பொறுப்பேற்ற சில நாட்களுக்குள்ளாகவே மறியலில் கைதாகிச் சிறை புகுந்திருக்கும் இவருக்கு இது முதல் அனுபவமல்ல; ஏழாவது சிறைவாசம்!

முப்பத்திநாலு வயதாகும் இனியன் சம்பத்துக்கு மாணவப் பருவ அனுபவம் ஏதும் உண்டா? — இது மாணவர் மலரா யிற்றே என்பதால் கேட்டோம்!

''ஸெயிண்ட் பால் பள்ளியில் படிக்கும் போது 'நான் விரும்பும் தலைவர்' என்ற தலைப்பிலே பேசச் சொன்னார்கள். அரசியலில் சிக்க விரும்பாத மாணவர்கள் அனைவருமே மறைந்த தலைவர்களைப் பற்றித் தான் பேசினார்கள். நான் மட்டும் துணிந்து அப்போது காமராஜர் பற்றிப் பேசினேன். விவரமறிந்த போது காமராஜர் தட்டிக் கொடுத்தார். அது எனக்கு எவ்வளவு உற்சாகமாக இருந்தது தெரியுமா?''

பள்ளிப் படிப்பு முடிந்த பிறகு, புதுக் கல்லூரியிலும், பின்னர் வைஷ்ணவா கல்லூரியிலும் படித்தவர் இனியன். ''தாயார் சுலோசனா, அ. தி. மு. க.; சகோதரர் இளங்கோவன், தமிழக முன்னேற்ற முன்னணி; நீங்கள் காங்கிரஸ் — இப்படிக் குடும்பத்தில் ஒவ்வொருவரும் ஒரு கட்சியில் இருப்பது பிரச்னையாக இல்லையா?''

''ஒரு பிரச்னையும் கிடையாது. குடும்பம் வேறு; அவரவர் அரசியல் வேறு. 1980 — இல் இன்றைய ஜனாதிபதி வேங்கடராமனை ஆதரித்துத் தேர்தல் பிரசாரம் செய்தவன் நான். அவரை எதிர்த்து நின்றவர் என் தாயார்!''

''அப்பா ஈ. வி. கே. சம்பத், உங்களை அரசியலுக்கு ஊக்குவித்திருக்கிறாரா?''

''ஊக்குவித்ததும் கிடையாது; தடை போட்டதும் இல்லை. ஆனால் தவறு செய்தால் தலையில் 'நறுக்'கென்று குட்டி விடுவார்!''

டி. வி. யில் செய்தி வாசித்துக் கொண்டிருந்த இனியனுக்குக் கடந்த ஆறு மாதமாக வாய்ப்புத் தரப்படுவதில்லை.

''ஏன்?''

''கேட்டுச் சொல்லுங்களேன்'' என்று தோசையைத் திருப்பிப் போட்டுச் சிரிக்கிறார்!

''காங்கிரஸுக்குள் உட்பூசல்...?''

''இந்த கோஷ்டி விவகாரமெல்லாம் எனக்குப் பிடிக்காது. வெளியே வந்தால் மறுபடி பரபரப்பாகக் கட்சிப் பணிகளைச் செய்து கொண்டிருப்பேன். தொண்டாற்றுவதில் கவனமாயிருந்தால் கோஷ்டிப் பூசல்களுக்கு யாருக்குமே நேரமே இராது'' என்கிறார், வாழப்பாடியின் பலத்த ஆதரவுடன் இ. காங்கிரஸ் தலைவராக வந்திருக்கும் இனியன்.

''எப்போது கல்யாணம்?''

''சமுதாயத் தொண்டுக்குக் கல்யாணம் சரிப்பட்டு வராது. குடும்பப் பிரச்னையே பெரிய பிரச்னையாகிவிடும்!''

இனியன் இவ்வாறு சொன்னாலும் தாயார் சுலோசனா வேறு திட்டத்தில் இருக்கிறார்:

''நாங்கள் கல்யாணம் செய்து கொண்டு அரசியல், மற்றும் சமுதாயப் பணிகளைச் செய்யவில்லையா? இனியன் அப்படித்தான் சொல்லுவான். நாங்கள் அவனுக்கு நல்ல பெண்ணாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்!''

— ப்ரியன்.

படம்: சுபா

"அந்தப்புரத்தில் அடைந்து கிடந்தோம்..."



'ருக்கு காலேஜ்லெ சேர்ந்து படிக்கப் போறாளாமே!'

'யம்மாடி! பொம்மனாட்டி ஆம்பளைங்களோட படிக்கப் போறாளா? கொடுமையடியம்மா.'காலம் கெட்டுப் போச்சு...'

— இப்படி எங்கள் உறவு மொத்தமும் மூக்கின் மேல் விரல் வைத்து ஆச்சரியமாகப் பேசிற்று. அது பத்து வயதுக்கு மேல் பெண்களைப் பள்ளிக்கு அனுப்ப யோசித்த காலம். வெளியூர் கல்லூரிகளில் பெண்களுக்கு இடமே இல்லை. அந்த நேரத்தில்தான் என் தந்தையாருக்கு அப்படியொரு ஆசை வந்தது. என்னைக் கல்லூரிக்கு அனுப்பிப் படிக்க வைக்க வேண்டுமென்று.

முந்தைய காலத்தில் மூடு வண்டியில் கல்லூரிக்குச் சென்று படித்தவர் முத்துலட்சுமி ரெட்டி. வகுப்பறையில் இவர் ஒருவர்தான் மாணவி! மாணவர்களுக்கும் இவருக்கும் நடுவில் ஒரு திரை இருக்குமாம். வகுப்பு முடிந்ததும் இவர் வெளியே சென்றதும் தான் மாணவர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவார்களாம்! இதைக் கேட்கவே எனக்குச் சிலிர்த்தது. அந்த அம்மாவைப் போல் நாமும் படிக்க வேண்டும் என்ற ஆசை.

அந்த நேரம் சென்னை பச்சையப்பன் கல்லூரியில்தான் பெண்களுக்கு இடம் ஒதுக்கியிருந்தார்கள். 1943—ல் பச்சையப்பன் கல்லூரிக்குள் அடி எடுத்து வைத்தேன். நூற்றி ஐம்பது மாணவர்களுக்கு முன்னால் நாங்கள் எட்டு மாணவிகள்! கோழிக் குஞ்சாட்டம் உட்கார்ந்திருப்போம். நான்கைந்து மாணவிகள் மொத்தமாய்ச் சேர்ந்துதான் (குனிந்த தலை நிமிராமல்) கல்லூரிக்குள் நுழைவோம். கூட்டமாய் மாணவர்கள் இருந்தால் தலையைக் கூட நீட்ட மாட்டோம். பிரின்ஸ்பால் அறைக்குப் பக்கத்திலே ஓர் அறை. அதுதான் எங்களின் 'அந்தப்புரம்'. வகுப்பு இல்லாத நேரங்களில் அங்குதான் அடைந்து கிடப்போம். வகுப்பு நேரத்தில் மட்டும் கூப்பிடுவார்கள். குடுகுடுவென்று ஓடிப் போய் முன் வரிசையில் உட்கார்ந்து கொள்வோம். ஆசிரியர்கள் மாணவிகள் பக்கம் திரும்பவே மாட்டார்கள். எங்களுக்கும் ஆசிரியரையோ சக மாணவர்களையோ நேருக்கு நேர் பார்த்து விட்டால் கூச்சம் பிடுங்கித் தின்னும்! விளையாட்டிலோ கல்லூரி விழாக்களிலோ பெண்கள் கலந்து கொள்வதில்லை.



ருக்மிணி


இதில் என்ன ஆச்சரியம் என்றால் எங்கள் கூடப் படித்த மாணவர்களுடன் நாங்கள் யாருமே படிப்பு முடிந்து வெளி வரும் வரையிலும் ஒரு வார்த்தை கூடப் பேசினதே இல்லை! ஆனால் எல்லா மாணவர்களும் மிகவும் கண்ணியமாகவே நடந்து கொள்வார்கள். இப்போது மாதிரி விசில் அடிச்சான்.. லெட்டர் கொடுத்தான். ரகளை பண்ணினான் என்று மருந்துக்குக் கூட நடந்ததாகத் தெரியவில்லை.

ஸ்நேகிதிகளை வீட்டுக்குக் கூப்பிட்டு வருவது. வீதியில் சந்திக்க நேர்ந்தால் நின்று பேசுவது என்ற வழக்கம் கூட அப்போது எங்களிடம் இருந்ததில்லை. ஆனால் காலத்தோடு சில மாறுதல்களும் நிகழ்த்தான் செய்தன — பி.ஏ. (ஆனர்ஸ்) இறுதி ஆண்டு படிக்கும் போது ஒரு குரூப் போட்டோ எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கும் வந்ததே... அதைத்தான் சொல்கிறேன்! அது அப்போதைக்கு மிகப் பெரிய விஷயம்.

இன்னும் அந்தப் போட்டோ என்னிடம் உண்டு. நான் சென்னை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் பேராசிரியையாக இருந்த போது அடிக்கடி அந்தப் போட்டோவை எடுத்துப் பார்த்துக் கொள்வேன். என் மாணவிகளோடு அந்தப் போட்டோவை ஒப்பிட்டுப் பார்த்தால் காலத்தின் மிகப் பெரிய மாறுதல்... தெரிகின்றது.

செல்வி ருக்மிணி கூறக் கேட்டு

எழுதியவர்: **சுப்பு**



போலீஸ், அரசியல் வட்டம் என்று எல்லோர் காதுக்கும் போன செய்திதான்... இருப்பினும் கறிவேப்பிலையை அறுத்து விற்பது போல் சர்வசாதாரணமாக கஞ்சாவைப் பயிர் செய்து விற்று வருகிறார்கள்.

சத்தியா மொட்டை மாடியிலிருந்து அந்த மலைத் தொடரைப் பார்த்தான். மிக அட்டகாசமாகக் கைகோத்துக் கொண்டு சரிந்து தூங்கிக் கொண்டிருந்தது. நாளை அதோ அந்த இடத்துக்குத்தான் போகப் போகின்றோம் என்ற நினைப்பு வர மனசு துள்ளிக் குதித்தது.

''என்ன சத்தியா இப்படி மொட்டை மாடியிலே வந்து உட்கார்ந்துட்டே? நான் உன்னை எங்கெல்லாம் தேடுறதாம்?''

''என்னாச்சு செல்வா?''

''நம்ம விஷயம் பெரிசாயிடுச்சு! ரத்தினத்தையும் நாகுவையும் போலீஸ் கூப்பிட்டுப் போயிடுச்சு. நான் போயி இன்ஸ்பெக்டரைப் பார்த்தேன். உன்னை அழைச்சிண்டு வரச் சொன்னார்.''

''இது என்னடா எழவு, புதுசா?''

''தெரியலைப்பா. எனக்கென்னவோ நாம பண்ற காரியம் சரியாத் தெரியலை. எவனோ மலையில் கஞ்சா வளர்த்தா நமக்கென்ன? கத்தரிக்கா வளர்த்தால் நமக்கென்னன்னு இருந்திருக்கலாம். இல்லைன்னா, பேசாமல் முஷ்டி மடக்கி, நடு ரோட்டுலெ கோஷம் போட்டுட்டு வீட்டுக்கு வந்திருக்கலாம். அதை வுட்டுட்டு நாமளே மலை உச்சிக்குப் போயி அந்தக் கஞ்சாச் செடிங்களை அழிக்கணும்னா சும்மா விடுவான்களா? இப்பவே பத்துத் தடவை போலீஸ் எங்க வூட்டுக்கு வந்திட்டுப் போயிடுச்சு... எங்க அப்பா விழுந்து குதிக்கிறார்.''

''உனக்குப் பிடிக்கலைன்னா பேசாம ஒதுங்கிக்க செல்வா. நம்ம காலேஜ் ஸ்டுடெண்ட்ஸ் பாதிப் பேர் மலையேறுவதற்குத் துடிச்சுட்டு இருக்கான். பாரேன் அந்தக் கஞ்சாத் தோட்டம் தூள் பறக்குதா இல்லையான்னு... ரோட்டுலெ கோஷம் போட்டா போடான்னுடுவான். நம்ம பலம் என்னனு காட்டணும்..''

சத்தியாவின் போக்கு செல்வாவிற்குப் பயம் கொடுத்தாலும் ஒரு கல்லூரி முழுதுமே இந்தச் செயலில் ஈடுபடுகிறது என்பது கொஞ்சம் தென்பைக் கொடுத்தது. அந்த மேற்குத் தொடர்ச்சி மலையின் உச்சியில் மரங்களை அழித்து விட்டு ஏக்கர் கணக்கில் போதைப் பொருளான கஞ்சாச் செடிகளை நடவு செய்து விற்பனைக்கு அனுப்பி வருகின்றனர். இது எல்லோருக்கும் தெரியும். போலீஸ், அரசியல் வட்டம் என்று எல்லோர் காதுக்கும் போன செய்திதான். இருப்பினும் கறிவேப்பிலையை அறுத்து விற்பது போல சர்வ சாதாரணமாக விற்பனை செய்து வருகிறார்கள். யாருமே கண்டு கொள்வதில்லை!

மம்சை ராஜா என்பவர் பத்திரிகையில் இதைப் பெரிசாய் எழுதினார். அதைப் படித்ததும்தான் சத்தியா சூடானான். மாணவர்களுக்கும் சமூகப் பொறுப்பு இருக்கிறது என்று திரட்டி நின்றான். பல வழிகளில் போராடிப் பார்த்தான். பயன் கிடைக்கவில்லை. எனவேதான் நேரடித் தாக்குதலுக்கு ஆள் திரண்டு நின்று விட்டார்கள். விடிவதற்

விடியும் வரை தொடரும்...

குத்தான் அந்த ஊரே காத்துக் கொண்டிருந்தது.

வாசலில் போலீஸ் ஜீப் உறுமிக் கொண்டு வந்து நின்றது. சத்தியாவும் செல்வராஜுவும் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தார்கள். ஸ்டேஷனில் போய்ப் பேசலாம் என்று போலீஸ் இருவரையும் அள்ளிக் கொண்டு போயிற்று. ஸ்டேஷனில் பத்துப் பதினைந்து மாணவர்கள் இருந்தார்கள். எல்லோரையும் போலீஸ் வீடு தேடிப் போய் அழைத்து வந்திருக்கின்றது.

''டியர் பாய்ஸ். உங்களோட இந்த நல்ல முயற்சியினைப் பாராட்டுகின்றேன். பட் நானும் உங்களை மாதிரி காலேஜ் வாழ்க்கையைக் கடந்து வந்தவன்தான். ஸோ உங்களோட தீவிரத்தைப் புரிஞ்சுக்க முடிகிறது. திடுமென இப்படி மலையேறிக் கஞ்சாச் செடிகளை அழிக்கணும்னு நீங்க கிளம்பினா அது சில பலமான எதிர் விளைவுகளை உண்டு பண்ணும். கொஞ்சம் டைம் கொடுங்க. நானும் அபிஷியலா என்ன பண்ண முடியும்னு பார்க்கிறேன். அடுத்த வாரம் வரை பொறுங்க. நல்லா திட்டமிட்டு, உங்களோட உதவியோட போலீஸ் கஞ்சா தோட்டம் அழிப்புப் பணியிலே ஈடுபடும்...'' உருளை மீசையை வருடிக் கொண்டே இன்ஸ்பெக்டர் ராமதுரை பேசினார்.

மாணவர்கள் யாருக்குமே இதில் உடன்பாடில்லை. ''நோ... நோ... சார்.. நாளைக்குத் திட்டமிட்டபடி மலையேறுகின்றோம். முடிந்தால் போலீஸ் வரட்டும். இல்லையா எதுவானாலும் நாங்க தாங்கிக்கிறோம்.'' இள ரத்தம் முறுக்கி நின்றது.

''மிஸ்டர் சத்தியா நான் சொல்லுவதை நல்லாப் புரிஞ்சுக்குங்க. வேகம் இருக்க வேண்டியதுதான். அதே சமயம் விவேகமாகவும் செயல்படணும். இந்த விஷயத்துல நான் உங்களோட முழுசா ஒத்துழைப்பேன். ப்ளீஸ்! நம்புங்க...

''ஸாரிங்க சார்! இதுவரை எத்தனையோ போராட்டங்கள் நடத்தியாச்சு! என்ன ஆக்ஷன் எடுத்தீங்கன்னுதான் தெரியலே! நடு ரோட்டுலே பட்டினி கிடந்து பார்த்தோம். நீ திங்காட்டி எங்களுக்கென்னங்கடான்னு இருந்துட்டீங்க. பஸ் மறிச்சோம் எல்லாரையும் உள்ள அள்ளிப் போட்டுட்டுப் போயிட்டீங்க. ஸாரி இதுலையும் நாங்க ஏமாறத் தயாராக இல்லே சார்...

''ஒரு விஷயத்தை நீங்க எல்லோரும் நல்லாப் புரிஞ்சுக்கணும் தம்பிங்களா! நாளை நீங்க மலையேறுறப்ப உங்க உயிருக்கே ஆபத்து வரலாம். ஸோ முன்னெச்சரிக்கை நடவடிக்கையா உங்களை அரெஸ்ட் பண்ண முடியும். ஆனால் நான் பண்ணலே! ஏன்? உங்களுக்கு இருக்கிற ஃபீலிங்ஸ் எல்லாம் அப்படியே எனக்கும் இந்த விஷயத்துலே இருக்கு. உங்களோட போலீசையும் இன்வால்வ் பண்ணிக்க விரும்புறேன்...''

இன்ஸ்பெக்டர் ராமதுரை நம்பிக்கையூட்டும்படி நிறையப் பேசினார். பின்னிரவு வரையிலும் பேச்சுத் தொடர்ந்தது. ஒரு



மாணவன் "இதெல்லாம் சூட்டோட பண்ணினாத்தான் உண்டு; இல்லைன்னா புஸ்ஸுன்னு போவும்" என்று இடையில் வருத்தப்பட்டான். "அப்படி சூடு ஆறிடுச்சுன்னா இந்தப் போராட்டத்துக்கு அர்த்தமே இல்லை" என்று பதில் பேசினார் இன்ஸ்பெக்டர்.

பொதுவாக இங்கு வருகின்ற இன்ஸ்பெக்டர்கள் எல்லாமே கஞ்சாத் தோட்டத்து முதலாளிகளின் கைக்கூலியாகத்தான் இருப்பார்கள். ராம்துரையைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை. இடையில் அபிஷியலாக என்ன பண்ண வேண்டும் என்பதையும் விளக்கினார். எல்லோரும் மலையேறும் விஷயத்தை ஒருவாரம் தள்ளிப் போடச் சம்மதித்தார்கள்.

சத்தியா வீட்டிற்குப் போக மணி மூன்றாகிவிட்டது. மெல்லியதாகப் பனி இறங்குவது தெரிந்தது. வீட்டில் எல்லா விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன. யாருமே தூங்க வில்லை. சத்தியாவைப் பார்த்ததும் அம்மா அழுதேவிட்டார். அப்பா புருவத்தை உயர்த்திப் பார்த்தார். 'உன்னாலே நாங்க இன்னும் என்னவெல்லாம் அனுபவிக்கணுமோ' என்று சொல்லும் பார்வை. நடுநிசி ஒரு மணிக்குத் தொபு தொபு வென்று சரமாரியாக வீட்டில் கல் எறியப் பட்டிருக்கின்றது. கதவு திறந்து பார்த்தால் "டேபொடியா சத்தியா! நீ மலைக்கு வந்தால் உயிரோடு திரும்ப மாட்டாய்..." — மிரட்டல் கடிதம்! பார்த்ததும் வீடு மொத்தமும் குமுறிற்று. இரவு முழுவதும் தூக்கம் பிடிக்கவில்லை. விடிந்ததும் இன்ஸ்பெக்டரிடம் சொன்னான். அவர் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டு சிந்திக்கலானார். "பரவாயில்லை சார் லீவ் இட்! நம்மை டைவர்ட் பண்ணுவதற்குப் பண்ணினதாக இருக்கலாம்" என்று அந்தப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்தான் சத்தியா. ஆனால் ஏதோ ஒரு தவறு நடக்கப் போவது உறுதி என்று இன்ஸ்பெக்டருக்குப் பட்டது.

இன்ஸ்பெக்டர் ராமதுரை சொன்ன ஒரு வாரக் கெடு முடிந்து விட்டது. நான்கு ஜீப்பில் போலீஸும் இரண்டு லாரி இளைஞர்களும் மலைக்கு ஆயுதங்களுடன் கிளம்பி விட்டார்கள். சென்னையிலிருந்து வந்த பத்திரிகையாளரும் உள்ளூர் பத்திரிகையாளர்களும் சில போட்டோ கிராபர்களும் சேர்ந்து கொண்டார்கள். ஜீப்புகளும் லாரிகளும் ஒற்றயடிப் பாதையில் செம்மண் புழுதியைக் கிழித்துக் கொண்டு சென்றன. ஒரு மைல் தொலைவுக்கு முன்பே எல்லாம் நிறுத்தி, இறங்கிக் கொண்டார்கள். இனி வண்டி செல்ல முடியாது. நடந்தார்கள். புழுதி கிளம்ப அவர்கள் நடந்து செல்வதைப் பார்க்க மகாபாரத யுத்தக் காட்சி போலவே தெரிந்தது. செங்குத்தாய் இருக்கும் மலையைப் பார்க்கப் பிரமிப்பாக இருந்தது. பாதம் பிசகினால் பாதாள


Liril
THE FRESHNESS SOAP
Liril
கிளுகிளு பரவசக் களி:
லிரில் புத்துணர்வுக் குளி!
மனம் குளிரும் எலுமிச்சைப் புத்துணர்ச்சி
லிரில்
புத்துணர்வு சோப்

ஞாபகப்படுத்துகிறோம்:

கலர் டீ.வி. பரிசுத் திட்டம்!

கல்கியின் டீ. வி. வீடியோ பக்கங்களுக்கு உங்கள் அனுபவங்களை எழுதுங்கள். டீ. வி. அல்லது வீடியோ தொடர்பாக அவை இருக்க வேண்டும்; ரத்தினச் சுருக்கமாய் அமைய வேண்டும்; வாய்விட்டுச் சிரிக்க வைக்க வேண்டும். விமர்சனங்களும் எழுதலாம்.

நீங்கள் அனுப்பும் துணுக்கு அல்லது விமர்சனத்துக்கு மேற்புறம், மிக அண்மையில் வெளியான கல்கி இதழின் தலையங்கப் பக்கத்திலுள்ள தேதிப் பகுதியான மூன்று வரிகளை மட்டும் கத்தரித்து ஒட்டி அனுப்புங்கள்.

பிரசுரமானால் பரிசு ரூ. 25. பிரசுரமாகும் அனைத்துக்கும் வரிசை எண் தரப்பட்டு, இன்னும் இரண்டு மாதங்கள் சென்று, குலுக்கல் முறையில் ஒருவருக்குக் கலர் டீ. வி. பரிசு!

— ஆசிரியர்.

மரணம் உறுதி. எல்லோரும் குனிந்து பாறைகளில் கை ஊன்றிக் கொண்டே மேலே ஏறினார்கள். மூச்சு இரைக்க மூன்று மணி நேரம் போராடி உச்சியை அடைந்தார்கள்.

ஒருவிதமான ஈர நெடி காற்றிலிருந்து பிரிந்து வந்து நாசியைத் தாக்கிற்று. புதர்களுக்கிடையே பெரிசாகச் சலசலப்புக் கேட்டது. தூரத்தில் மனிதர்கள் ஓடும் சப்தம் கேட்டது. எல்லோரும் ஆயுதங்களை உயர்த்திப் பிடித்துக் கொண்டார்கள். பச்சைப் பசேல் என்று கஞ்சாச் செடிகள் போதையில் காற்றோடு கைகலப்புச் செய்து கொண்டிருந்தன. இன்ஸ்பெக்டர் திட்டத்தின்படி எல்லோரும் இறங்கி, செடிகளை வெட்டி அழிக்கத் துவங்கினார்கள்.

'டுமீல்...' என்று ஒரு சப்தம்! எல்லாம் வெடவெடத்துப் போனார்கள். யாரோ ஒருவன் உச்சிப் பாறையிலிருந்து நாட்டுத் துப்பாக்கியால் சுட்டான். இன்ஸ்பெக்டர் உஷாரானார். போலீஸ் துப்பாக்கிகளைச் சரிசெய்து தோளில் தாங்கிப் பிடித்துக் கொண்டது. சிறிது நேரத்தில் நான்கு திசைகளிலும் நாட்டுத் துப்பாக்கியால் சுடும் சப்தம். அது தோட்டக் காவலர்களின் பாஷையாம்.

அடுத்த கணமே போலீஸ் வானத்தை நோக்கிச் சுட்டது. அது இடி மாதிரி நான்கு புறமும் எதிரொலித்தது. எதிரொலி அடங்க, மகா அமைதி.

மறுநாள் காலையில் எல்லாப் பத்திரிகைகளிலும் இந்தச் செய்தி பரபரப்பாய் வெளியாகியிருந்தது: "ஓர் ஏக்கர் கஞ்சாச் செடிகள் அழிப்பு... மாணவர்களின் துணிகரச் செயல்! போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமதுரையின் தலைமையில் மாணவர்களும்.. பத்திரிகையாளரும் சேர்ந்து அழித்து விட்டார்கள்..." கலெக்டர் உட்படப் பலர் பாராட்டி அறிக்கை விட்டிருந்தார்கள். சத்தியாவுக்கு இதை வாசிக்க வாசிக்க மனசுக்குள் பூ உதிர்ந்தது. கண்களில் கர்வம் மிதந்தது. எதையோ சாதித்து விட்டோம் என்ற நினைப்பு நெஞ்சு நிமிரச் செய்தது. பக்கத்தில் இருந்த பத்திரிகையாளன் மம்சை ராஜாவை இறுக்கிக் கட்டிக் கொண்டான். இருவரும் இத்தனைக்கும் காரணமாய் இருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமதுரைக்கு நன்றி சொல்லக் கிளம்பினார்கள்.

சத்தியாவின் நெஞ்சில் 'பளக்'கென்று ஓர் ஈட்டி பாய்ந்து குத்தி நின்றது! நன்றாகப் பார்த்தான். உள்ளே இன்ஸ்பெக்டர் ராமதுரையும் கஞ்சா தோட்டத்து முதலாளியும் கால் மேல் கால் போட்டுக் கொண்டு சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பது வெளி ஜன்னல் வழியாகத் தெரிந்தது.

"ரொம்ப நன்றிங்க இன்ஸ்பெக்டர். அந்தப் பசங்களைத் தண்ணி காட்டிட்டீங்க. ஒரு வாரம் தள்ளி வந்து கஞ்சாச் செடிகளை அழிச்சுட்டுப் போனது எனக்குச் சௌகர்யம். ஒரு வாரத்துல நல்லதா அறுவடை பண்ணி முடிச்சுட்டேன். இனி அழிச்சு புதுசா விதைக்கணும்னுதான் இருந்தேன். எப்படிடா ரகசியமா ஊர்க்குள்ள இருந்து கூலி ஆள் கூப்பிட்டு ஒரு ஏக்கரையும் அழிக்கிறதுன்னு மலைப்பா இருந்தேன். ரொம்ப சுலபமாக டிபார்ட்மெண்ட் ஆளுங்களையும் காலேஜ் பசங்களையும் வெச்சு அந்த வேலையைச் சுத்தமா முடிச்சுக் கொடுத்துட்டீங்க. கூலி ஆள் கூப்பிட்டிருந்தா மலையேறி வரணும்னு ஜாஸ்தியாக் கேட்பான். அப்படியே இருந்தாலும் இந்த வேலைச் சுத்தம் வராது. ரொம்ப நன்றி... உங்களுக்குச் சேர வேண்டியது வந்து சேர்ந்திருக்கும்னு நினைக்கிறேன். அப்புறம் புரமோஷன் பத்திச் சொல்லியிருந்தீங்க இல்லையா... அதை நான் பாத்துக்கிறேன்..."

சத்தியா அப்படியே வாயடைத்துப் போய் நின்று விட்டான். கண்களில் மிதந்த அனல் தணிந்து, நீர் நிரம்பிற்று. பத்திரிகையாளன் சிறிது நேர மௌனத்திற்குப் பின் சத்தியா தோளைத் தொட்டு உலுக்கினான்.

"இதை எதிர்த்தும் போராடுவோம். அடுத்து நடக்க வேண்டியதைப் பார்ப்போம்" என்றான் அவன். இருவர் கண்களிலும் புதிதாக ஒரு நம்பிக்கை ஒளி உருவாயிற்று.

உண்மைக் கதை:

தோல்வி நிலையென நினைத்தால்...


எங்கள் வீட்டில் எல்லோரும் நாளை விடிவதற்காகக் காத்திருந்தார்கள். நாளை என் ப்ளஸ்—டு தேர்வு முடிவுகள் வெளியாகின்றன. என் மனசு இப்பவே கிடந்து அடித்துக் கொள்ளத் தொடங்கி விட்டது. சனியன்! என்னதான் முயன் றாலும் இயல்பாய் இருக்க முடியவில்லை. அம்மா இதோடு மூன்றாவது முறையாகக் கேட்டுவிட்டாள். ''ஏன்டீ, கலா என்னவோ போல இருக்கே...''

கடவுளே! எனக்கு மட்டும்தானா இந்தப் பயம்! எதிர் வீட்டுச் சுமதியெல்லாம் திண்ணக்கமாகத் திரியறாளே! இவளுக்கெல்லாம் பயம் இருக்காதா?

நல்ல படியாக ரிசல்ட் வர வேண்டுமே என்று கும்பிடாத தெய்வமேயில்லை. ரிசல்ட் ஒரு மாதிரியாக வந்தால், என் னாலே உசிரோடு இருக்க முடியாது. அப்பாவின் கனவுகளைப் பொசுக்கிவிட்டு என்னால் உயிரோடு இருக்க முடியாது. இந்தத் தெரு ஜனங்கள், ''என்ன கலா ரிசல்ட்?'' என்று வளைத்து வளைத்துக் கேட்பார்கள். அவர்கள் உலுக்குவதற்குள் சப்தமில்லாது சொட்டு மருந்து சாப் பிடுவது போல் சாப்பிட்டு அடங்கிப் போவேன்.

'ச்சீய்' ஏன்தான் எனக்குப் புத்தி இப்படியெல்லாம் போகுதோ! நன்றாகத் தான் எக்ஸாம் எழுதியிருக்கேன். ஏன் கண்டதையும் போட்டுக் குழப்பிக்கு வானேன். நன்றாகத்தான் படித்தேன். கண் விழித்து உருப் போட்டேன். எல்லாமே பரீட்சை ஹாலுக்குப் போனதும் மறந்து போச்சு! வகுப்பில் நடத்தும் போது ஒழுங்காய்க் கவனித்து அன்றைய பாடங்களை அன்றே படித்தி ருந்தால் இத்தனை அவஸ்தை இருந்திருக் காதோ?

ஆயிற்று! இன்று முடிவு தெரிந்து விடும். வாழ்வா, சாவா? என்று இன்னும்



ஒரு மணி நேரத்தில் தீர்மானமாகி விடும். நான் ரகசியமாக அம்மாவுக்கு முன் பேப்பர் வாங்கிப் பார்த்தேன். பேப்பரைப் பிரித்துக் கொத்துக் கொத்தாய் இருக்கும் நம்பர்களைப் பார்த்ததுமே மனசும் கையும் ஆட ஆரம்பித்தது. என் நம்பர்...? அட கடவுளே, எங்கே போயிற்று! மாலையில் வந்த இரண்டு பத்திரிகைகளிலும் இல்லை.

மனசில் ஏகப்பட்ட கனவுகளைச் சுமந்து எல்லாக் கல்லூரிகளிலுமிருந்தும் விண்ணப்பங்கள் வாங்கிக் குவித்திருக்கும் அப்பாவால் இதைத் தாங்க முடியுமா? ''அட துப்பு கெட்ட சனியனே!'' என்று திட்ட மாட்டார்களா? வீடு மொத்தத்தையும் ஒவ்வோர் இடமாய்ச் சென்று தொட்டுப் பார்த்தேன். என் அம்மாவைக் கட்டிக் கொண்டு அழ வேண்டும் போல் இருந்தது. அப்பா! இன்று நீங்கள் ஆபீஸ் விருந்து களைத்துத் திரும்பும் போது உங்கள் 'கலா குட்டி' காப்பி கலந்து கொடுக்க உசிரோடு இருக்க மாட்டாள்!

பாத்ரூம் கதவைச் சாத்திக் கொண்டேன். தாவணிக்குள்ளிருந்து அந்தச் சின்ன பூச்சி மருந்து பாட்டிலை எடுத்துத் திறந்தேன். கைநடுங்கிப் பாவாடையெல்லாம் விஷம் சிந்திற்று. அந்த வாசனை எனக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. தைரியமாய் வாயில் ஊற்றினேன். ஒரு சொட்டு வாயில் விழுந்ததுமே என்னையும் அறியாமல் ஓவென்று அலறி விட்டேன்.

அதன்பின்பு கதவை உடைத்து அம்மா தூக்கியது. ஆஸ்பத்திரியே தூக்க அம்மா கதறி அழுதது. அப்பா என்னை மடியில் போட்டுக் கொண்டு கதறியது எதுவுமே நினைவில்லை. மறுநாள் பக்கத்து வீட்டு டிரான்ஸிஸ்டர் ''தோல்வி நிலையென நினைத்தால் மனுஷன் வாழ்வை நினைக்கலாமா...?'' என்று மெல்லியதாகப் பாட, மெல்லக் கண் விழித்துப் பார்த்தேன்.

அம்மா என்னைக் கட்டிக் கொண்டு உயிரே உருகிடுமோவென்ற அளவுக்கு அழுதாள். அப்பா உடைந்த தொண்டையில் பேசினார்: ''படிக்கிறதும் பாஸாகறதும் முக்கியம்தான் மகளே...! ஆனால் அது மட்டுமே வாழ்க்கை இல்லை. உன் ரிசல்டை விட நீ எங்களுக்கு முக்கியம் கலா...'' என்றார்.

வீட்டுக்குள்ளே படுத்துக் கிடந்த அந்த நாட்களில்தான் என் மனநிலையில் பெரிய மாற்றம் நிகழ்ந்தது. மனசில் தைரியம் வந்தது. எதையும் எதிர்கொள்ளும் துணிவு பிறந்தது. நான் படித்த முத்தையால்பேட்டை கேர்ள்ஸ் ஸ்கூலுக்குப் போனேன். பிரைவேட்டாக எழுதுவதற்கு விவரங்களைக் கேட்டுக் கொண்டு திரும்பும்போதுதான் என் ஆசிரியை அந்தப் பத்திரிகையாளரை எனக்கு அறிமுகப் படுத்தினார். எனக்கு நேர்ந்த இந்த அனுபவத்தை ஒரு கதையாக எழுதப் போகிறாராம். முதலில் எனக்குக் கூச்சமாகத் தான் இருந்தது. எதற்காகக் கூச்சப்படணும்? என்னைப் போல அபத்தமான முடிவுக்கு மத்தவங்க போவதை இது தடுக்கும்னா சந்தோஷம். நான் சொல்ல ஆரம்பித்தேன்...

'''எங்கள் வீட்டில் எல்லோரும் நாளை விடிவதற்காகக் காத்திருந்தார்கள்...''

— பாலன்

சண்டைக் காட்சிகள் போட்டி முடிவு:





சரியான விடை:

1. இருநிலவுகள்
2. தைரியலட்சுமி
3. ஆயிரத்தில் ஒருத்தி
4. உறவுக்குக் கைகொடுப்போம்
5. இவர்கள் வித்தியாசமானவர்கள்.

ஐந்து விடைகளையும் சரியாக எழுதியவர் யாருமில்லை.

நான்கு விடைகளைச் சரியாக எழுதியவர்கள் ஐந்து பேர்.

இவர்களில் குலுக்கல் முறையில் ரூ. 25 பரிசு பெறுகிறவர்:

எஸ். எம். மூர்த்தி, 282—A, தோப்பு வீடு, கிழக்குத் தெரு, நாகர்கோயில் — 629 001.

மற்ற நாலு பேர்களுக்கும் ஆறுதல் பரிசாகத் தலா ரூ. 5/— அனுப்பி வைக்கப்படும்.

ஆறுதல் பரிசு பெறுவோர்:

1. எஸ். மனோகரன், 40, பாலசுப்பிரமணியம் வீதி, கே. கே. புதூர், கோவை — 641 038. 2. எம். பாஸ்கர், 26, கால்வாய் தெரு, சீர்காழி; 3. எஸ். இந்துமதி, D-7, மதுரை ரோடு, பிளாக் 20, நெய்வேலி — 607 803; 4. ஆர். ரேணுகா, 85, நாராயண பிள்ளை தெரு, பெரமனூர், சேலம் — 7.

கௌதமி பேட்டி

"எப்படியும் எம்.பி.ஏ முடித்தே தீருவேன்!"

இஞ்சினியரிங் படிப்பைப் பாதியிலேயே விட்டு விட்டு 1987 — இல் சினிமாவில் நடிக்க வந்த கௌதமி, மிகக் குறுகிய காலத்திலே நட்சத்திர அந்தஸ்துக்கு உயர்ந்து விட்டார். கல்லூரிச் சிறப்பிதழ் ஆயிற்றே! அந்த மாஜி மாணவியைச் சத்தியா ஸ்டுடியோவில், 'பெண் புத்தி முன் புத்தி' படப்பிடிப்பில் சந்தித்தோம்.

கேள்வி: இஞ்சினியரிங் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த உங்களுக்குச் சினிமா ஆசை எப்படி வந்தது? யார் மூலம் சினிமாவுக்கு வந்தீர்கள்?

கௌதமி: நான் பெங்களூர் பிஷப் பப்ளிக் ஸ்கூலில் தேறியவுடன் 1986 — இல் பி. இ. நுழைவுத் தேர்வு எழுதினேன். அதில் தேர்ச்சி பெற்றவுடன் விசாகப்பட்டினம், காந்தி இஞ்சினியரிங் அண்டு எலெக்டிரானிக்ஸ் காலேஜில் இடம் கிடைத்தது. படித்துக் கொண்டிருக்கும் போதுதான் என் அப்பாவின் நண்பர் ஒருவர் மூலம், "காந்தி நகர் இரண்டாவது தெரு" (தெலுங்கு) என்ற படத்தில் நடிக்க அழைப்பு வந்தது. அந்தப் படத்தில் வொர்க் பண்ணியவர்கள் எல்லாமே எனக்கு மிகவும் ஃபெமிலியர் ஆனவர்கள். அது தவிர, கதையும் நன்றாக இருந்ததால் ஒப்புக் கொண்டேன். பெற்றோர்களும் நான் நடிப்பதில் சந்தோஷப்பட்டார்கள். ஷூட்டிங் தவிர மற்ற நாட்களில் தொடர்ந்து கல்லூரிக்குப் போய்க் கொண்டுதான் இருந்தேன். தொடர்ந்து படங்களில் நடிக்க வேண்டும் என்ற எண்ணமெல்லாம் அப்போது கிடையாது. படம் வெளியானதும் நிறையப் பாராட்டுக் கடிதங்களும் புதிய பட வாய்ப்புக்களும் வந்து சேர்ந்தன. என்னைச் சினிமாவுக்கும் சினிமாவை எனக்கும் பிடித்துப் போனதால் படிப்பை நிறுத்திவிட்டு நடிப்பைத் தொடர்ந்தேன்.

கேள்வி: பிரபல நடிகை ஆன பின்பு நீங்கள் படித்த கல்லூரிக்குச் சென்றீர்களா? வரவேற்பு எப்படி இருந்தது?

கௌதமி: சந்தோஷமாக வரவேற்றார்கள். எனக்குக் கல்லூரி முழுக்க நண்பர்கள் இல்லை. மிகக் குறைவுதான். அவர்களின் உற்சாகமான வரவேற்பு என்னை நெகிழ்வடையச் செய்தது. மற்றபடி தடபுடலாய் ஒன்றுமில்லை!

கேள்வி: உங்கள் காலேஜ் ப்ரண்ட்ஸுகளோடு இன்னும் தொடர்பு வைத்துள்ளீர்களா?

கௌதமி: ஓ! அடிக்கடி டெலிபோனில் பேசிக் கொள்வோம். அவர்களும் என்னைப் பார்க்க வருவார்கள். எனக்கு ஓய்வு கிடைக்கும் போது நானே அவர்களைத் தேடிப் போவேன். பிரண்ட்ஸுகளோடு இருக்கின்ற நிமிஷங்களே குஷி!

கேள்வி: கல்லூரியில் படித்த நாட்கள் தற்போது சினிமாவில் நடிக்கும் நாட்கள் — எதை மகிழ்ச்சியாகக் கருதுகின்றீர்கள்?

கௌதமி: காலேஜ் லைஃப்... அது ஒரு



தனி சந்தோஷம். இப்போது சினிமா பீல்டுல இருக்கின்ற லைஃப் — இது ஒரு விதமான சந்தோஷம். இரண்டையும் கம்பேர் பண்ணவே முடியாது. அது ஒரு காலம். இது ஒரு காலம் அவ்வளவுதான்.

கேள்வி: படிப்பை ஏன்தான் விட்டு விட்டு நடிக்க வந்தோம் என்று எப்பவாவது நினைத்தீர்களா?

கௌதமி: நோ! நோ! இல்லவே இல்லை சார்! நான் பணத்துக்காக நடிக்க வரலே. ரொம்ப வசதியான குடும்பத்துல பிறந்தவ நான். ஆர்வத்தோடதான் நடிக்க வந்தேன். சந்தோஷமாகத்தான் இப்பவும் வொர்க் பண்ணிக்கிட்டிருக்கேன்.

கேள்வி: படிக்கின்ற காலங்களில் சினிமா பார்ப்பதில் ஆர்வம் அதிகமாக இருந்ததா?

கௌதமி: இல்லை! அதான் சார் எனக்கும் ஆச்சரியமாக இருக்குது. நான் படிக்கின்ற போது சினிமாவே பார்த்ததில்லை. சலங்கை ஒலி, சிப்பிக்குள் முத்து போன்ற ஒரு சில படங்கள்தான் பார்த்திருக்கிறேன்.

கேள்வி: விட்டுப்போன படிப்பைத்தொடரும் உத்தேசம் உண்டா?

கௌதமி: நிச்சயமாக உண்டு! நான் காலேஜுலே சேரும் போதே பி. இ. முடித்தும் எப்படியாவது எம். பி. ஏ. படிக்க வேண்டும் என்று இருந்தேன். இனி இஞ்சினியரிங் படிக்க முடியாது. எம். பி. ஏ. படிப்பதற்கு ஏதாவது டிகிரி இருந்தால் போதுமே! எனவே எகனாமிக்ஸ் டிகிரியைப் போஸ்டல்ல முடிச்சுட்டு, எப்படியாவது எம். பி. ஏ. படிக்கணும்னு இருக்கேன். இதை மத்தவங்க மாதிரி பேச்சுக்குச் சொல்லவில்லை. ரொம்ப நம்பிக்கையோடு சொல்கிறேன்!

கேள்வி: முதன் முதலில் உங்களைப் பற்றி வந்த கிசுகிசு எந்த அளவு உங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியது?

கௌதமி: ஒரு பத்திரிகையில் என்னைப் பற்றி ஒரு கிசுகிசு வந்திருக்கிறது. அதைப் பார்த்த என் காலேஜ் பிரண்ட்ஸுகள், அந்த ஊரில் உள்ள எல்லாப் புத்தகங்களையும் மொத்தமாக வாங்கி ஒரே நாளில் தீவைத்துக் கொளுத்தி விட்டார்கள். இந்தச் செய்தியை என் நண்பர் ஒருவர் டெலிபோனில் தெரிவித்தார். அப்படியே ஆடிப் போய்விட்டேன்!

கேள்வி: ஆர்ட் ஃபிலிமில் நடிக்க

மீண்டும் ஒரு கல்லூரிக் காதல் கதை

"நிறைய கனவுகளைச் சுமந்து கொண்டு மாணவ—மாணவிகள் அந்தக் கல்லூரிக்குள் நுழைகின்றார்கள். அன்று மாலையே கடற்கரையில் புதுமுகங்கள் தங்களுக்குள் அறிமுகம் செய்து கொள்கின்றார்கள். ஒவ்வொருவரும் தங்களின் சிறப்பைச் சொல்லுகின்றார்கள். மகேந்திரன் தன் கிளாஸ் மேட் சுதாவிடம் தான் மிகப் பெரிய ஃபுட்பால் பிளேயர் என்று சொல்லிப் பெருமை அடித்துக் கொள்கிறான். திடகாத்திரமான அவன் உடம்பும் அதற்குப் பொய் சாட்சி சொல்ல, கால ஓட்டத்தில் சுதாவுக்கும் அவனுக்கும் காதல் வந்து விடுகின்றது.



மகேந்திரன் ஃபுட்பால் வீரர்களின் ட்ரெஸ்களைப் பந்தாய்ச் சுருட்டி எடுத்துப் போகும் எடுபிடிதான் என்று சீக்கிரமே கண்டுபிடிக்கும் சுதாவுக்கு அவமானம்! கோபம்!

"இனி என் முகத்தில் கூட நீ விழிக்கப்படாது" என்று சொல்லி விட்டுப் போய் விடுகிறாள். அவனால் அவளைப் பார்க்காது ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது என்ற நிலை. மனசில் வெறி படர்கிறது. கடுமையான பயிற்சிக்குப் பின் ஸ்டேட் பிளேயர் ஆகிறான். மூன்றாவது வருடத்தில் மகேந்திரன் பெயரைக் கல்லூரி புல்வெளிகள் கூட உச்சரிக்க ஆரம்பித்து விடுகின்றன. டீ.வி.யில் கூட மகேந்திரனின் விளையாட்டு நிகழ்ச்சி ஒளிபரப்பாகின்றது. ஆனால் இதையெல்லாம் பார்த்து ரசிக்கச் சுதாவால் முடியாது. ஏன் என்றால்..."

ஒரு பெரிய சஸ்பென்ஸோடு நிறுத்தினார் அந்தப் படத்தின் கதாசிரியர் எம். ஆர். பாரதி. மாநிலக் கல்லூரியில் படித்த அவர் நண்பர் ஒருவரின் உண்மைக் கதையாம். விரைவில், கொஞ்சம் கூட சினிமாத்தனம் இல்லாது முழுக்க முழுக்க ஒரு கல்லூரிக்குள்ளே, யதார்த்தமாகப் படமாக்கப் போகின்றார்கள் பி. ஏ. புரொடெக்ஷன் நிறுவனத்தினர். கதாநாயகனாகக் கார்த்திக் நடிக்கப் போகிறார்.

— நமது நிருபர்



* எம். ஆர். பாரதி



Children can still frolic on unspoilt beaches in Madras and Goa. Because Hostalen® pipes disperse harmful effluents far from these coastlines.

For too long, conventional wisdom had it that pollution was an inevitable consequence of industrialisation. Till PIL set about changing that notion.

Safeguarding the natural environment

In several cases, PIL has provided Effluent Disposal Systems for industrial projects. Hostalen pipelines that carry treated effluents far out into the sea where they are safely dispersed by tidal currents.

Special problems need Hostalen solutions

PIL's Hostalen well merits the term 'wonder material'. It is light, flexible, corrosion-resistant and chemically inert. So versatile in fact that projects can be planned and executed in less time and at less cost than if conventional piping materials had been used.

PIL—better ideas for a better life

As in environmental protection, so also in other vital fields, we're improving the quality of life. Through superior products. And the know-how gained in 25 years of grappling with complex problems.

We're making sure pollution isn't the price of progress

PIL POLYOLEFINS INDUSTRIES LIMITED

Mafatlal Centre, Nariman Point
Bombay 400 021

Hostalen® is the registered trademark of Hoechst AG, West Germany

PIL—Technology for a better life

CHAITRA-B PIL-616 R(2)







அட்டைப்படம் ஓர் ஆச்சர்யம்!

அட்டைப் படத்தில் மேற்கத்திய இசை நிகழ்ச்சி வழங்கிக் கொண்டிருக்கும் மாணவர்கள் மூவருமே கர்நாடக இசையுடன் ஆழமான தொடர்பு உள்ளவர்கள் தான்!

மெய்மறந்து பாடிக் கொண்டிருக்கும் வினிதா தமது ஆறாம் வயதில் கர்நாடக இசையைத்தான் முதன் முதலில் கற்றார்! அப்போது பெற்றோருடன் கல்கத்தாவில் இருந்தார் வினிதா. வயதான பாட்டு வாத்தியார் திடீரென்று இறந்து விட, கற்றுத் தர வேறு சரியான ஆள் கிடைக்காமல் இசைப் பாடம் நின்று போயிற்று. பிறகு மேற்கத்திய இசையில் நாட்டம் ஏற்பட்டு அதைப் பாடத் தொடங்கிய வினிதா இன்று கல்லூரிப் போட்டிகளில் மேடையேறினால் பரிசு பெறாமல் இறங்குவதில்லை! இப்போதும் அவருக்குக் கர்நாடக இசையைக் கவனமாகக் கேட்டு ரசிப்பதில் நாட்டம் இருக்கிறது. வினிதா சென்னை கிறிஸ்தவக் கல்லூரி மாணவி.

டிரம்ஸ் வாசிக்கும் சுதாகருக்கு மிருதங்கமும் வாசிக்கத் தெரியும்! அக்காவின் நடன நிகழ்ச்சிகளுக்கு வாசித்திருக்கிறார். சென்னை ஐ.ஐ.டி.யில் பயிலும் இவர் ஐ.ஐ.டி. இசைக் குழுவின் டிரம்மர். இவரது அம்மா பிரபல கர்நாடக இசைக் கலைஞரான சீதா சுப்ரமண்யம்.

பிரசன்னா கிடாரில் மேற்கத்திய இசையையும் சரி, கர்நாடக இசையையும் சரி, அருமையாக வாசிப்பார். ஆகஸ்டு மாதம், இவருடைய கர்நாடக இசைக் (கிடார்) கச்சேரி, மியூசிக் அகாடமியில் நடைபெறவுள்ளது!

இந்த மூன்று இளைஞர்களுமே ஒப்புக் கொண்ட விஷயம் — கல்லூரி நாட்களுக்குப் பிறகு மேற்கத்திய இசைக்கு எதிர்காலம் இல்லை என்பதுதான். கர்நாடக இசைக்கு இருக்கும் அளவு வாய்ப்புகள் கூட மேற்கத்திய இசைக் கலைஞர்களுக்குச் சென்னையில் கிடையாது. ஆனால் காலேஜில் இருக்கும்வரை, மேற்கத்திய இசையில் தேர்ந்தவர்கள், கல்லூரி விழாக்களிலும் போட்டிகளிலும் பங்கேற்று நிறைய பரிசுத் தொகை சம்பாதிக்க முடியுமாம்!

— எஸ்லார்

வண்ணப்படம்: கே. வி. ஆனந்த்

வேண்டும் என்ற ஆசை உண்டா?

கௌதமி: ஆர்ட் பிலிம்னு நீங்க எதைச் சொல்றீங்கன்னு தெரியலை? கோவிந்த் நிஹலானி (ஹிந்திப்பட டைரக்டர்) படத்தில் எல்லாம் ரொம்பவும் ஹெவி சப்ஜெக்டாக இருக்கும். அந்த மாதிரிப் படம் பண்ண விரும்பலை. ஆனால் சலங்கை ஒலி, சிப்பிக்குள் முத்து, நாயகன், இதுமாதிரிப் படங்களும் ஆர்ட் ஃபிலிம்தான். இந்த மாதிரிப் படங்கள்ல நடிக்கணும்னு ஆசை!

கேள்வி: படிப்பைப் பாதியிலே விட்டு விட்டுச் சினிமாவில் நடிக்க வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு உங்கள் அனுபவத்தின் மூலம் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

கௌதமி: முதலில் படிப்பை முடியுங்கள். திறமை ஒரு பக்கம் இருக்கட்டும். எல்லோருக்கும் வாய்ப்புக்கள் நல்லபடியாக அமையாது. எனக்கு அடுத்தடுத்து மிகப் பெரிய பேனர்களில் படம் அமைந்தது. குரு — சிஷ்யன் ரஜினி சாருடன் பண்ணினேன். தொடர்ந்து எஸ். பி. முத்துராமன் சார், பஞ்சு அருணாசலம் சார் படம்...... இப்படி எல்லோருக்கும் அமையும் என்று எதிர்பார்க்க முடியாது! கடைசியாக இரண்டும் கெட்டான் நிலை வந்துவிடக் கூடாது.

பேட்டி: ரதி

வண்ணப்படம்: யோகா



அத்தியாயம் 9

கரை உடைந்தது!

பழுவேட்டரையரின் மனத்தில் குடி கொண்டிருந்த வேதனையைப் படகிலே இருந்த மற்றவர்கள் உணரக் கூடவில்லை. புயற்காற்றில் படகு அகப்பட்டுக் கொண்டதன் காரணமாகவே அவர் அவ்வளவு சங்கடப்படுவதாக நினைத்தார்கள். பெரிய பழுவேட்டரையர் மனோ தைரியத்தில் நிகரற்றவர் எனப் பெயர் வாங்கியிருந்தவர். அவரே இவ்வளவு கலங்கிப் போனதைப் பார்த்து மற்றவர்களின் மனத்திலும் பீதி குடி கொண்டது. எந்த நேரம் படகு கவிழுமோ என்று எண்ணி, அனைவரும் தப்பிப் பிழைப்பதற்கு வேண்டிய உபாயங்களைப் பற்றியும் யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

கடைசியாக, வெகு நேரம் படகு தவித்துத் தத்தளித்த பிறகு, கரை ஏற வேண்டிய துறைக்கு அரைக் காத தூரம் கிழக்கே சென்று, படகு கரையை அணுகியது. "இனிக் கவலை இல்லை" என்று எல்லாரும் பெருமூச்சு விட்டார்கள். அச்சமயத்தில் நதிக் கரையில் புயற்காற்றினால் பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்த மரங்களில் ஒன்று தடார் என்று முறிந்து விழுந்தது. முறிந்த மரத்தைக் காற்று தூக்கிக் கொண்டு வந்து படகின் அருகில் தண்ணீரில் போட்டது. படகைத் திருப்பி அப்பால் செலுத்துவதற்கு ஓடக்காரர்கள் பெருமுயற்சி செய்தார்கள். பலிக்கவில்லை. மரம் அதிவேகமாக வந்து படகிலே மோதியது. படகு தடால் என்று கவிழ்ந்தது. மறுகணம் படகில் இருந்தவர்கள் அனைவரும் தண்ணீரில் விழுந்து மிதந்தார்கள்.

மற்றவர்கள் எல்லாரும் படகு கவிழ்ந்தால் தப்பிப் பிழைப்பது பற்றியே எண்ணிக் கொண்டிருந்தார்களாதலால் அவ்வாறு உண்மையில் நிகழ்ந்து விட்டதும், அந்த அபாயத்திலிருந்து சமாளிப்பதற்கு ஓரளவு ஆயத்தமாயிருந்தார்கள். கரையை நெருங்கிப் படகு வந்துவிட்டிருந்தபடியால் சிலர் நீந்திச் சென்று கரையை அடைந்தார்கள். சிலர் மரங்களின் மீதும் தொத்திக் கொண்டு நின்றார்கள். சிலர் கையில் அகப்பட்டதைப் பிடித்துக் கொண்டு தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தார்கள்.

ஆனால் பழுவேட்டரையர் வேறு சிந்தனைகளில் ஈடுபட்டிருந்தபடியால், படகுக்கு நேர்ந்த விபத்தை எதிர்பார்க்கவே இல்லை. படகு கவிழ்ந்ததும் தண்ணீரில் முழுகி விட்டார். அவரைப் பிரவாகத்தின் வேகம் வெகு தூரம் அடித்துக் கொண்டு போய்விட்டது. சில முறை தண்ணீர் குடித்து, மூக்கிலும் காதிலும் தண்ணீர் ஏறி, திணறித் தடுமாறி, கடைசியில் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, அவர் பிரவாகத்துக்கு மேலே

அமரர் **கல்கி**

வந்த போது படகையும் காணவில்லை; படகில் இருந்தவர்கள் யாரையும் காணவில்லை. அதுமட்டுமல்லாமல், வெள்ளம் தம்மை அந்த மாநதியின் மத்தியப் பிரதேசத்தை நோக்கி இழுத்துக் கொண்டு போவதைப் பழுவேட்டரையர் அறிந்தார்.

உடனே அந்தக் கிழவரின் நெஞ்சில் பழைய தீரத்துவம் தளிர்த்து எழுந்தது. எத்தனையோ போர்களில் மிக ஆபத்தான நிலைமைகளில் துணிவுடன் போராடி வெற்றி பெற்ற அந்த மாபெரும் வீரர் இந்தக் கொள்ளிடத்து வெள்ளத்துடனும் போராடி வெற்றி கொள்ளத் தீர்மானித்தார். சுற்றுமுற்றும் பார்த்தார்; சமீபத்தில் மிதந்து வந்த ஒரு மரக் கட்டையை எட்டிப் பிடித்துக் கொண்டார். கரையைக் குறி வைத்து நீந்தத் தொடங்கினார். வெள்ளத்தின் வேகத்துடனும் புயலின் வேகத்துடனும் ஏக காலத்தில் போராடிக் கொண்டே நீந்தினார். கை சளைத்தபோது சிறிது நேரம் வெறுமனே மிதந்தார். பலமுறை நதிக்கரையை ஏற முயன்ற போது மழையினால் சேறாகியிருந்த கரை அவரை மறுபடியும் நதியில் தள்ளிவிட்டது. உடனே, விட்டு விட்ட கட்டையைத் தாவிப் பிடித்துக் கொண்டார்.

இவ்விதம் இருட்டி ஒரு ஜாமத்துக்கு மேலாகும் வரையில் போராடிய பிறகு, நதிப் படுகையில் நாணற்காடு மண்டி வளர்ந்திருந்த ஓரிடத்தில், அவருடைய கால்கள் தரையைத் தொட்டன. பின்னர், வளைந்து கொடுத்த நாணற் புதர்களின் உதவியைக் கொண்டு அக்கிழவர் தட்டுத் தடுமாறி நடந்து, கடைசியாகக் கரை ஏறினார்.

அவரைச் சுற்றிலும் கானாந்தகாரம் சூழ்ந்திருந்தது. பக்கத்தில் ஊர் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. திருவையாற்றுக்கு எதிரில் கரை ஏற வேண்டிய ஓடத் துறைக்குச் சுமார் ஒன்றரைக் காத தூரம் கிழக்கே வந்திருக்க வேண்டுமென்று தோன்றியது. ஆம், ஆம்! குடந்தை நகருக்கு அருகிலேதான் கரையேறியிருக்க வேண்டும். இன்றிரவு எப்படியாவது குடந்தை நகருக்குப் போய் விட முடியுமா?....

புயல் அப்போதுதான் பூரண உக்கிரத்தை அந்தப் பிரதேசத்தில் அடைந்திருந்தது. நூறாயிரம் பேய்கள் சேர்ந்து சத்தமிடுவது போன்ற பேரோசை காதைச் செவிடுபடச் செய்தது. மரங்கள் சடசடவென்று முறிந்து விழுந்தன. வானத்தில் அண்ட கடாகங்கள் வெடித்து விடுவது போன்ற இடி முழக்கங்கள் அடிக்கடி கேட்டன. பெருமழை சோவென்று கொட்டியது.

"எங்கேயாவது பாழடைந்த மண்டபம் அல்லது பழைய கோயில் இல்லாமலா போகும்? அதில் தங்கி இரவைக் கழிக்க வேண்டியதுதான். பொழுது விடிந்த பிறகுதான் மேலே நடையைத் தொடங்க வேண்டும்" என்று முடிவு கட்டிக் கொண்டு, தள்ளாடி நடுங்கிய கால்களை ஊன்றி வைத்த வண்ணம் நதிக் கரையோடு நடந்து சென்றார்.

நதியில் கரையின் விளிம்பைத் தொட்டுக் கொண்டு வெள்ளம் போய்க் கொண்டிருந்தது. மழை பெய்தபடியால் கரை மேலேயும் ஓரளவு தண்ணீராயிருந்தது. இருட்டைப் பற்றியோ சொல்ல வேண்டியதாயில்லை. ஆகவே, அந்த வீரக் கிழவர் நடந்து சென்ற போது, தம் எதிரிலே நதிக் கரையின் குறுக்கே கொஞ்சம் தண்ணீர் அதிகமாக ஓடியதைப் பற்றி அதிக கவனம் செலுத்தவில்லை. திடீரென்று முழங்கால் அளவு ஜலம் வந்துவிட்டதும், சற்றுத் தயங்கி யோசித்தார். தொடையளவு ஜலம் வந்ததும் திடுக்கிட்டார். அதற்கு மேலே யோசிப்பதற்கு அவகாசமே இருக்கவில்லை. மறுகணம் அவர் தலைகுப்புறத் தண்ணீரில் விழுந்தார். கொள்ளிடத்தின் கரை உடைத்துக் கொண்டு அந்த இடத்தில் தெற்கு நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்த வெள்ளம் அவரை உருட்டிப் புரட்டி அடித்துக் கொண்டு போயிற்று. கரைக்கு அப்பால் பள்ளமான பிரதேசமானபடியால், அவரை ஆழமாக, இன்னும் ஆழமாக, அதல பாதாளத்துக்கே அடித்துக் கொண்டு போவது போலிருந்தது. படகு கவிழ்ந்து நதியில் போய்க் கொண்டிருந்த வெள்ளத்தில் மூழ்கிய போது அவர் சற்று எளிதாகவே சமாளித்துக் கொண்டார். இப்போது அவ்விதம் முடியவில்லை. உருண்டு புரண்டு, உருண்டு புரண்டு கீழே, கீழே போய்க் கொண்டிருந்தார். கண் தெரியவில்லை; காது கேட்கவில்லை; நிமிர்ந்து நின்று மேலே வரவும் முடியவில்லை. மூச்சுத் திணறியது. யாரோ ஒரு பயங்கர ராட்சதன் அவரைத் தண்ணீரில் அமுக்கி அமுக்கித் தலைகுப்புறப் புரட்டிப் புரட்டி, அதே சமயத்தில் பாதாளத்தை நோக்கி இழுத்துக் கொண்டு போனான். ஆகா! அந்த ராட்சதன் வேறு யாரும் இல்லை! கொள்ளிடத்தின் கரையை உடைத்துக் கொண்டு, உடைப்பின் வழியாக அதிவேகமாகப் பாய்ந்த வெள்ளமாகிய ராட்சதன்தான்! அவனுடைய கோரமான பிடியிலிருந்து, பயங்கரமான உருட்டலிலிருந்து, தப்பிப் பிழைக்க முடியுமா? கால் தரையில் பாவவில்லையே? கைக்குப் பிடி எதுவும் அகப்படவில்லையே? மூச்சுத் திணறுகிறதே? கழுத்தைப் பிடித்துத் திருகுவது போலிருக்கிறதே? காது செவிடுபடு

கிறதே!.... துர்க்கா பரமேசுவரி! தேவி! நான் இந்த விபத்திலிருந்து பிழைப்பேனா!... அடிபாவி! நந்தினி! உன்னால் எனக்கு நேர்ந்த கதியைப் பார்! ஐயோ! பாவம்! உன்னை அந்த தூர்த்தர்கள் மத்தியில் விட்டு விட்டு வந்தேனே? சீச்சீ! உன் அழகைக் கண்டு மயங்கி, உன் நிலையைக் கண்டு இரங்கி, உன்னை மணந்து கொண்டதில் நான் என்ன சுகத்தைக் கண்டேன்? மன அமைதியை இழந்ததைத் தவிர வேறு என்ன பலனை அனுபவித்தேன்? கடைசியில், இப்படிக் கொள்ளிடத்து உடைப்பில் அகப்பட்டுத் திணறித் திண்டாடிச் சாகப் போகிறேனே! அறுபத்து நாலு போர்க் காயங்களைச் சுமந்த என் உடம்பைப் புதைத்து வீரக் கல் நாட்டிப் பள்ளிப்படை கட்டப் போவதில்லை! என் உடலை யாரும் கண்டெடுக்கப் போவதுகூட இல்லை! எங்கேயாவது படு பள்ளத்தில் சேற்றில் புதைந்து விடப் போகிறேன்! என் கதி என்ன ஆயிற்று என்று கூட யாருக்கும் தெரியாமலே போய் விடப் போகிறது! அல்லது எங்கேயாவது கரையிலே கொண்டு போய் என் உடம்பை இவ்வெள்ளம் ஒதுக்கித்தள்ளிவிடும்! நாய் நரிகள் பிடுங்கித் தின்று பசியாறப் போகின்றன!...

சில நிமிட நேரத்திற்குள் இவை போன்ற எத்தனையோ எண்ணங்கள் பழுவேட்டரையர் மனத்தில் தோன்றி மறைந்தன. பின்னர் அடியோடு அவர் நினைவை இழந்தார்...

படார் என்று தலையில் ஏதோ முட்டியதும் மீண்டும் சிறிது நினைவு வந்தது. கைகள் எதையோ,—கருங்கல்லையோ, கெட்டியான தரையையோ, — பிடித்துக் கொண்டிருந்தன. ஏதோ ஒரு சக்தி, அவரை மேலே கொண்டு வந்து உந்தித் தள்ளியது. அவரும் மிச்சமிருந்த சிறிது சக்தியைப் பிரயோகித்து, கரங்களை ஊன்றி மேலே எழும்பிப் பாய்ந்தார். மறு நிமிடம், கெட்டியான கருங்கல் தரையில் அவர் கிடந்தார். கஷ்டப்பட்டுக் கண்களைக் திறக்கப் பிரயத்தனப் பட்டார். இறுக அமுங்கிக் கிடந்த கண்ணிமைகள் சிறிது திறந்ததும், எதிரே தோன்றிய ஜோதி அவருடைய கண்களைக் கூசச் செய்தது. அந்த ஜோதியில் துர்க்கா பரமேசுவரியின் திருமுக மண்டலம் தரிசனம் தந்தது! தேவி! உன் கருணையே கருணை! என்னுடைய அமைதியற்ற மண்ணுலக வாழ்வை முடித்து விண்ணுலகில் உன்னுடைய சந்நிதானத்துக்கே அழைத்துக் கொண்டாய் போலும்!.....

இல்லை, இல்லை! இது விண்ணுலகம் இல்லை. மண்ணுலகத்திலுள்ள அம்மன் கோவில். எதிரே தரிசனம் அளிப்பது அம்மனுடைய விக்கிரகம். தாம் விழுந்து கிடப்பது கர்ப்பக் கிருஹத்தை அடுத்துள்ள அர்த்த மண்டபம். அம்மனுக்கு அருகில் முணுக், முணுக்கென்று சிறிய தீபம் எரிந்து கொண்டிருக்கிறது. அதன் வெளிச்சந்தான் சற்று முன் தம் கண்களை அவ்வளவு கூசும்படி செய்தது! வெளியிலே இன்னும் 'சோ' என்று மழை கொட்டிக் கொண்டிருக்கிறது. புயலும் அடித்துக் கொண்டிருக்கிறது. அவ்வளவு புயலும் மழையும் தேவி கோவிலின் கர்ப்பக்கிருஹத்தில் ஒளிர்ந்த தீபத்தை அசைக்க முடியவில்லை! இது ஒரு நல்ல சகுனமோ? துர்க்கா பரமேசுவரி தம்மிடம் வைத்துள்ள கருணைக்கு அறிகுறியோ? எத்தனை பெரிய விபத்துக்கள் வந்தாலும் தமது ஜீவன் மங்கி விடாது என்று எடுத்துக் காட்டுவது போல அல்லவா இருக்கிறது! ஜகன் மாதாவின் கருணையே கருணை! தமது பக்தியெல்லாம், தாம் செய்த பூசனை எல்லாம் வீண் போகவில்லை.....

கிழவர் தட்டுத் தடுமாறி எழுந்து நிற்க முயன்றார். அவர் உடம்பு நடுங்கியது. வெகு நேரம் வெள்ளத்திலேயே கிடந்தபடியால் உடம்பு சில்லிட்டு நடுங்குவது இயல்புதான் அன்றோ? அம்மன் சந்நிதியில் திரை விடுவதற்காகத் தொங்கிய துணியை எடுத்து உடம்பை நன்றாகத் துடைத்துக் கொண்டார். தமது ஈரத் துணியைக் களைந்து எறிந்து விட்டுத் திரைத் துணியை அரையில் உடுத்திக் கொண்டார்.

அம்மன் சந்நிதியில் உடைத்த தேங்காய் மூடிகள், பழங்கள், நிவேதனத்துக்கான பொங்கல் பிரசாதங்கள் — எல்லாம் வைத்திருப்பதைக் கண்டார். தேவிக்குப் பூஜை செய்வதற்காக வந்த பூசாரியும் பிரார்த்தனைக் காரர்களும் எல்லாவற்றையும் அப்படி அப்படியே போட்டு விட்டு ஓடிப் போயிருக்க வேண்டும். ஏன் அவர்கள் அப்படி ஓடினார்கள்? புயலுக்கும் மழைக்கும் பயந்து ஓடினார்களா? அல்லது கொள்ளிடத்துக் கரையில் உடைப்பு ஏற்பட்டு விட்டதைப் பார்த்து விட்டு ஓடினார்களா? எதுவாயிருந்தாலும் சரி. தாம் செய்த புண்ணியந்தான்! துர்க்கா பரமேசுவரி தம்மை உடைப்பு வெள்ளத்திலிருந்து காப்பாற்றியது மட்டுமல்ல; தம்முடைய பசி தீருவதற்குப் பிரசாதமும் வைத்துக் கொண்டு காத்திருக்கிறாள்.....

இன்றிரவை இந்தக் கோயிலிலேயே கழிக்க வேண்டியதுதான். இதைக் காட்டிலும் வேறு தக்க இடம் கிடைக்கப் போவதில்லை. உடைப்பு வெள்ளம் இந்தச் சிறிய கோவிலை ஒட்டித்தான் பாய்ந்து செல்ல வேண்டும். அதனால் கோயிலுக்கே ஆபத்து

வரலாம். கோவிலைச் சுற்றிலும் வெள்ளம் குழி பறித்துக் கொண்டிருக்கும். அஸ்திவாரத்தையே தகர்த்தாலும் தகர்த்து விடும். ஆயினும் இன்று இரவுக்குள்ளே அப்படி ஒன்றும் நேர்ந்து விடாது. அவ்விதம் நேர்வதாயிருந்தாலும் சரிதான். அன்றிரவு அந்தக் கோவிலை விட்டுப் போவதற்கில்லை. உடம்பில் தெம்பு இல்லை; உள்ளத்திலும் சக்தி இல்லை.....

பய பக்தியுடன் பழுவேட்டரையர் தேவியின் சந்நிதானத்தை நெருங்கினார். அங்கிருந்த பிரசாதங்களை எடுத்து வேண்டிய அளவு அருந்தினார். மிச்சத்தைப் பத்திரமாக வைத்து மூடினார்.


தேவியின் முன்னிலையில் நமஸ்காரம் செய்யும் பாவனையில் படுத்தார். கண்களைச் சுற்றிக்கொண்டு வந்தது. சிறிது நேரத்துக்குள் பழுவேட்டரையர் பெருந்துயிலில் ஆழ்ந்து விட்டார்.

அத்தியாயம் 10
கண் திறந்தது!

முதலில் நதி வெள்ளத்திலும், பின்னர் உடைப்பு வெள்ளத்திலும் அகப்பட்டுத் திண்டாடியபடியால் பெரிதும் களைப்படைந்திருந்த பழுவேட்டரையர் வெகு நேரம் நினைவற்று, உணர்ச்சியற்று, கட்டையைப் போல் கிடந்து தூங்கினார். வேண்டிய அளவு தூங்கிய பிறகு, இலேசாக நினைவுகளும் கனவுகளும் தோன்றின. ஒரு சமயம் துர்க்கா பரமேசுவரி கோவில் விக்கிரகத்திலிருந்து புறப்பட்டு நாலு அடி எடுத்து வைத்து நடந்து அவர் அருகில் வந்தாள். அனல் வீசிய கண்களினால் அவரை உற்று நோக்கிய வண்ணம் திருவாய் மலர்ந்தாள்:—''அடே, பழுவேட்டரையா! நீயும் உன் குலத்தாரும் தலை முறை தலை முறையாக எனக்கு வேண்டியவர்கள். ஆகையால் உனக்கு எச்சரிக்கிறேன். உன்னுடைய அரண்மனையில் நீ கொண்டு வைத்திருக்கிறாயே, அந்த நந்தினி என்பவள் மனிதப் பெண் உருக்கொண்ட . ராட்சஸி. உன்னுடைய குலத்தையும் சோழர் குலத்தையும் வேரோடு அழித்துப் போடுவதற்காக வந்தவள். அதற்குச் சரியான சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவளை உன் அரண்மனையிலிருந்தும் உன் உள்ளத்திலிருந்தும் அப்புறப்படுத்தி விட்டு மறு காரியம் பார்! இல்லாவிட்டால், உனக்கும் உன் குலத்துக்கும் என்றும் அழியாத அபகீர்த்தி ஏற்படும்....!''

இவ்விதம் எச்சரித்து விட்டுத் தேவி திரும்பிச் சென்று விக்கரகத்துக்குள் புகுந்து கலந்து விட்டாள்!......

பழுவேட்டரையர் திடுக்கிட்டு எழுந்தார். அவர் உடம்பு கிடுகிடென்று நடுங்கிக் கொண்டிருந்தது.






தாம் கண்டது கனவுதான் என்று நம்புவது அவருக்குச் சிரமமாகவே இருந்தது. ஆயினும் அப்படித்தான் இருக்க வேண்டும்என்றுதீர்மானித்துக்கொண்டார்.

பொழுது நன்றாக விடிந்திருந்தது. புயலின் உக்கிரம் தணிந்திருந்தது. மழை நின்று போயிருந்தது. 'சோ' வென்ற சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. கோவில் வெளி மண்டபத்தின் விளிம்பின் அருகில் வந்து நின்று சுற்று முற்றும் பார்த்தார். அவர் கண்ட காட்சி உற்சாகமளிப்பதாக இல்லை.

கொள்ளிடத்தின் உடைப்பு இதற்குள் மிகப் பெரிதாகப் போயிருந்தது. நதி வெள்ளத்தில் ஏறக்குறையப் பாதி அந்த உடைப்பின் வழியாகக் குபுகுபுவென்று பாய்ந்து கொண்டிருந்ததாகத் தோன்றியது. கிழக்குத் திசையிலும் தெற்குத் திசையிலும் ஒரே வெள்ளக் காடாக இருந்தது. மேற்கே மட்டும் கோவிலை அடுத்துச் சிறிது தூரம் வரையில் வெள்ளம் சுழி போட்டுக் கொண்டு துள்ளிக் குதித்துக் கொண்டு போயிற்று. அப்பால் குட்டை மரங்களும் புதர்களும் அடர்ந்திருந்த காட்டுப் பிரதேசம் வெகு தூரத்துக்குக் காணப்பட்டது. அது திருப்புறம்பயம் கிராமத்தை அடுத்த காடாயிருக்க வேண்டுமென்றும் அந்தக் காட்டின் நடுவில் எங்கேயோதான் கங்க மன்னன் பிருதிவீபதிக்கு வீரக்கல் நாட்டிய பழைய பள்ளிப்படைக் கோயில் இருக்க வேண்டும் என்றும் ஊகம் செய்தார்.

அந்தப் பள்ளிப்படை உள்ள இடத்தில் நூறு வருஷங்களுக்கு முன்னால் நடந்த மாபெரும் யுத்தம் அவர் நினைவுக்கு வந்தது. அந்தப் போரில் சோழர் குலத்துக்கு உதவியாக தமது முன்னோர்கள் செய்த வீர சாகஸச் செயல்களையும் ஞாபகப்படுத்திக் கொண்டார். அப்படிப்பட்ட தமது பழம் பெருங்குலத்துக்கு இந்த நந்தினியால் உண்மையிலேயே அவக்கேடு நேர்ந்து விடுமோ? துர்க்கா பரமேசுவரி தமது கனவிலே தோன்றிக் கூறியதில் ஏதேனும் உண்மை இருந்தாலும் இருக்குமோ...?

எப்படியிருந்தாலும் இனி சர்வ ஜாக்கிரதையாகவிருக்க வேண்டும். நந்தினியின் அந்தரங்கம் என்னவென்பதையும் கண்டுபிடித்தேயாக வேண்டும். முதலில், இங்கிருந்து தப்பிச் சென்ற பிறகல்லவா, மற்றக் காரியங்கள்? திருப்புறம்பயம் கிராமத்தை அடைந்தால் அங்கே ஏதேனும் உதவி பெறலாம். கவிழ்ந்த படகிலிருந்து தம்மைப் போல்



''ஏன் சார், பையனுக்குத்தான் காலேஜ்லே 'சீட்' கிடைச்சுடுச்சே... ஏன் 'உம்'னு இருக்கீங்க...?''

''காலேஜ் சீட்டுக்காக நான் ஏகமா லீவு போட்டுட்டு அலைஞ்சதுலே எங்க ஆபீஸ்லே எனக்கு 'சீட்டு' கிழிச்சுட்டாங்க!''

வேறு யாரேனும் தப்பிப் பிழைத்திருந்தால், அவர்களும் அங்கே வந்திருக்கக் கூடும். ஆனால் வெள்ளத்தைக் கடந்து திருப்புறம்பயம் கிராமத்துக்குப் போவது எப்படி?

இந்தக் கோவிலைச் சுற்றி உடைப்பு வெள்ளம் இப்படிச் சுழி . போட்டுக் கொண்டு ஓடுகிறதே? இதில் ஒரு மத யானை இறங்கினால் கூட அடித்துத் தள்ளிக் கொண்டு போய் விடுமே! இதை எப்படித் தாண்டிச் செல்வது?

உடைப்பு வெள்ளம் கோவிலைச் சுற்றிக் கீழே கீழே தோண்டிக் குழி பறித்துக் கொண்டிருப்பது திண்ணம். கோவில் எப்போது விழுமோ தெரியாது! துர்க்கா பரமேசுவரியின் சக்தியினால் விழாமலிருந்தால் தான் உண்டு. ஆயினும், அங்கிருந்து வெளியேறுவது எப்படி? உடைப்பு வெள்ளம் வடிந்த பிறகு போவது என்றால், எத்தனை நாள் ஆகுமோ தெரியாது.

நல்லவேளை, வேறொரு வழி இருக்கிறது. கோவிலுக்கு எதிரே பிரம்மாண்டமாக வளர்ந்திருந்த வேப்ப மரம் ஒன்று இருந்தது. புயற் காற்றிலே விழாமல் அது எப்படியோ தப்பிப் பிழைத்தது. ஆனால் கோவிலைச் சுற்றித் துள்ளிச் சென்று கொண்டிருந்த உடைப்பு வெள்ளம், அந்த வேப்ப மரத்தைச் சுற்றிலும் சுழியிட்டுக் குழி பறித்துக் கொண்டிருந்ததால், கோவில் விழுவதற்கு முன்னால், அந்த மரம் விழுவது நிச்சயம். மரம் விழுந்தால் அநேகமாக மேற்குத் திசையிலுள்ள காட்டுப் பிரதேசத்துக்கு ஒரு பாலத்தைப் போல் அது விழுக் கூடும். இல்லா விட்டாலும், வெள்ளம் மரத்தை அடித்துக் கொண்டு போய் எங்கேயாவது கரையோரத்தில் சேர்க்கும். மரம் விழுந்தவுடனே அதன் மேல் தொத்தி ஏறிக் கொண்டால், ஒருவாறு அங்கிருந்து தப்பிப் பிழைக்கலாம்.

அதுவரையில் அக்கோயிலிலேயே இருக்க வேண்டியது தான். தேவியின் கருணையினால் இன்னும் ஒருநாள் பசியாறுவதற்கும் பிரசாதம் மிச்சமிருக்கிறது. மரம் விழும் வரையில், அல்லது வெள்ளம் வ்டியும் வரையில் அங்கேயே பொறுமையுடன் காத்திருக்க வேண்டியதுதான். அதைத் தவிர வேறு என்ன செய்வது?

அவசரப் படுவதில் பயன் ஒன்றுமில்லை. நம்மால் இவ்வுலகில் இன்னும் ஏதோ பெரிய காரியங்கள் ஆக வேண்டியிருப்பதனாலே தான், தேவி ஜகன்மாதா வெள்ளத்தில் சாகாமல் காப்பாற்றியிருக்கிறாள். ஆதலின் மேலே நடக்க வேண்டியதற்கும் துர்க்கா பரமேசுவரியே வழி காட்டுவாள். அல்லவா?

அன்று பகல் சென்றது. இன்னும் ஓர் இரவும் பகலும் கழிந்தன. புயல்தான் சென்ற விடமெல்லாம் அதாஹுதம் செய்து கொண்டே மேற்குத் திசையை நோக்கிச் சென்று விட்டது.

தூவானமும் விட்டு விட்டது. ஆனால் துர்க்கா தேவியின் கோயிலில் அகப்பட்டுக் கொண்ட பழுவேட்டரையருக்கு மட்டும் விடுதலை கிட்டவில்லை. கொள்ளிடத்து வெள்ளம் குறைந்தது போலக் காணப்பட்டது. ஆனால் உடைப்பு வரவரப் பெரிதாகிக் கொண்டு வந்தது. கோயிலைச் சுற்றிச் சென்ற வெள்ளம் குறையவில்லை. ஆழம் என்னமோ அதிகமாகிக் கொண்டே இருக்க வேண்டும். அதை அளந்து பார்ப்பது எப்படி? அல்லது அந்த உடைப்பு வெள்ளத்தில் இறங்கி நீந்திச் செல்லுவது பற்றித்தான் நினைத்துப் பார்க்கவும் முடியுமா?

கடைசியாக, அன்று சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் பழுவேட்டரையர் எதிர் பார்த்தபடி, கோயிலுக்கு எதிரேயிருந்த பெரும் வேப்பமரமும் விழுந்தது. விழுந்த மரம் நல்ல வேளையாக உடைப்பு வெள்ளத்தின் மேற்குக் கரையைத் தொட்டுக் கொண்டு கிடந்தது. அதன் வழியாக அப்பால் செல்வதற்குப் பழுவேட்டரையர் ஆயத்தமானார். இரவிலே புறப்பட்டு அந்தக் காட்டுப் பிரதேசத்தில் எப்படி வழி கண்டு பிடித்துப் போவது என்பது பற்றிச் சிறிது தயங்கினார். சில கண நேரத்துக்கு மேல் அந்தத் தயக்கம் நீடித்திருக்கவில்லை. உடனே புறப்பட வேண்டியதுதான் என்று முடிவு செய்து, தம்மை அந்தப் பேராபத்திலிருந்து காத்தருளிய துர்க்கா பரமேசுவரிக்கு நன்றி தெரிவிப்பதற்காகச் சந்நிதியை நெருங்

கினார். சந்நிதியில் விழுந்து நமஸ்கரித்தார்.

அச்சமயத்தில் அவர் உடம்பு சிலிர்க்கும் படியான குரல் ஒன்று கேட்டது. முதலில் துர்க்கையம்மன்தான் பேசுகிறாளோ என்று தோன்றியது. பிறகு, இல்லை; குரல் வெளியில் சிறிது தூரத்துக்கு அப்பாலிருந்து வருகிறது என்று தெளிவடைந்தார்.

"மந்திரவாதி! மந்திரவாதி!" என்று கூப்பிட்டது அந்தக் குரல்.

பிறகு மறுபடியும், "ரவிதாஸா! ரவிதாஸா!" என்று மீண்டும் கூவியது. முன் எப்பொழுதோ கேட்ட குரல் போலத் தோன்றியது.

பழுவேட்டரையர் எழுந்து முன் மண்டபத்துக்கு வந்தார். தூண் மறைவில் நின்று குரல் வந்த இடத்தை நோக்கினார். உடைப்பு வெள்ளத்துக்கு அப்பால், விழுந்த வேப்ப மரத்தின் நுனிப்பகுதிக்கு அருகில், ஓர் உருவம் நின்று கொண்டிருக்கக் கண்டார். "மந்திரவாதி! மந்திரவாதி!" என்னும் கூக்குரல், அவருக்குத் தம் சகோதரன் முன்னொரு சமயம் கூறியவற்றை ஞாபகப் படுத்தியது. துர்க்காதேவியின் கருணையினால் தாம் அதுவரை அறிந்திராத மர்மத்தை அறிந்து கொள்ளப் போகிறோமோ என்ற எண்ணம் உதித்தது. ஆதலின் அசையாமல் நின்றார்.

அக்கரையில் நின்ற உருவம் விழுந்த வேப்ப மரத்தின் வழியாக உடைப்பு வெள்ளத்தைக் கடந்து வரத் தொடங்கியதைப் பார்த்தார்.

தம் வாணாளில் அதுவரை செய்திராத ஓர் அதிசயமான காரியத்தைப் பழுவேட்டரையர் அப்போது செய்தார். கோவில் முன் மண்டபத்தில் சட்டென்று படுத்துக் கொண்டார். தூங்குவது போலப் பாசாங்கு செய்தார்.

ரவிதாஸன் என்னும் மந்திரவாதியைப்பற்றி அறிந்து கொள்ளும் ஆசை அவரை அவ்வளவாகப் பற்றிக் கொண்டது. அவன் நந்தினியைப் பார்ப்பதற்காகச் சில சமயம் அவர் அரண்மனைக்கு வந்த மந்திரவாதியாகவே இருக்க வேண்டும். அவனுக்கும் நந்தினிக்கும் உள்ள தொடர்பு உண்மையில் எத்தகையது? அவனை இந்த இடத்தில் இந்த வேளையில் தேடி அலைகிறவன் யார்? எதற்காகத் தேடுகிறான்? இதையெல்லாம் தெரிந்து கொண்டால், ஒரு வேளை நந்தினி தம்மை உண்மையிலேயே வஞ்சித்து வருகிறாளா என்பதைப் பற்றி அறிந்து கொள்ளலாம் அல்லவா? ரவிதாஸன் மட்டும் அவரிடம் சிக்கிக் கொண்டால், அவனிடத்திலிருந்து உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் விடுவதில்லை என்று மனத்தில் உறுதி கொண்டார்.

தூங்குவதுபோல் பாசாங்கு செய்தவரின் அருகில் அந்த மனிதன் வந்தான். மீண்டும் "ரவிதாஸா! ரவிதாஸா!" என்று கூப்பிட்டான்.

ஆகா! இந்தக் குரல்? கடம்பூர் மாளிகையில் முன்னொரு தடவை வேலனாட்டம் ஆடிக் குறி சொன்னானே, அந்தத் தேவராளன் குரல்போல அல்லவா இருக்கிறது? இவனுடைய கழுத்தைப் பிடித்து இறுக்கி உண்மையைச் சொல்லும்படி செய்யலாமா? வேண்டாம்! இன்னும் சற்றுப் பொறுப்போம். இவன் மூலமாக மந்திரவாதி ரவிதாஸனைப் பிடிப்பதல்லவா முக்கியமான காரியம்?

"மந்திரவாதி! சூரியன் அஸ்தமிப்பதற்குள்ளேயே தூங்கி விட்டாயா? அல்லது செத்துத் தொலைந்து போய் விட்டாயா?" என்று சொல்லிக் கொண்டே வந்த மனிதன் பழுவேட்டரையரின் உடம்பைத் தொட்டு அவருடைய முகம் தெரியும்படி புரட்டினான். அப்படிப் புரட்டியும் பழுவேட்டரையர் ஆடாமல் அசையாமல் கிடந்தார்.

பின்மாலையும் முன்னிரவும் கலந்து மயங்கிய அந்த நேரத்தில், மங்கலான வெளிச்சத்தில், தேவராளன் (ஆமாம்; அவனேதான்!) பழுவேட்டரையரின் முகத்தைப் பார்த்தான். தன் கண்களை நன்றாகத் துடைத்துக் கொண்டு இன்னொரு தடவை உற்றுப் பார்த்தான். பீதியும், பயங்கரமும், ஆச்சரியமும், அவநம்பிக்கையும் கலந்து தொனித்த ஈனக் குரலில் "ஊ ஊ!" "ஓ! ஓ!" "ஆ! ஆ!" என்று ஊளையிட்ட வண்ணம் அவ்விடத்தை விட்டு ஓட்டம் பிடித்தான்!

பழுவேட்டரையர் கண்ணைத் திறந்து நிமிர்ந்து உட்கார்ந்து பார்ப்பதற்குள்ளே அவன் கோயிலுக்கு முன்னாலிருந்த பலி பீடத் திறந்த மண்டபத்தை இரண்டு எட்டில் தாண்டிச் சென்று, வேப்பமரப் பாலத்தின் மீது வேகமாக நடக்கத் தொடங்கி விட்டான்.

திரும்பிப் பார்ப்பதற்குக் கூட ஒரு கணமும் நில்லாமல் அதி விரைவாக அம் மரத்தின் மீது ஓட்டமும் தாவலுமாகச் சென்று அக்கரையை அடைந்தான். மறுகணம் புதர்களும் மரங்களும் அடர்ந்த காட்டில் மறைந்து விட்டான்.

பழுவேட்டரையர் அவன் மிரண்டு தாவி ஓடுவதைக் கண் கொட்டா வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார். காட்டில் அவன் மறைந்ததும், சமயம்நேர்ந்தபோது அவனைப் பிடிக்காமல் தாம் விட்டுவிட்டது தவறோ

என்ற ஐயம் அவரைப் பற்றிக் கொண்டது. உடனே, அவரும் குதித்து எழுந்து ஓடினார். தேவராளனைப் போல் அவ்வளவு வேகமாக மரப் பாலத்தின் பேரில் அவரால் தாவிச் செல்ல முடியவில்லை. மெள்ள மெள்ளத் தட்டுத் தடுமாறிக் கிளைகளை ஆங்காங்கு பிடித்துக் கொண்டுதான் போக வேண்டியிருந்தது.

அக்கரை அடைந்ததும் காட்டுப் பிரதேசத்துக்குள்ளே ஒற்றையடிப் பாதை ஒன்று போவது தெரிந்தது. அதை உற்றுப் பார்த்தார். சேற்றில் புதிதாகக் காலடிகள் பதிந்திருந்தது தெரிந்தது. அந்த வழியிலேதான் தேவராளன் போயிருக்க வேண்டுமென்று தீர்மானித்து மேலே விரைவாக நடந்தார்.

அது முன்னிலாக் காலமானாலும் வானத்தில் இன்னும் மேகங்கள் சூழ்ந்திருந்தபடியால் நல்ல இருட்டாகவே இருந்தது. காட்டுப் பிரதேசத்தில் என்ன வெல்லாமோ சத்தங்கள் கேட்டன. புயலிலும் மழையிலும் அடிபட்டு, கஷ்டங்களுக்கு உள்ளாகியிருந்த காட்டில் வாழும் ஜீவராசிகள் கணக்கற்றவை மழை நின்றதினால் ஏற்பட்ட மகிழ்ச்சியைத் தெரிவித்துக் குரல் கொடுத்துக் கொண்டு அங்கு மிங்கும் சஞ்சரித்தன.

ஒற்றையடிப் பாதை சிறிது தூரம் போய் நின்று விட்டது. ஆனால் பழுவேட்டரையர் அத்துடன் நின்றுவிட விரும்பவில்லை. அன்றிரவு முழுதும் அந்தக் காட்டில் அலைந்து திரியும்படி நேர்ந்தாலும் அந்தத் தேவராளனையும் அவன் தேடிப் போகும் மந்திரவாதி ரவிதாஸனையும் பிடித்தே தீருவது என்று தீர்மானித்துக் கொண்டு, காட்டுப் புதர்களில் வழிகண்ட இடத்தில் நுழைந்து சென்றார்.

ஒரு ஜாம நேரம் காட்டுக்குள் அலைந்த பிறகு சற்றுத் தூரத்தில் வெளிச்சம் ஒன்று தெரிவதைப் பார்த்தார். அந்த வெளிச்சம், நின்ற இடத்தில் நில்லாமல் போய்க் கொண்டிருந்தபடியால், அது வழி கண்டு பிடிப்பதற்காக யாரோ கையில் எடுத்துச் செல்லும் சுளுந்தின் வெளிச்சமாகவே இருக்க வேண்டும்.

அந்த வெளிச்சத்தைக் குறி வைத்துக் கொண்டுவெகுவிரைவாகநடந்தார். வெளிச்சத்தை நெருங்கிச் சென்று கொண்டிருந்தார்.

கடைசியாக, அந்தச் சுளுந்து வெளிச்சம் காட்டின் நடுவே ஒரு பாழடைந்த மண்டபத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுவது போல் காட்டி விட்டு உடனே மறைந்தது. அந்த மண்டபம் திருப்புறம் பயத்திலுள்ள பிருதிவிபதியின் பள்ளிப்படைக் கோவில்தான் என்பதைப் பழுவேட்டரையர் பார்த்த உடனே தெரிந்து கொண்டார். பள்ளிப்படையை நெருங்கி ஒரு பக்கத்துச் சுவர் ஓரமாக நின்று காது கொடுத்துக் கேட்டார்.

ஆமாம்; அவர் எதிர்பார்த்தது வீண் போக வில்லை. இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தது கேட்டது. உரத்த குரலில் பேசியபடியால் பேசியது தெளிவாகக் கேட்டது.


"மந்திரவாதி! உன்னை எத்தனை நேரமாகத் தேடிக் கொண்டிருக்கிறேன், தெரியுமா? நீ ஒரு வேளை வர முடியாமற் போய் விட்டதோ, அல்லது உன்னையுந்தான் யமன் கொண்டு போய் விட்டானோ என்று பயந்து போனேன்!" என்றான் தேவராளன்.

மந்திரவாதி ரவிதாஸன் கட கடவென்று சிரித்தான்.

"யமன் என்னிடம் ஏன் வருகிறான்? சுந்தர சோழனையும் அவனுடைய இரண்டு பிள்ளைகளையுந்தான் யமன் நெருங்கிக் கொண்டிருக்கிறான். நாளைய தினம் அவர்களுடைய வாழ் நாள் முடிந்து விடும்!" என்றான் மந்திரவாதி.


அச்சமயம் வானத்தையும் பூமியையும் பிரகாசப்படுத்திக் கொண்டு மின்னல் ஒன்று மின்னியது.

(தொடரும்)





— புன்னகை மன்னன்.



இரட்டைச் சிறையில் சிக்கிய சிட்டுக்கள்

மெரீனா

அன்புள்ள ஆர்.கே. நாராயண் தாத்தாவுக்கு,

உங்களை எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும். 'சுவாமி அண் ஃப்ரெண்ட்ஸ்' கதை படிச்சதிலிருந்து உங்களை நேர்லே பார்க்கணும்னு கொள்ளை ஆசை. அப்புறம் டீ. வி. யிலே 'மால்குடி டேஸ்'லே சமத்து 'சுவாமி'யை பார்த்தப்புறம் நான் உங்க ரசிகன் ஆயிட்டேன். ஏன்னா, நீங்கதான் எங்களைப்பத்தி நல்லா புரிஞ்சு வெச்சுக்கிட்டிருக்கிங்க.,எங்களோட, ஆசை, விளையாட்டுப்புத்தி, விஷமத்தனம், கஷ்டம், ஏக்கம் எல்லாமே உங்களுக்குத்தான் தெரியுது....

இப்பக்கூட டெல்லி பார்லிமெண்ட்லே பேசறப்ப, நாங்க முதுகுலேயும் கைலேயும் மூட்டை சொமந்துக்கிட்டு தினமும் ஸ்கூல் போற கண்றாவிக் காட்சியை போட்டோ பிடிச்சமாதிரி அப்படியே படம் பிடிச்சு காட்டியிருக்கிங்க. எங்கப்பா படிச்சுக்காட்டி அர்த்தம் சொன்னார். எங்களை கிலோ கிலோவா புஸ்தகம் சொமக்கவெக்கறதும், மந்திரிகளும் பெரிய லீடர்களும் வந்தா, எங்களை மணிக்கணக்கா வெயிலிலே நிக்க வெச்சு 'வணக்கம்' செய்ய வெக்கறதும் ரொம்பத் தப்புன்னு சொல்லியிருக்கிங்க. கழுதை மாதிரி புஸ்தக மூட்டை சொமக்கறோம்.. கழுதை மாதிரி வெயிலிலே நிக்கறோம்... அதனாலே வீட்டிலே அம்மா என்னைக் 'கழுதை'ன்னு திட்டினாலோ, ஸ்கூல்லே மிஸ், 'டூ ஆஸ்'னு கூப்பிட்டாலோ நான் வருத்தப் படறதில்லே... அவங்க நிஜத்தைத்தானே சொல்றாங்க...!

நீங்க எங்களுக்காக மனசு இளகிப் பேசினதைப்பத்தி, பெரியவங்கதான் நிறைய 'காமென்ட்' அடிக்கறாங்க. அவங்கதான் பேப்பர்லே எழுதறாங்க. நீங்க பேசினதைப் பத்தி சின்னவங்க ஒண்ணுமே சொன்னதாத் தெரியலே. எங்க விஷயத்தைப் பத்தி நாங்க தானே அபிப்பிராயம் சொல்லணும்... அதனாலே என் ஃப்ரெண்ட்ஸ் சார்பிலே உங்களுக்கு 'தாங்க்ஸ்' சொல்லத்தான் இந்த லெட்டர் எழுதறேன்.

தாத்தா, சின்னவங்களைப் பார்த்துப் பெரியவங்க எப்பப் பார்த்தாலும் படி படின்னு உயிரை வாங்கக் கூடாது, விளையாடவும் கனவு காணவும் அவர்களுக்கு டயம் கொடுக்கணும்னு சொல்லியிருக்கிங்க பாருங்க, அதுக்காகவே உங்களுக்கு ஒரு சாக்லேட் பிரசன்ட் பண்ணணும்னு எனக்கு ஆசையாயிருக்கு!

தாத்தா, அம்மா எங்களைத் தூங்க விடவே மாட்டேங்கிறாங்க. தூங்கினாத்தானே கனவு காண முடியும்! காலையிலே ஏழு மணிக்கெல்லாம் எழுப்பி விட்டுடறாங்க... உடம்புலே கொஞ்சம் சுறுசுறுப்பு வர்றதுக்காக ஃப்ளாட்லே இருக்கிற பசங்களோட கிரிக்கெட் விளையாடினா 'ஓ'ன்னு கூச்சல் போடறாங்க... 'சரி'ன்னு சைக்கிள் விட்டா அதுக்கும் கத்தறாங்க... சாயந்திரம்தான் விளையாடணுமாம். சாயந்திரம் ஸ்கூல் விட்டு வந்தப்புறமாவது விளையாட முடியும்னு நினைக்கிறீங்களா? 'ஹோம் ஒர்க்' செய்துட்டுத்தான் விளையாடப் போகணும்பாங்க... (சே, இந்த 'ஹோம் ஒர்க்'கை யார் தாத்தா கண்டுபிடிச்சாங்க?) ஜெயில்லேருந்து தப்பிச்சுக்கிட்டு ஹாய்யா வீட்டுக்கு ஓடி வந்தா வீட்லேயும் ஜெயில்!

தப்பித் தவறி விளையாட அனுமதிச்சாலும் கரெக்டா ஆறு மணிக்கெல்லாம் உள்ளே வந்து படிக்க உட்காரணும்னு கண்டிஷன் போடுவாங்க. மணியைப் பார்த்து விளையாடறதுக்கு நாங்க என்ன டெஸ்ட் மாட்சா விளையாடறோம்? அரை மணியிலே என்ன விளையாட முடியும், நீங்களே சொல்லுங்க தாத்தா. இந்த ராக்கி இருக்கான் பாருங்கோ, அவன் அவுட்டே ஆக மாட்டேன்னு அழுவல் அடிப்பான்.

அவன்கிட்டே சண்டைபோட்டு,எனக்குப் பாட்டிங் சான்ஸ் வர்றதுக்குள்ளே மம்மி 'வாடா வாடா'ன்னு போர் அடிக்க ஆரம்பிச்சுடுவாங்க. ராக்கி மேலே இருக்கிற கோபமெல்லாம் இப்போ மம்மி மேலே திரும்பிடும். 'உடனே உள்ளே வந்து ஒரு மணி நேரம் படிச்சாத்தான் டீ. வி. பார்க்க விடுவேன்'னு பயமுறுத்துவாங்க...

இந்த ஸ்டூடண்ட்ஸ் பொழைப்பு இருக்கே, இது சுத்த மோசம்... எங்க இஷ்டம்னு ஒண்ணுமே இருக்கக் கூடாதாம்... உங்களுக்குத் தெரியாததையா நான் சொல்லிடப் போறேன்...

அன்புள்ள
கோகுல்.

என் தங்கை

செமை மசாலாவுக்கு ஏற்ற செமார்த்திக் கதை. சத்யா மூவிஸ் முத்திரை சரியாய்க் குத்தப்பட்ட சித்திரம்.

ஆக்ஷன் கிங் அர்ஜுனின் நாடி நரம்பையெல்லாம் நன்றாய்ப் பிழிந்தெடுத்திருக்கிறார்கள். எடுத்த எடுப்பிலேயே லோகல் லாரி டிரைவர் அர்ஜுனும் பிரபல ஃபைட்டிங் கிங்கான ஓர் ஆந்திர கேசரியும் மோதுவதாய் அறிவித்து விட, அந்தக் காட்சியே கதையின் போக்கை ஓரளவு நிர்ணயம் பண்ணி விடுகிறது.

அர்ஜுன் வெளியே போய் விட்டுத் திரும்பும்போதெல்லாம் அவர் தங்கை வைஷ்ணவி வெந்நீரும் மஞ்சள் விழுதுமாய்க் காத்திருந்து உபசாரம் பண்ணுவது வழக்கம் என்பதைக் கேள்விப்பட்டு, அவரிடம் மனசைப் பறிகொடுத்த கல்லூரித் தோழி பணக்காரி கௌதமி, தனக்கும் மஞ்சள் அரைக்கக் கற்றுக் கொடுக்கும்படி கேட்டுக் கற்றுக் கொள்வது நயமான வேடிக்கை. வைஷ்ணவியையும் கௌதமியையும் கல்லூரித் தோழிகளாக்கி சோஷலிசப் பாலம் போட்டிருப்பது இதம்.

பிரவேசத்திலேயே தான் ரொம்பத் துணிந்த கட்டை என்று நம்ப வைத்திருக்கிறார் கௌதமி. ராகிங் பண்ண வரும் மாணவர்களிடம் தான் கிஸ் கொடுக்கத் தயாராய் இருப்பதாயும் முதலில் யாருக்குக் கொடுப்பது என்று அவர்களுக்குள் தீர்மானித்துக் கொண்டு வரும்படி சொன்னாலும் சொன்னார்; அந்த நாலு பேரும் முதலுக்குப் போட்டியிட்டுத் தங்களுக்குள் அடித்துக் கொண்டு சாய்கிறார்களே — புராண காலத்து உத்திதான் என்றாலும், அதைப் பார்த்துக் கௌதமி சிரிக்கும் சிரிப்பு. அதில் புதுமை சேர்கிறதே!

அடேங்கப்பா, கௌதமி போலீஸ் அதிகாரியாய் வந்த பிறகு என்ன மிடுக்கு! சும்மா பறந்து பறந்து அவர் தாக்குவதாகட்டும்; உதவிகளுக்கு உத்தரவு போடும் அதிகாரத் தோரணையாகட்டும் — இதனிடம் வாலாட்ட முடியுமா என்று பின்வாங்க வைக்கவில்லையோ?

இத்தனை புத்திக் கூர்மையுள்ள கௌதமி அத்தனை நம்பிக்கையோடு காதலித்த அர்ஜுனைப் பற்றித் தீர விசாரிக்காமல் திடுதிப்பென்று அவரைக் கேடி என்று முடிவு கட்டி விட்டாரே, எப்படி என்று ஒரு சாதாரணக் கேள்வி எழும் போது ஏதோ டொக்கு விழுந்த மாதிரி படுகிறது.

நரியென்றால் நரி, அப்படி ஒரு நரி வினு சக்ரவர்த்தி. ஒரே மகளிடம் உயிரையே வைத்திருக்கிறாராம். காரெக்டர் கனத்துக்குச் சரிதான். ரொம்பத்தான் கெட்டிக்காரத்தனமாய் அர்ஜுனுக்குக் கேடிப் பட்டம் சூட்டி, மகள் மனத்திலிருந்து அவரைத் தூக்கியெறிந்து விடுகிறார். அத்தோடு ஒதுங்கி விடாமல், மெனக்கெட்டு ஜெயிலுக்குப் போய் அர்ஜுனிடம், ''கேவலம் லாரி டிரைவர் நீ. ஒரு கோடீசுவரனுக்கு மாப்பிள்ளையாய் வர ஆசைப்படலாமா? அதுதாண்டா திட்டம் போட்டு உன்னை ஜெயிலுக்கு அனுப்பினேன்,'' என்று கொக்கரிப்பாரோ? தேவையா?

அர்ஜுனுக்கு விசுவாசமான நண்பராய் இருந்து, அர்ஜுன் சிறை சென்ற பிறகு அவரது அருமைத் தங்கைக்குப் பக்கா வேலியாய் இருந்து, வேலியே பயிரை மேய்வதாய் ஊராரின் அபவாதத்துக்கு ஆளான போது அந்த அபவாதத்திலிருந்து அந்தப் பெண்ணைக் காப்பாற்றிக் கோவிலில் ஊரறியத் தாலி கட்டி அவரை ஏற்றுக் கொள்வது வரை ஓர் அப்பழுக்குக் கூற முடியுமா நாசரைப் பற்றி? ஏதோ நினைத்துக் கொண்டு மாற்றியதைப் போலிருக்கிறது அப்புறம் அவரது காரெக்டர்.

இப்படியே வேறு சில கேரக்டர்களிலும் சொட்டை தெரிந்தாலும் தொய்வு ஏற்படாமல் தொடர்ந்து, திருப்பங்களுடன் விறுவிறுப்பூட்டிய விதத்தில் இது ஒரு 'அட!' படம்தான்.

— பி. எஸ். எஸ்.



சுக போகத் தீவுகள்

கிருஷ்ணமூர்த்தி தனிமைப்பட்டுப் போய் நின்றான்.

மாலைகளுடன், துண்டுகளுடன், கூட்டம் விநோதினியின் அறையை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்ததை அவன் பார்த்தான். கூட்டத்தின் இயல்பென்பது இது தான். கூட்டத்துக்கு அவ்வப்போது வழி படத் தலைவர்கள் வேண்டும். தலைவர்கள், தலைவர்களாய் இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை. யாரேனும் ஒரு புதியவர்— அடிக்கடி புதிய புதிய தலைவர்கள் அக்கூட்டத்துக்கு வேண்டியிருக்கிறது. தலைவர்கள் ஆண்களாகவும் இருக்கலாம். பெண்களாகவும் இருக்கலாம். கூட்டத்துக்குப் பால் பேதம் இல்லை. பெண்ணாய் இருந்தால் கூடுதல் சிறப்பு. தாய் படிமம் இருக்கும்.

ஒரு முறை இதே விநோதினி சொன்னாள்:

"நெற்றி வரைக்கும் வளர்ந்து வந்த முடி, நெற்றியில் ஏன் வளரவில்லை? ஏனெனில், தரையில் நெற்றிபட விழுந்து வணங்குவதால். தரைபட்டுத் தரைபட்டு நெற்றியில் முடி முளைக்கவில்லை. கிருஷ்ணமூர்த்தி! எவரையும் எப்போதும் தரையில் அங்கம் முழுதும் பட விழுந்து வணங்கும் ஜாதி தமிழரைத் தவிர வேறு யாரும் உலகத்தில் இருக்கிறார்களா?"

சொன்னவளையே இந்தக் கூட்டம் விழுந்து வணங்கிக் கொண்டிருக்கிறது சேவிப்பதே வாழ்வின் லட்சியமாகக் கொண்ட கூட்டம். அவனுக்கு மனம் கசந்தது. இது என்ன சந்தோஷம்? அறியாமையையே குலச் சொத்தாகக் கொண்ட மனிதர்கள் தம்மைத் தொழுவதில் என்ன ஆனந்தம் இருக்க முடியும்...?

...தன்னைப் போலவே இரு கைகளும், இரு கால்களும் கொண்ட மனிதன் தன்னைத் தொழுவதில் மனிதனுக்கு இயல்பாக உள்ள அகந்தை சீராட்டப்படுகிறது. ஆகவே, இந்தப் பணிகளில், பாராட்டில், கோஷத்தில், கூட்டம் சேர்தலில் இருக்கிற பரஸ்பர போஷிப்பு முக்கியம் என்றாகி விட்டது. பெரிய தலைவனை நெருங்கி வழி படுகிறவன் குட்டித் தலைவன். குட்டித் தலைவனை நெருங்கி இருப்பவன் கவனிப்புக்குரிய புள்ளி. எல்லாருக்கும் தன்னைச் சீராட்டிக் கொள்வதில், பிறரால் சீராட்டப்படுவதில் மகிழ்ச்சி. அரசியல், கலாசாரக் குழுக்களின் வேர் இதுதான்.

...அவன் மனம் சமாதானம் அடைந்தது. யோசித்தவாறே சங்கர மடத் தெரு முனைக்கு அவன் வந்திருந்தான். டீ சாப்பிட வேண்டும் போல் இருந்தது. தெருமுனை ஸ்டாலில், ஒரு கப் ஸ்ட்ராங், சர்க்கரை குறைவு டீ வாங்கி, நின்று கொண்டே, தெருவைப் பார்த்தவாறு நிதானமாக அருந்தினான் அவன். இப்படி நடுவீதியில் நின்று டீ குடித்து எத்தனை காலம் ஆகிவிட்டது? நட்சத்திர ஹோட்டல்களில், ஜீவனற்றுப் பரிசாரகர்கள் போலி மரியாதையோடு குனிந்து குனிந்து செய்யும் மரியாதைகளை வாங்கிக் கொண்டு, சடங்கு மாதிரி சாப்பிட்டுத் திரும்புகிற வெறுமை இங்கே இல்லை. ரத்தமும் சதையுமாக இயங்குகிற உலகத்தின் மத்தியில் நாம் இருக்கிறோம் என்கிற உணர்வு ஏற்பட்டது. உத்தமபாளையத்துப் பாய்க் கடையில் டீ குடிக்கிற உணர்வே அவனுக்கு ஏற்பட்டது.

அவனது மோன நிலையைக் கலைத்தது ஒரு குரல்.

"வணக்கம் தலைவரே, எங்கே இப்படி?"

கட்சிக்காரர்கள் சிலர் கழுத்தில் துண்டணிந்து, வெள்ளைச் சட்டை, வேட்டிகளோடு நின்று கொண்டிருந்தனர். மரியாதையை முன்னிட்டு, கொஞ்ச தூரம் தள்ளி நின்று கொண்டிருந்தனர், அவர்கள்.

"சும்மா, ஆபீசுக்கு வந்தேன். காலார நடக்கலாம்னு இங்கே வந்தேன்."

"அம்மா ஆபீசுக்கு வந்து உக்காந்துட்டாங்களா?"

"எந்த அம்மா?"

"அதுதான் தலைவரே, விநோதினி அம்மா."

அவர்களுள் பெரியவனாகத் தோன்றிய ஒருவன் இடைமறித்துச் சொன்னான்.

"பெயரைச் சொல்லாதேடா, முண்டம்!"

"மனசுல வச்சுக்காதீங்க, அண்ணே, தெரியாம வந்துடுச்சு."

"அதை உடு. அம்மா வந்து குந்தியாச்சு இல்லீங்களா?"

"ஆச்சு."

"அம்மா, எப்படிங்க தலைவரே? எங்களை மாதிரித் தொண்டர்கள் கிட்டே நல்லாப் பேசுவாங்க, இல்லீங்களா?"

"பேசுவாங்க."

"அதான் வேணும். சும்மாவா? நம்ம

பிரபஞ்சன்

கட்சித் தலைவரால நியமிக்கப்படணும்னா சும்மாவா?''

''ரொம்பச் சின்ன வயசிலேர்ந்தே தலைவி அம்மாவுக்கு அரசியல்லே ரொம்ப இஷ்டமாம். நம்ம கோகிலா அம்மாவாலேயும், பெரிய தலைவராலேயும் வளர்க்கப் பட்டவங்க அவங்க. அரசியல்லே கரை கண்டவங்களாமே...?''

''அப்படியா?'' என்றான் கிருஷ்ண மூர்த்தி.

''ஆமா தலைவரே. இன்னொண்ணு கூட உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே. இந்த அம்மாவுக்கு 'டிரெயினிங்' தரணும்னே, பெரிய தலைவர் இவங்களை டில்லிக்கு அனுப்பி வச்சிருந்தாராம். அங்கே மத்திய அரசு பெருந்தலைவர்கள்கிட்டே நேரடியா அரசியல் கத்துக்கிட்டாங்களாம் அம்மா.''

''அப்படியா?''

''ஆமாங்க. பிரதமருக்கே அந்த அம்மா பல யோசனைகள் சொல்லி இருக்காங்களாம்.''

''விநோதினி அம்மா, பிரதமருக்கு ஆலோசனை சொன்னதா உங்களுக்குச் சொன்னது, யார்?''

''என்ன தலைவரே, கிண்டல் அடிக்கிறீங்க? உங்களுக்குத் தெரியாதா?''

''சேச்சே, தெரியாது.''

''அம்மாவைப் பத்தி ''அறிவாளி'' பத்திரிகையில் இந்த மாதிரி செய்தியை எல்லாம் எழுதறாங்களே...?''

''ஓகோ...!''

ஒரு வழியாக அவர்கள் நடந்தார்கள். கிருஷ்ணமூர்த்தி வீடு வந்து சேர்ந்தான். பொதுவாகப் பகல் நேரங்களில் அவன் குடிப்பதில்லை. அன்று என்னவோ குடிக்க வேண்டும் போலத் தோன்றியது. விஸ்கியை எடுத்து வைத்துக் கொண்டு கட்டிலில் சாய்ந்து அமர்ந்தான்.

இனி தான் என்ன செய்ய வேண்டும் என்று தனக்குள் கேட்டுக் கொண்டான். செய்ய வேண்டியதை மனசுக்குள் பட்டியல் இட்டான். முதலாவது, விநோதினியை இந்தப் பாமர மற்றும் குரூர மனிதர்களிடமிருந்து மீட்டு, தனக்கே தனக்கு என்று வைத்துக் கொள்ள வேண்டும். அதற்காகத் தான் எந்த விலை கொடுக்கவும் தயங்கக் கூடாது. இரண்டாவது, கட்சியில் தன் இடம், தன் எதிர்காலம் குறித்து முடிவுகளை எடுக்க வேண்டும். வரும் தேர்தலில் ஏதாவது ஒரு தொகுதியில் நின்று ஜெயித்து விட வேண்டும். மந்திரிப் பதவி பெரிதல்ல.





அருள்வாக்கு

நமக்கே நாளைக்கு வரலாம்...!

தனி மனிதனுக்குக் கஷ்டம் வருகிறது போலவே ஒரு ஜன ஸமுதாயத்துக்கே பஞ்சம், வெள்ளம், எரிமலை, பூகம்பம், விபத்து முதலான உற்பாதங்கள் ஏற்படுவதிலும் மற்றவர்களுடைய பரோபகார சிந்தனைக்குப் பகவான் வைக்கிற பரீக்ஷையும் சேர்ந்திருக்கும். இப்படி ஒரு பெரிய கஷ்டம் பல பேருக்கு ஏற்படுகிறது என்றால், யாரும் சொல்லாமலே பணத்தாலோ, சரீரத்தாலோ உதவி பண்ண வேண்டும் என்ற எண்ணம் அவரவருக்கும் பொங்கிக் கொண்டு வரவேண்டும். ஸர்க்கார், ரெட்கிராஸ், ராமகிருஷ்ணா மிஷன் முதலானவர்களோடோ, அல்லது தாங்களாகவே ஸங்கம்மாகச் சேர்ந்தோ, அல்லது தனிப்பட்ட முறையிலோ, எப்படியானாலும் இந்த மாதிரியான Calamity களில் ஒவ்வொருவரும் பணிசெய்ய வேண்டியது அவசியம். தனி மனிதனின் கஷ்டத்துக்கு மூல காரணம் அவனுடைய பூர்வ கர்மா என்கிறாற் போலவே இப்படிப்பட்ட விபத்துக்களையும் "Natural Calamity" 'இயற்கையின் சீற்றம்' என்று இந்த நாளில் எழுதினாலும் இதெல்லாம் பொதுவாக மநுஷ்ய ஸமூகம் முழுதுமே பண்ணும் பாபத்துக்காகப் பகவான் தருகிற தண்டனைதான் என்று சாஸ்த்ரம் சொல்லும். தண்டனையாகப் பெற்று வருத்தப்பட்டுக் கொண்டேதான் அந்தப் பாபத்தை நாம் தீர்க்க வேண்டும் என்றில்லை. இம்மாதிரி ஸமயங்களில் நாம் பண்ணுகிற மனப்பூர்வமான கஷ்ட நிவாரணத் தொண்டாலும் பாபத்தில் பாக்கியிருப்பதைப் போக்கிக் கொண்டு விடலாம். இப்படித் தொண்டு செய்யாமல் கருங்கல் மாதிரி இருந்தால் அதுவே ஒரு பாபம். இன்றைக்கு ஜன சமூஹத்தின் பிரதிநிதியாக இன்னொருத்தன் வாங்கிக் கொண்ட தண்டனை, கல் மாதிரி இருக்கிற நமக்கே நாளைக்கு வரும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



விரல் சொடுக்கில் அது கிடைத்துவிடும். அதுவே நோக்கமெனில், அதற்காக, அதைக் குறித்து அதை நோக்கியே தான் போக வேண்டும். நான் அரசியலில் இருப்பது மட்டும்தான் தன் குறையாக விநோதினி சொல்லிக் கொண்டிருந்தாள். இப்போது அவளும் சேர்ந்து கொண்டாள். ஆகவே பிரச்னை ஒன்றும் இனி இருக்க வாய்ப்பில்லை. இருந்தால் சேர்ந்து இருப்போம். இல்லையெனில் அரசியலில் இருந்து சேர்ந்து தலை முழுகுவோம்.

ஒரு முடிவுக்கு வந்ததும், அவனுக்குத் திருப்தியாக இருந்தது. அதே சமயம் அவனைப் பார்க்கவென்று மாமா வந்திருப்பதாகச் செய்தி வந்தது. மாமாவின் பெயரைக் கேட்டதும் ஒரு கணம் மனம் திடுக்கிடத்தான் செய்தது. எனினும் அவன் கீழே இறங்கி வந்தான். ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்திருந்தார் மாமா.

''வாங்க மாமா'' என்றபடி அவர் எதிரில் அமர்ந்தான் கிருஷ்ணமூர்த்தி.

மாமா சட்டென்று பத்து வயது அதிகமானவர் போல் தளர்ந்து போயிருந்தார். நரைமுடி கூட அதிகம் ஏற்பட்டு விட்டது போல் அவனுக்குத் தோன்றியது. இளைத்துக் கூடப் போயிருந்தார் அவர்.

''சௌக்கியமா, கிருஷ்ணமூர்த்தி?''

''இருக்கேன், மாமா.''

''முதல்வர் என்ன சொல்கிறார்?''

''எது விஷயமாக?''

''என் விஷயமாகத்தான். சி.பி.ஐ. என் வீடு, அலுவலகம், மதுரை வீடு எல்லா இடத்திலும் ஒரே சமயத்தில் ரெய்டு செய்தார்களே, அது பற்றி?''

''கவலைப்பட வேண்டாம் என்று சொல்லச் சொன்னார். எதிர்க்கட்சித் தலைவர் வீட்டுக்குள்ளேயே போலீஸ் புகுந்து 'ரெய்டு' நடத்தவில்லையா? தேவை இருக்கோ, இல்லையோ, அரசுக்கு வேண்டாதவர் வீட்டுக்குள் புகுந்து சோதனை என்ற பெயரில் அட்டகாசம் செய்வதை, அரசின் கருணையை எதிர்பார்ப்பவர்கள் செய்வது உங்களுக்குத் தெரியாதா? அதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளாதீர்கள். ஆமாம். வீடு மாறி இருக்கிறீர்களாமே?''

''ஆமாம். என் மனைவி கமலா என்னுடன் சேர்ந்து வாழ வந்து விட்டாள். மைலாப்பூரில், கபாலி கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு வீடு எடுத்திருக்கிறோம்.''

''அந்த அம்மா உங்களுடன் கோபித்துக் கொண்டு தனியா வாழ்ந்தார்களே?''

''ஆமாம். நான் சௌகரியமாக, பேர் சொல்லும்படி, ஆனால் தப்பாக வாழ்ந்த காலத்தில், தப்பான மனிதர்களுடன் வாழ்ந்த காலத்தில், என்னுடன் அவள் இல்லை. நியாயம்தானே. இப்போது என் வாழ்க்கை சிக்கலில் இருக்கிறது. ஆகவே எனக்குத் துணையாக வாழ வந்திருக்கிறாள். மனிதர்களும் உலகத்தில் இருக்கிறார்கள் என்பது உண்மைதானே?''

கிருஷ்ணமூர்த்திக்கு அவமானமாக இருந்தது. மாமாவின் வீழ்ச்சியில் அவனுக்கும்

பங்கு உண்டுதானே?

"என் மேல் உங்களுக்குக் கோபம் இருக்கும்"...

மாமா தலையை அசைத்தார்.

"சொல்லியிருக்கிறார்கள், தெரியுமா? தீதும் நல்லதும் பிறர் கொடுக்க வருவதில்லை. நான் யாரையும் இப்போதெல்லாம் வெறுப்பது இல்லை. நீ என்ன செய்வாய்? அந்தப் பெரிய விளையாட்டில் நீ ஒரு சிறிய ஆள்தானே. பதினோரு பேர் ஆடும் கால்பந்தாட்டத்தில், யாரோ ஒருவர்தான் 'கோல்' போட முடியும். அந்த ஒருவனுக்கு மற்றவர்கள் அவரவர் அளவில் உதவி செய்ய வேண்டும். அதுதானே முறையும் ஒழுங்கும். களத்தில் இறங்கிய பிறகு ஆடித்தானே ஆக வேண்டும். வீரனுக்கு இலட்சியம்தான் குறி. பந்தபாசம் நட்பு, உறவு எல்லாம் அவனுக்கு விஷயமே அல்ல. வெற்றி மட்டும் அவன் அடைய வேண்டிய பாதை. அது மட்டுமல்ல! யாரை யார் வீழ்த்த முடியும் என்கிறாய்? இதெல்லாம் மனித எத்தனமே இல்லை."

மாமா சொல்லி விட்டுச் சிரித்தார்.

அவர் முகத்தில் ஆசை, துக்கம், கோபம் எதுவும் இல்லை. அனைத்தையும் கடந்து விட்டவராக இருந்தார் அவர்.

"உங்களுக்குத் தெரியுமா, விநோதினி கட்சியில் முக்கியஸ்தர் ஆகியிருக்கிறாள்."

"ஆக வேண்டியதுதானே? அவளது பங்கும் அரசியலுக்கு வேண்டும்தானே?"

"இல்லை. அவளுக்கு அரசியல் பிடிக்காது என்று சொல்லிக் கொண்டிருந்தாள்."

மாமா அமைதியாய் இருந்தார்.

"கோகிலாவைப் பார்த்தீர்களா?"

"இல்லை."

"ஏன்?"

"எதற்கு?"

மாமா எழுந்தார்.

"ஒரு நாள் வீட்டுப் பக்கம் வாயேன்"

"வர்றேன் மாமா."

"அப்பா எப்படி இருக்கார்?"

"அவருக்கு என்ன? நல்லாகவே இருக்கார்."

மாமா போய் வெகு நேரம் சென்ற பிறகு, அவனுக்கு விநோதினியிடமிருந்து போன் வந்தது.

"என்னம்மா?"

"ராஜா என்னை இன்று இரவு பத்து மணிக்கு அவர் வீட்டுக்கு அழைக்கிறார்."

"அவன் பெரிய சாராய வியாபாரி."

"தெரியும். ஆனால் முக்கிய கட்சிக்காரராயிற்றே..."

"போகப் போகிறாயா?"

"போகலாமா?"

"உன் இஷ்டம்."

"போகப் போகிறேன். அரசியல் குறித்துப் பேச வேண்டியிருக்கிறது."

"பிறகு, என்னிடம் எதற்குக் கேட்டாய்?"

"ஒருமுறை."

"என்ன முறை?"

"மனைவி என்ன செய்கிறாள் என்பது கணவனுக்குத் தெரிய வேண்டும்தானே.."

"என்ன... என்ன?"


போன் வைக்கப்பட்டு விட்டது.

(தொடரும்)

அமெரிக்காவுக்குத் தலைவலி தரும் நோரிகா!

பனாமா கால்வாய் என்று பள்ளிக்கூடத்தில் படித்தது நினைவிருக்கிறதா? வட அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் ஒரு ரிப்பனைப் போல் இணைக்கிறது பனாமா தேசம். இதனை நோரிகா என்ற சர்வாதிகாரி ஆண்டு வருகிறார். இங்கு சமீபத்தில் தேர்தல் நடந்தது. அதில் நோரிகாவின் பொறுக்கி எடுக்கப்பட்ட வேட்பாளர்கள் அனைவரும் தோற்றனர். எதிர்க்கட்சியினரே பெருமளவு வெற்றி பெற்றனர். உடனே நோரிகா 'தேர்தல் செல்லாது' என்று அறிவித்து, தமது ராணுவத்தை எதிரிகள் மீது ஏவி விட்டார். ராணுவத்தினர் செய்த அக்கிரமங்கள் டி.வி.யில் ஒளிபரப்பாக, அமெரிக்க மக்கள் பெரும் கிளர்ச்சி அடைந்தனர். அவர்கள் கோபத்தை மேலும் அதிகரித்தது என்னவெனில், அந்நாள் வரை நோரிகாவை அமெரிக்க அரசு ஆதரித்து வந்ததுதான்! நோரிகா சர்வாதிகாரியாக விளங்கியதோடு, போதைப் பொருள்களைக் கடத்துகிறவர்களுக்கு ஆதரவு தந்து பெரும் செல்வம் ஈட்டியிருக்கிறார் என்பதும் தெரிய வந்தது. போதைப் பொருள்கள் கடத்தலால் மிக அதிகமான பாதிப்புக்கு உள்ளானது அமெரிக்க இளைஞர்களே! ஆனால் அமெரிக்க அரசு இதைக் கண்டும் காணாதது போல் நடந்து கொண்டு வந்தது. காரணம், வேவு பார்ப்பதற்கு அமெரிக்கத் துப்பறியும் துறைக்கு நோரிகா பேருதவியாக இருந்து வந்ததுதான்!

இப்போது அமெரிக்க மக்களுக்கு எல்லா விஷயங்களும் அம்பலமாகிவிட, பலத்த எதிர்ப்பு; விளைவு: பனாமா நாட்டின் பால் அமெரிக்க அரசின் கொள்கையையே ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் மாற்றிக் கொள்ளும்படியாகிவிட்டது! 'நோரிகா எப்படியாவது ஒழிந்தால் சரி' என்கிறார் ஜார்ஜ் புஷ்.





Enterprise/GS/153Tm

மாநில முதல் மாணவர்:



* குணசேகரன்

வாழ்ந்த அனுபவத்தின் வார்த்தைப் பாடங்கள்!

நிறைய சிரமங்களுக்கிடையே பெற்றோர்கள் கூலி வேலை செய்து குணசேகரனைப் பத்தாம் வகுப்பு வரை படிக்க வைத்திருக்கின்றார்கள். பத்தாம் வகுப்புக்கு மேல் ஓர் அடி கூட மேலே எடுத்து வைக்க முடியாத வறுமையான சூழ்நிலையில்தான், நண்பர்களிடம் செலவுக்குப் பணம் கடன் வாங்கிக் கொண்டு திண்டிவனத்துக்குப் பக்கத்தில் உள்ள கீழ் எடையாளம் என்ற கிராமத்திலிருந்து நம்பிக்கையோடு சென்னைக்கு பஸ் ஏறியிருக்கின்றார் குணசேகரன். அவரின் நம்பிக்கை வீண் போகவில்லை! நுங்கம்பாக்கம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் தத்துவப் பிரிவில் இடம் கிடைத்தது. ஆனால் தங்குவதற்கும் சாப்பாட்டிற்கும் என்ன செய்வது? அதற்குத் திருவல்லிக்கேணி அன்னதான சமாஜம் கை கொடுத்தது. அங்கு இலவசமாகத் தங்க இடமும், சாப்பிட உணவும் கிடைத்தன. பெற்றோர்களை (அதிகம்) எதிர்பார்க்காமலே படிப்பைத் தொடர்ந்தார் குணசேகரன்.

"விவேகானந்தர், ராமகிருஷ்ணர், ஜே. கிருஷ்ணமூர்த்தி, இவர்கள்தான் என்னைத் தத்துவப் பாடம் எடுக்கத் தூண்டினார்கள்! ப்ளஸ்—டூவில் தத்துவத்திற்குச் சரியான புத்தகங்கள் கிடையாது. அப்படியே கிடைத்தாலும் ரொம்பவும் மேல் மட்டத்தில் இருக்கும். பலமுறை படித்தால்தான் லேசாக நினைவு இருக்கும். நான் கொஞ்சம் கொஞ்சமாய்ப் படித்து மனத்தில் நிறுத்தினேன். எல்லாவற்றிற்கும் மேலாக எங்கள் தத்துவ ஆசிரியர் ஆனந்த சண்முகம் அவர்கள் வாழ்ந்து பெற்ற அனுபவத்தை வார்த்தைகளில் பாடமாக எங்களுக்குத் தந்தார்" என்று கூறுகிறார் குணசேகரன்.



* ஆனந்த சண்முகம்

இவ்வாண்டு பிளஸ்டு தேர்வில் 200க்கு 158 மதிப்பெண்கள் பெற்று மாநிலத்திலேயே முதலாவதாக வந்துள்ளனர் குணசேகரனும் அவர் வகுப்புத் தோழர் வாசுதேவனும்.

"உங்களின் எதிர்கால லட்சியம்...?" என்று கேட்டோம் குணசேகரனிடம்.

"ஸ்டேட் பஸ்ட் வந்ததற்காக ரூபாய் 300 தருவார்களாம். அதை நம்பித்தான் பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. தத்துவத்திற்கு விண்ணப்பித்துள்ளேன். தொடர்ந்து எம்.ஏ. படிக்க வேண்டும் என்ற ஆசை. தத்துவம் ரொம்ப 'போர்' ஆன சப்ஜெக்ட் என்று சொல்லுவார்கள். அதில் நான் டாக்டரேட் வாங்க வேண்டும் என்று விரும்புகின்றேன்..." என்று கூறினார்.

"சரி, ஸ்டேட் ஃபஸ்ட் வருவதற்கு நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் என்ன...?"

"ஆசிரியர்கள் சொல்லுவதைக் கவனமாகக் கேட்டேன். மற்றபடி இல்லாதவனாகப் பிறந்து விட்டோமே என்ற தவிப்பு. மற்றவர்களைப் போல நாமும் முன்னேற வேண்டும் என்ற வெறி. தியானம் தந்த தெளிவு! தன்னம்பிக்கை—இவைதான் என்னைத் தூண்டின," என்று குணசேகரன் சொன்ன போது அவர் கண்களில் பிரகாசித்த நெஞ்சுறுதி, அவரது எளிய தோற்றத்தைச் சுடர் போல் மின்னச் செய்தது.

— நமது நிருபர்

புகைப்படங்கள்: ஸ்ரீஹரி

'நகைச் சுவைக் கடலில் தள்ளிவிட்டார்!'

வட்டமேஜை

• "அக்னி" ஏவுகணையால் பாதகமோ, சாதகமோ, ஆனால் மிக மிக.. மிக ஏழை நாடான நமது பாரதத்துக்கு இதுபோன்ற விரலுக்கு மீறிய செயல் தேவை தானா என்பது யோசனைக்குரியது. சி.எஸ். கூறியிருப்பது போல் விரிவான விவாதம் ஒன்று இது குறித்து நடந்தால் பல அம்சங்கள் தெரிய வரலாம்.

சென்னை — 33. வி. எஸ். வாசன்.

• 18.6.89 கல்கி அட்டைப் படமும், கட்டுரையும் பாராட்டுக்குரியன! டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் பற்றிய குறிப்புரை அம்சமாக இருந்தது.

திருவனந்தபுரம். நெல்லை. சு. முத்து.

• "அக்னி அழிப்பதற்கு ஓர் ஆயுதம்" அட்டைப் படக் கட்டுரை மூலம் ஒரு சிறப்பிதழில் அறிய வேண்டிய விஷயங்களை அறிந்து கொண்டேன்.

மதுரை — 16. பி. ராஜசேகரன்.

• வாழைக் கன்றுகள் சிறுகதை படித்தேன். அது கதையே அல்ல; உலக உண்மையின் பிரதிபலிப்பு. அதை நன்கு புலப்படுத்திய ஆசிரியர் நா. பாலகரைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

குடியாத்தம் — 2. கோ. நாகேஸ்வரன்.

• மனைவி என்ற உன்னதமான ஸ்தானத்திற்கு வர மாட்டேன் என்று கூறிய சகுந்தலாவைத் தியாகு சந்தேகப்பட்டது எந்த வகையில் நியாயம்?! கறையான் புற்று சிறுகதை எழுதிய மணிராஜுக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

மணியக்காரன்பாளையம். ஏ.ஜி. கல்யாண சுந்தரம்.

• அசோகமித்திரனின் "பைசா" — சிறுகதை படித்ததும் எப்போதோ இறந்து போன அந்த வெங்கட கிருஷ்ணராவுக்கு மௌன அஞ்சலி செலுத்தினேன். அசோகமித்திரன் சார்! உண்மையிலேயே ரொம்ப அழ வச்சிட்டீங்க!

கடலூர் — 2. ஆர். வேலுமணி.

• 'பெய்ஜிங் படுகொலையில் சிந்தப்பட்ட மாணவ ரத்தத் துளிகளிலிருந்து சுதந்திர ஆர்வம் கொண்ட சீன மக்கள் தோன்றுவார்கள்' என்ற வரிகள்... வரலாற்றில் பொறிக்கப்படுகிற தீர்க்கதரிசனமுள்ள வார்த்தைகள்...

சென்னை — 23. ந. சத்திய நாராயணன்.

• சீனத் தலைமைப் பீடத்தின் அதிகார துஷ்பிரயோகத்தையும், பயங்கரவாதத்தையும் வாங்கு வாங்கென்று விளாசித் தள்ளியிருக்கும் அதே நேரத்தில், இந்தியாவின் போக்கை நைசாக ஓர் இடி இடித்திருக்கிறீர்களே, அதை மிகவும் ரசித்தேன்.

அரூர். மு. மதிவாணன்.

• முதல்வரின் பிறந்த நாளில் நடைபெற்ற சில வெட்கக்கேடான விஷயங்களை வெட்டோ வெட்டென்று வெட்டிய உமது துணிவைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

விழுப்புரம். கே. இந்துகுமரப்பன்.

• மற்றவர் மேல் பழி, பகையுணர்ச்சி காட்டாமல் பக்குவமாகப் பதிலளித்திருக்கிறார் மூப்பனார். இவ்வளவு பக்குவம் பெற்றவர், தான் சட்டசபைக்குப் புதியவர் என்று நழுவியிருப்பதுதான் இடிக்கிறது.

காஞ்சிபுரம். தமிழ் எழிலன்.

• மூப்பனார் சிறப்புப் பேட்டி படித்தேன். சராசரி அரசியல் தலைவர்களைப் போல் இல்லாமல் யார் மீதும் சிறிதும் காழ்ப்புணர்வைக் காட்டாமல் கல்கிக்குப் பேட்டியளித்திருக்கிற மூப்பனாரின் பெருந்தன்மையைப் பாராட்ட வேண்டும். ஆனால் எம்.எல்.ஏ.க்களுக்கு லட்சங்களை லஞ்சமாய்க் கொடுத்து ஆட்சியைப் பிடிக்கும் ஆசை காங்கிரஸுக்கு இல்லை என்கிறாரே... எங்களை நகைச்சுவைக் கடலில் தள்ளியிருக்கிறார்!

பாபநாசம். ப. மணிமுடி.

• தஞ்சைக் கோபுரமாக இசையில் விளங்கும் செம்மங்குடியின் பிறந்த நாள் விழாவுக்கு, அவர்களின் வசதிக்கேற்ப, தலைமை தாங்க ஒப்புதல் அளித்து உள்ளார் என்று பார்க்கும் போது, நட்புக்காகக் கலைஞர் முதல்வர் பதவியைப் பெரிதுபடுத்தவில்லையென விளங்குகிறது.

கடலூர் — 1. அ. சா. காலின்ஸ்.

• வன்முறையினால் சப்தர் போன்ற லட்சியவாதிகளைச் சாகடிக்க முடியாது என்பதை திருமதி. சப்தர் தன் உணர்ச்சிபூர்வமான பேட்டியின் மூலம் விளக்கியது எங்கள் நெஞ்சை நெகிழ வைத்து விட்டது.

சென்னை — 75. இதயகீதம் அ. இராமானுசம்.

• கம்லன், ஜெனரல் டயர், ஹிட்லர் ஆகியோர்களே பார்த்து ஆச்சரியப்படும் சீன அரக்கத்தனத்தைக் குறிக்கும் கார்ட்டூன் படு பயங்கரம்!

வடுகவிருட்சியூர். ஆர். அமுதா.

• சீறி எழும்பும் ஏவுகணையின் தத்ரூபக் காட்சியினைத் தமது கைத்திறனால் நம் கண்முன் திகழும் காட்சியாய் வடித்துக் காட்டி ஒரு பிரமையைத் தோற்றுவித்து விட்ட ஜி. கே. மூர்த்தியின் வண்ண அட்டைப்படம் அற்புதம்.

காட்டூர். எஸ். அருள்மொழி.

வீடியோ விளைவித்த வீண் சந்தேகம்!

வலிய வரவழைத்த வம்பு!

●● சமீபத்தில் எங்கள் குடும்பத்தில் ஒரு பெண் பார்க்கும் நிகழ்ச்சி நடந்த போது பெண்ணுடைய அக்காவின் திருமண வீடியோவைப் பெண் பார்க்க வந்தவர்களுக்குப் பெருமையாகப் போட்டுக் காண்பித்தார்கள். அடுத்த கட்டமாகக் கல்யாணம்நிச்சயம் ஆகும்போது, வரதட்சிணை... (இல்லையில்லை... அதுதான் வாங்குவதுஇப்பொழுதெல்லாம் கௌரவம் இல்லையே...!) பவுன், வெள்ளி லிஸ்டில் இரண்டு குத்து விளக்குகள், வெள்ளியில் ஜோடியாக வேண்டும் என்றார் சம்பந்தி அம்மாள். ஒரு குத்து விளக்குத்தான் தன்னால் முடியும் என்றார் — பெண்ணைப் பெற்றவர்.

உடனே, "மூத்த பெண்ணுக்கு வைத்திருக்கிறீர்களே..." என்று அன்று வீடியோவில் பார்த்ததைச் சாதுர்யமாகச் சம்பந்தி அம்மாள் கூறவும், வேறு வழியில்லாமல் ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று!

— ஜி. நீலா, மன்னார்குடி.

'நாங்கள் அழ, திரௌபதி அழ...!'

●● மகாபாரதத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. குடும்பத்துடன் நானும் டீ.வி. முன் உட்கார்ந்து வெங்காயம் நறுக்கிக் கொண்டே பார்த்துக் கொண்டிருந்தேன். அங்கிருந்த எல்லோர் கண்களிலும் நீர் பெருக ஆரம்பித்தது. டீ.வி. பார்த்துக் கொண்டே கோபத்துடன், "இங்கே இப்போதுதானா வெங்காயம் நறுக்க வேண்டும்? எல்லோரும் அழுது கொண்டே பார்க்க வேண்டியதாக இருக்கிறதே" என்று என்னைத் திட்ட ஆரம்பித்தார்கள். மகாபாரதத்தில் திரௌபதி அஸ்தினாபுரம் செல்லத் தன் தந்தையிடம் விடைபெறும் கட்டம் வந்தது. திரௌபதியும் அவள் தந்தையும் கண்களில் கண்ணீருடன் காட்சியளித்தனர். "உன் வெங்காயத்தின் நெடி இவர்களையும் அழ வைத்து விட்டது" என்று என் கணவர் கூறவும் எல்லோருக்கும் ஒரே சிரிப்பு வந்து விட்டது.

— சரோஜா சாரி, குவாலியர்.

துளி வருத்தம்! துளி கவலை!

●● ஜூன் பன்னிரண்டாம் தேதி இரவு சென்னை நிலைய டீ.வி. செய்தியில் — மணலி பஸ் கோர விபத்தில் 24 பேர் இறந்தார்கள் என்பதும், அதைத் தொடர்ந்து, டில்லி ரயில் நிலையத்தில் வெடிகுண்டு வெடித்து ஏழு பேர்கள் பலியானார்கள் என்பதும் தலைப்புச் செய்திகள். இச் செய்திகளை வாசித்தளித்தவர் நமக்குப் புதியவரல்ல! முக பாவங்களைப் பலவிதமாக காண்பிக்கக் கூடியவர். அனுபவசாலியும் கூட! பெருந் தலைவர்கள் இறந்து விட்டால் உருக்கமாக அறிவிக்கும் இச் செய்தி வாசிப்பாளர்கள், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைக் கூறும் போது சற்று வருத்தம் தோய்ந்த குரலில் படித்தால் பார்ப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் நிகழ்ச்சியின் தன்மையை உணர்த்துவதுடன், பொருத்தமாகவும் இருக்கும். நடிப்புக்கே அவசிய



மில்லை! இயற்கையிலேயே இருக்க வேண்டிய ஒன்று...

— ராஜன், சென்னை — 83.

விற்பனைக்கு வரும் டீ.விக்கள்!

●● என் வீட்டுக்கு டீ.வி. செட்டுகளை விற்பனை செய்யும் சேல்ஸ்மென் வந்திருந்த போது ஓர் அறுவை நாடகம் நடந்து கொண்டிருந்தது! அதைப் பார்த்துக்கொண்டிருந்த அந்த சேல்ஸ்மென் பெருமையாக, "இதோ இந்த டீ.வி. நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கிறாரே ஹீரோ, அவர் நடிப்புக்காகவே, ஆயிரக்கணக்கான டீ.வி. செட்டுக்கள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன" என்றார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த என் பத்து வயதுப் பெண், "ஆமாம்! அந்த ஹீரோவைப் பார்த்ததுமே எனக்குக் கூட நம் டீ.வி. செட்டையும் விற்று விடலாமேன்னு தோன்றுகிறது!" என்றதும் சேல்ஸ்மென் ஆளையே காணோம்!

— பி. வி. சீனிவாசன், சென்னை — 28.

அசடு வழிந்த மாமா!

●● என் நாலு வயது மகன் பாலாஜி எப்போதும் ஏதாவது அடம்பிடித்து அழுது கொண்டேயிருப்பான். ஊரிலிருந்து வந்திருந்த என் மாமா, டீ. வி. யில் 'World of surviaI என்ற காட்டு மிருகங்கள் பற்றிய ஆங்கிலத் தொடர் பார்க்கையில், என் மகனை அழைத்து, 'டேய் பாலாஜி, நீ அழுது அடம்பிடிச்சே, இப்போ டீ.வி.யிலேருந்து யானை, புலி, சிங்கம் எல்லாம் வெளியே எடுத்து விட்டுடுவேன்!' என்றார். பையன் 'கப்சிப்' பென்று அடங்கிப் போக, மாமாவின் முகத்தில் வெற்றிப் புன்னகை. சற்று நேரத்தில் பிஸ்கட், சாக்லேட் விளம்பரங்கள் டீ.வி.யில் அணிவகுத்து வரவே, பாலாஜி, "தாத்தா! நான் சமர்த்தாயிட்டேனே, டீ.வி.யிலேருந்து பிஸ்கட், சாக்லேட் இதெல்லாம் வெளியே எடுத்துக் கொடுங்க தாத்தா!" என்று நச்சரித்து அடம்பிடிக்க, மாமா அம்பேல் ஆனார்!

— ஆர். மாலதி, சென்னை — 24.

நூதன சுயம்வரம்!

●● மகாபாரதத் தொடரில் திரௌபதி சுயம்வரம். ஒருவர் பின் ஒருவராக அரசகுமாரர்கள் மேடையில் இருந்த வில்லை மூச்சைப் பிடித்துக் கொண்டு தூக்க முயன்று தோல்வியுடன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு போய்க் கொண்டிருந்த காட்சி.

தொடர் முடிந்தவுடன் மாடியில் குடியிருக்கும் நான் கடைக்குப் போக வேண்டிக் கீழே இறங்கி வந்தேன். கூடவே என் தம்பியின் பெண் — 8 வயது அர்ச்சனாவும் வந்தாள். 11 மணி வெய்யிலில் நன்றாகச் சூடேறி காம்பவுண்ட் சுவருடன் ஒட்டிக் கொண்டிருந்த கேட்டை மிகவும் சிரமத்துடன் திறந்தேன். இதைப் பார்த்த அர்ச்சனா ஒரு கமெண்ட் அடித்தாள். "அத்தை! அந்த ராஜாக்கள்ளாம் வில்லைத் தூக்கறதுக்கு எவ்வளவு கஷ்டப்பட்டா?! வில்லுக்குப் பதிலா இந்தக் கேட்டைத் திறக்கிற போட்டி வெச்சிருந்தா திரௌபதிக்குக் கல்யாணமே ஆயிருக்காது இல்லியா?" என்றாள்.

வாசற்படியில் நின்று இதைக் கேட்டுக் கொண்டிருந்தார் வீட்டுச் சொந்தக்காரர். எவ்வளவு சொல்லியும் கேட்டைச் சரி செய்யாமல் இருக்கும் அவர் வெட்கத்தினால் தலைகுனிந்தார். ஆனால், கேட் என்னமோ இன்னும் அப்படியேதான் இருக்கிறது!

— வி. சரஸ்வதி ராவ், சென்னை — 4.

வீண் சந்தேகம்!

●● என் மைத்துனனின் திருமணம் அமோகமாக நடந்திருந்தாலும் திருமண மேடையில் ஒரு பக்கம் மேஜை மீது வைத்திருந்த ஒரு வெள்ளிக் குத்து விளக்கு காணாமல் போனது. திருமணத்தன்று எடுத்த வீடியோ படத்தைப் போட்டுப் பார்த்தால் ஒருவேளை துப்பு கிடைக்கும், என்று நான் ஐடியா கூற, உடனே டெக்கை வாடகைக்கு எடுத்து வந்து திருமண கேஸட்டைப் போட்டுப் பார்த்தோம். தாலி கட்டும் படலம் முடிந்ததும் ஒரு பெண்மணி எதையோ எடுத்து, தன் புடைவைத் தலைப்பில் மறைத்துக் கொண்டு திருட்டு விழி விழித்தபடி நகர்வது பதிவாகியிருந்தது. அப் பெண்ணை நாங்கள் சந்தேகிக்க, என் மைத்துனன் மனைவி அது தன் அத்தை என்றும் கள்ளம் கபடமே அறியாதவர் என்றும் கூறி விட்டாள்.

இருந்தாலும் மனம் கேட்கவில்லை. அந்த அம்மாளுக்குச் சந்தேகம் வராதவாறு அழைத்து வந்து கேஸட்டைப் போட்டுக் காண்பித்தோம். அந்தக் காட்சி வந்ததும் அவர் முகம் வெளிறியது. "ஐயோ! இதுவும் படமாகி விட்டதா?" என்று தன்னையும் அறியாமல் உரக்கக் கூறினார். நாங்கள் என்ன என்று கேட்ட போது அவர்கள் கூற மறுத்தது எங்கள் சந்தேகத்தை வலுவடையச் செய்தது. மேலும் வற்புறுத்திக் கேட்ட போது "எல்லோரும் விழுந்தடித்துக் கொண்டு மணமக்கள் மீது அட்சதை போடும் போது என் தலை சவுரி முடி கழன்று கீழே விழுந்து விட்டது. யாரும் கவனிக்கு முன்பு அதை எடுத்து என் புடைவை தலைப்பில் மறைத்து எடுத்துச் சென்றேன்" என்று கூறி விட்டுத் தன் முகத்தை வெட்கம் தாளாமல் கைகளால் மூடிக் கொண்டார்கள். அப்போது என் முகத்தைப் பார்த்திருக்க வேண்டுமே!

— எஸ். பார்த்தசாரதி, சென்னை — 33.

உன் தருக்கமும் பேச்சும் அறிவாளியோடு நிகழட்டும். அதை விட்டு முட்டாள்களோடு தருக்கம் செய்தால் பார்வையாளர்களுக்கு யார் முட்டாள் என்பது தெரியாமல் போய்விடும்.





பம்பாயில் விளம்பரத் துறையில் பிரபலமான ஸ்ரீ C.R.M. சுவாமி அவர்களின் குமாரியும், கல்கி, மங்கையர் மலர், கோகுலம் பம்பாய் பிரதிநிதி ஸ்ரீ ஆனந் ஸ்வாமியின் சகோதரியுமான சௌபாக்கியவதி ராஜலட்சுமிக்கும், பம்பாய் ஸ்ரீ L. M. சங்கரன் அவர்களின் குமாரன் சிரஞ்சீவி சுப்பிரமணியனுக்கும் பம்பாயில் சமீபத்தில் விவாஹம் வெகு சிறப்பாக நடைபெற்றது. வாழ்க. மணமக்கள்!



இன்னிசை பாடும் நேரம்
MIRACLE EYE
SOUND AUTO CONTROL
Ajanta®
Ajanta
QUARTZ
மியூசிகல் கடிகாரங்களிலே இந்தியாவில் முன்னோடிகள்
Ajanta®
QUARTZ
the touch of tomorrow's technology
363 641
3627, 2280, 2457, 2433
0168-212 ATCM
VANITHA
M207
M267
M227
M257
எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கிறது
எச்சரிக்கை: எங்கள் தயாரிப்பு ஒவ்வொன்றிலும் 'அஜந்தா' மார்க் உள்ளதா என பார்க்கவும். போலிகளை கண்டு ஏமாறாதீர்.

சீனாவில் நிகழும் மாணவர் எழுச்சி குறித்து நமது மாணவர்கள் இருவர்:

சீனாவில் மாணவர் எழுச்சி



சீன ராணுவத்திடம் சிக்கிய மாணவி...

உத்தரா பரத் (ஸிஷ்யா — சென்னை): வெறும் பொருளாதார வளர்ச்சி மட்டுமே இருந்தால் பயனில்லை. அதனால் மக்களின் ஆத்ம தாகம் தீராது என்பதை உணர்த்தும் அதேநேரத்தில், உலகெங்கிலும் உள்ள மாணவர்களின் பாதுகாப்பற்ற நிலைக்கும் இச் சம்பவம் ஓர் உதாரணமாகத் திகழ்கிறது. அரசாங்கத்தின் பிடிவாதப் போக்கு நிலைமையை மிக மோசமாக்கியுள்ளது. ஓர் அரசாங்கம் தனது நாட்டின் எதிர்காலத் தூண்களைக் கொன்று குவிக்கிறது என்றால் அந்த நாட்டுக்கு என்ன எதிர்காலம் இருக்க முடியும்!? இப்போதே சுமார் முப்பதாயிரம் மாணவர்கள் அமெரிக்கா போன்ற நாடுகளுக்குப் போய் விட்டனர். இவர்கள் திரும்புவார்களா என்பது சந்தேகமே.

இந்திய அரசு இது குறித்து வாய் திறவாமல் இருப்பது கண்டனத்துக்குரியது தான். இங்குள்ள மாணவர்கள் ஒன்று சேர்ந்து சீன அரசுக்கு எதிர்ப்பை ஏதேனும் ஒரு வகையில் வெளிப்படுத்த வேண்டும். உலகையே உலுக்கிய இந்நிகழ்ச்சி குறித்துப் பள்ளி, கல்லூரிகளில், பட்டிமன்றங்களும் விவாதங்களும் கலந்துரையாடல்களும் நடத்தி, மாணவர்களிடையே விழிப்புணர்ச்சியைப் பெருக்க வேண்டும்.

பிருதிவிராஜ் சந்திரசேகர் (செயின்ட் ஸ்டீஃபன்ஸ் — டெல்லி): சமுதாயத்தின் வளர்ச்சியில் தங்களுக்கும் பங்கு உண்டு என்று மாணவர்கள் உணர்ந்துள்ளது போற்றுதற்குரியது. இந்திய பல்கலைக் கழகங்களில் உள்ள மாணவர்களிடம் இந்த அளவுக்கு ஒற்றுமையையும் கொள்கைக்காகப் போராடும் மன வலிமையையும் பார்க்க முடியாது.

இந்தியப் பல்கலைக் கழகங்களில் முளைத்த நக்ஸல்பாரி இயக்கம் பெரிதாக வளர்ந்திருந்தால் ஒருவேளை சீன மாணவர்கள் இயக்கத்தின் அளவுக்குப் பிராபல்யமும் அனுதாபமும் பெற்றிருக்கக் கூடும். நக்ஸல்பாரி மாணவர்கள் டெல்லி கல்கத்தா போன்ற பெருநகர்க் கல்லூரிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும் அவர்கள் பணியைச் சமூகத்தின் அடிமட்டத்தினரான பழங்குடிகளிடமிருந்து ஆரம்பித்தனர். நாளாவட்டத்தில் அவர்கள் இயக்கம் வன்முறை கொலை, கொள்ளையில் ஈடுபடுவோர் இயக்கம் என்று முத்திரை குத்தப் பட்டது. அனுதாபமும் ஆதரவும் கிட்டாத இயக்கம் வளரவில்லை.

ஆனால் சீன மாணவர்கள் நகர்ப்புறங்களில் மட்டுமே கவனம் செலுத்தினர். லஞ்ச ஊழல் விவகாரத்தை மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லி ஆதரவு வளர்த்துக் கொண்டனர். சீனாவின் மையப் பகுதியில் போராட்டம் நடப்பதால் சீன மாணவர் இயக்கம் உலகம் முழுவதின் கவனத்தையும் கவர்ந்துள்ளது. சீன மாணவர்களை நகர ராணுவம் தாக்க மறுத்தது. **Provincial army**யைக் கொண்டுதான் அவர்களை அரசாங்கத்தால் தாக்க முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

— நிருபர்.

உலகை உலுக்கிய நிகழ்ச்சி!



• பிருதிவிராஜ்



• உத்தரா பரத்

அத்தியாயம் 11

ஆற்று நீரில் அழகிய பிம்பம்

"மங்கையர் எழிலை மணத்துடன் காட்டும் கூந்தல்! பொன்னிற வனிதையர் அழகினைப் பாடும் கூந்தல்!! ஆறடிக் கூந்தல் எட்டடியாக, ஆரணங்கு கூந்தல் அருவியாய் மாற இதோ வந்துவிட்டது மயில் மார்க் ஷாம்பு...!

"கையில் துளி விட்டு, தலையில் நீர்விட்டுத் தேயுங்கள், கைதொட்டு... போகுமே அழுக்குகள் உம்மை விட்டு...! ஆம்... தென்றலாய் உடனே மாறும் கூந்தல் தேவதையாய்க் காட்டும் உங்களை...!

"தாய்க்குலமே...! மகளிரே...! தயங்காமல் வாருங்கள்...! நாளும் உங்களை அழகேற்றி ஆடவர் தம்மைச் கண்டி இழுக்க எங்கள் 'ஹை–கிளாஸ்' கம்பெனியின் அற்புதமான தயாரிப்புக்கள்!

"யோசித்து நிற்க வேண்டாம்! அடுத்தவரிடம் பேசியும் நிற்க வேண்டாம்!! ஒரு சின்ன பாக்கெட் இரண்டே ரூபாய்!

"மனைவியுடன் வந்திருக்கும் கணவன்மார்களே...! தம் மகளுடன் வந்திருக்கும் அப்பாகுலமே! பேத்தியுடன் வந்திருக்கும் தாத்தாக்களே! பாட்டிகளே! நம் 'பெண்டு'களுக்குத் தேவை வெறும் சாப்பாட்டுப் பொருட்கள் மட்டுமல்ல— இந்தப் பொருட்களும் வாங்கிக் கொடுங்கள். பின் அவர்கள் அழகை நீங்களே பாராட்டுவீர்கள்.

"ஹை–கிளாஸ் கம்பெனியின் அற்புதமான தயாரிப்புக்கள்!

"மயில்மார்க் ஷாம்பு! மான்மார்க் சோப்பு! கிளி மார்க் பல்பொடி! இன்னும் நிறைய உண்டு. யானைத் தந்த சீப்பு!! வந்து பாருங்கள், வாங்கி மகிழுங்கள்."

தென்னவன் பொருட்களின் பெருமையை(!) தன் வாய்த் திறமையால் கூட்டி விற்கவைத்துக் கொண்டிருந்தான்.

"புல்லாங்குழல் ஊதி ஆயர்குலக் கண்ணன் செய்தது லீலை. இந்தக் கண்ணன் அதே வேஷத்தில் உங்களிடம் செய்வது வேலை. நல்ல சேவை. சரக்குகள் தீரும்முன் சட்டென வாருங்கள். இல்லை என்றபின் ஏமாந்து போகாதீர்கள்!!"

கையில் மைக். கிருஷ்ணன் உடை. பக்கத்தில், முன்னால் பரப்பி வைக்கப்பட்ட படி பொருட்கள். கூடவே விற்பனை செய்யும் ஆட்கள். தென்னவனை வேடிக்கை பார்த்துக் கொண்டே வியாபாரம் நடந்து கொண்டிருந்தது.

அவனை நாள் சம்பள ஒப்பந்தத்திற்காகப் பேசி இருந்த கடைக்காரரின் முகத்தில் சந்தோஷம். தம் வியாபார யுக்தியை நினைத்துத் தாமே பெருமைப்பட்டுக் கொண்டார்.

'ம்... என் அறிவுக்கு சினிமாக்காரங்களையே கூப்பிட்டுக்கிட்டு வந்து வியாபாரம் செய்யலாம்...! நம்ம சரக்குல பழுது இல்லே... இதுல யாரு என்ன... சப்பாணி வித்தாக் கூட வாங்கத்தானே செய்வாங்க!"

"அப்ப நீங்களே விக்க வேண்டியது தானே...! ஏன், இந்த ஆளைப் போட்டீங்க!!'

"இதெல்லாம் வியாபார நுணுக்கம்டா! பேச்சு இருக்கிறவனைப் பாரு...! வெறும் கையை முழம் போட்டே வியாபாரம் பண்ணிடுவான்! நம்ம பையன் பாரு கச்சிதமா இருக்கான்...! பக்கத்து ஊர்ல நாடகத்துல நடிச்சப்ப பார்த்தது...! கேக்கற சம்பளம் தர்றேன்னேன்... ஒத்துக்கிட்டான்! ஏய்... தம்பிக்குக் காப்பித்தண்ணி கேட்டா வாங்கிக் குடு...! பாரு.... மொட்டைத் தலையன் கூட ரெண்டு சீப்பு வாங்கிட்டுப் போறான்!!"

தென்னவனுக்கு ராஜ உபசாரம் செய்யப்பட்டது. அடிக்கடி உட்கார்ந்து கொண்டே பேசினான். வைக்கப்படும் பொருட்களுக்குத் தகுந்த மாதிரி பேசிக் கொண்டிருந்தான். சில பொருட்களின் விவரங்கள் சீட்டில் எழுதிக் கொடுக்கப்பட்டன. டி. வி. யில் செய்தி வாசிப்பதுபோல் அதைப் படித்துக் கொண்டே ஜனங்களையும் பார்த்துப் பேசினான்!

"கிராமத்தின் அழகு அன்னங்களே...!
தவழும் மயில்களே...!
கொஞ்சும் புறாக்களே...!
வாருங்கள். ராக்காயி ராணியாக வேண்டாமா? மூக்காயி முல்லையாக வேண்டாமா?!!

"உண்டியலில் சேர்த்து வைத்திருக்கும் காசுகளை — தாவணியில் முடிந்து வைத்திருக்கும் நோட்டுகளை — தின்பண்டம் வாங்கித் தின்று தீர்த்து விடாதீர்கள்! நாலு இடம் போக நல்லவர்கள் உங்களைப் பார்த்துப் பரவசப்

என் உயிர்த் தோழன்

பாரதிராஜா



பட எங்கள் கடைக்கு விஜயம் செய்யுங்கள்.

"அணியும் 'பிரா'விலிருந்து உண்ணும் 'பிரெட்' — அதாவது ரொட்டி வரை — தலைசீப்பிலிருந்து கால் செருப்பு வரை ஒட்டு மொத்தமாய் ஒன்றாய்க் கிடைக்கும். அதுவும் உங்கள் விலைக்கே கிடைக்கும்.

"சென்ற இடமெல்லாம் சிங்காரமாய் வியாபாரத்தில் வெற்றிமுரசு கொட்டும் 'ஹை கிளாஸ்' அழகப்பனின் அற்புதக் கடைக்குச் சீக்கிரம் வாருங்கள். ஹை கிளாஸ் ஈஸ் ஹை கிளாஸ், லோ கிளாஸ் ஈஸ் லோ கிளாஸ். திஸ் ஈஸ் ஃபார் ஆல் கிளாஸ் அண்டு ஆல் ஏ கிளாஸ்."

'ஹை கிளாஸ்' அழகப்பன் தங்கப் பல்

தெரியச் சிரித்துக் கொண்டார். எல்லா ஸ்டாக்குகளும் வெளியே வந்து கொண்டிருந்தன.

சிட்டு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வை ஆணி அடித்தது போல் அங்கேயே இருந்தது. தாமரை வந்தபோது மட்டும் பதுங்கிக் கொண்டாள். அவள் தேடிக் கொண்டே எதையோ முனகிக் கொண்டு போய் விட்டாள்.

நாலு வார இடைவெளியில் பார்க்கும் தென்னவன் சிட்டுவுக்குக் கொஞ்சம் இளைத்திருப்பதைப் போலத் தெரிந்தான். சந்தையில் கூட வேஷம். இதுவும் பொருத்தம்தான். இது யார் ஏற்பாடு என்று தெரியவில்லை. குரலோடு வேஷத்தையும் போட்டால் வியாபாரத்தை ஏற்றி விடலாம் என்று ஆலோசனை கொடுத்தது தென்னவனாகத்தான் இருக்கும். அதற்கும் ஏதாவது பணம் கேட்டிருப்பான். சிட்டு நினைத்துக் கொண்டாள்.

அவளுக்கு அந்தக் கடையிலிருந்து அவனையே 'வாங்க' வேண்டும் போல இருந்தது. இது எப்படிச் சாத்தியம்? அவனிடம் தனியே பேச வேண்டும்.

மனசில் பீடிகையும், மௌன நாடகமும் இன்னும் எத்தனை நாளைக்கு....? தன் கண்ணைக் கட்டிக் கொண்டு தன்னையே தேடும் கண்ணாமூச்சி விளையாட்டு அவளுக்குப் பிடிக்கவில்லை. இன்றே பேசிவிட வேண்டும். யோசித்தாள். நல்ல திட்டம் ஒன்று அவளுக்குத் தயாராகிக் கொண்டிருந்தது.

பாட்டுக் கச்சேரிகளில் பேரெழுதிச் சீட்டைக் கொடுத்து அந்தப் பாட்டைப் பாடச் சொல்வதைப் போலத் தென்னவனுக்குப் பொருட்கள் பற்றிப் பேசத் தரப்பட்ட சீட்டுகளைச் சிட்டு கவனித்தாள். யோசித்தாள்.

சீட்டுக்களை வாங்கி, புதிய பொருட்களுக்குப் பக்கவாத்தியத்தைத் தன் வாயால், வாசித்துக் கொண்டிருந்தான் தென்னவன். வியாபாரம் மறுபடியும் சூடு பிடித்துக் கொண்டிருந்தது. அவள் இடது கையை அமுக்கி ஒரு கை சீட்டை வைத்தது.

பேசிக் கொண்டே இருந்தவன் அதைப் பார்த்துக் கொண்டே திரும்பிப் பார்த்தான். யார் என்று தெரியவில்லை. 'ஸ்பரிசம்' மனசில் 'சரிகமபதநி' செய்தது. சந்தையின் இரைச்சலில் அந்தச் சங்கீதம் உடனே கரைந்து போனது.

வியாபாரச் சீட்டு போல அதையும் உரக்கப் படித்தான் அவன்.

'உங்களுக்கு ஒரு வாய்ப்பு
அதுவும் கடைசி வாய்ப்பு
பொன்னான வாய்ப்பு.
நழுவ விடாதீர்கள்....!
அந்தி மயங்கும் நேரத்திலே...
ஆற்றங்கரையின் ஓரத்திலே...
காத்திருப்பாள் ஒரு காரிகை...
சேர்த்து வைத்த பாரத்தைச் சீக்கிரம்
உங்க மனசுல இறக்கணும்....!
நாம சேர்ந்து வானத்துலே பறக்கணும்...!
அப்பாடா... உங்க மாதிரியே பேசறேன் இல்லே... எனக்குள்ளே நீங்க இருக்கிறப்ப வேற எப்படி எனக்கு யோசனை வரும்...!'

பாதி படித்த தென்னவன் கூட்டத்தினரின் முக பாவத்தைப் பார்த்து நிறுத்தினான். பின் புரிந்து கொண்டான். கூட்டத்தைச் சமாளித்தான். மௌனமாய்ப் படித்தான். அது சிட்டுவின் காதல் ஓலை. கடைசியில் எழுதியே காட்டிவிட்டாள். அவள் எழுத்துக் கிறுக்கல். அடித்தல், திருத்தல். பாதி தெரிந்தது. மீதி அழிந்திருந்தது. காகிதத்தில் உள்ளங்கை வியர்வையின் கசிவும் ஒரு சில. கண்ணீர் சொட்டுக்களில் எழுத்தின் அழிவும் தெரிந்தது.

பதுங்கியே இருந்த மயில் கடைசியில் கடிதத்தில் பாய்ந்துவிட்டது.

தென்னவனுக்கு மனசு தவித்தது.

சந்தனத்தேவன் பட்டியில் வேலை போனது ஒரு நஷ்டம் என்றாலும் லாபம் ஒரு தங்கமயில். அவன் மனம் கணக்குப் போட்டது. ராஜுபார்ட்டுக்கு மானசீகமாக ஒரு நன்றி சொல்லிக் கொண்டான்.

சிட்டு குறிப்பிட்டுள்ள இடம் அவனுக்குத் தெரியும். சீக்கிரம் வேலைகளை முடித்துக் கொண்டால் போய் விடலாம். எவ்வளவு நேரமானாலும் அவள் காத்திருப்பாள்.

ஆற்றங்கரையில் சிட்டு கற்களைப் போட்டுவிட்டு நீர் வளையங்களை எண்ணிக் கொண்டே இருந்தாள்.


சின்ன வட்டத்தை அவளாகவும், பெரிய வட்டத்தை அவனாகவும் நினைத்துக் கொண்டாள்.

ஆள் நடமாட்டம் இருந்தது. 'அததுகள்' வேலை தீவிரத்திலும், ஊர் போக வேண்டும் என்ற அவசரத்திலும் இருந்தன. யாரும் யாரையும் கண்டு கொள்ளவில்லை.

தூரத்தில் சில காதல் சிட்டுகளின் சிரிப்பும் சிணுங்கலும் கேட்டது. சிட்டுவுக்குச் சிரிப்பு வந்தது. சிட்டுவைப் பார்த்த அவர்கள் தங்கள் சொர்க்கத்தைச் சமைத்துக் கொள்ள வேறு இடம் நழுவினர்.

சிட்டுவின் பின்னால் தென்னவன் மெதுவாய் வந்து நின்றதை அவள் கவனிக்கவில்லை.

சிங்கப்பூரில் ஒரு வாரம்!
— சுஜாதா கட்டுரை



அடுத்த கல்லை எடுத்துத் தண்ணீரில் எறியப் போன போது கவனித்தாள். அவன் பிம்பம் தண்ணீரில் இருந்தது. வீசப் போன கை நின்றது. வெட்கம். திரும்பி அவனைப் பார்க்கக் கூட அச்சம்... முதல் முறையாக அவன் நெருக்கத்தில் — மனசில் அனல் அடித்தது.

தென்னவன் சிரித்தபடியே கேட்டான்.

''ஏன் சிட்டு... கல்லைத் தண்ணியில் போட்டு விளையாடிக்கிட்டே இருந்த... இதையும் எறிய வேண்டியதுதானே...!''

''முடியாது!''

''ஏன்?''

''இந்தக் கல்லைப் போட்டா தண்ணியிலே இருக்கிற நீ அழிஞ்சிடுவே இல்ல...?''

''நீயும்தானே தண்ணியில் இருக்கே... நீ மட்டும் அழிஞ்சிட மாட்டியா...?''

''நான் அழிஞ்சா பரவாயில்லே... நீ அப்படியேதான் இருக்கணும்...!''

தென்னவன் தண்ணீரில் பிரதிபலிப்பைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்தான். அவள் கையிலிருந்த கல்லை வாங்கித் தூரத்தில் விட்டெறிந்தான். ஒரு சின்ன சலசலப்பு ஏற்பட்டு மறைந்தது.

அவன் சிட்டுவைப் பார்த்தான்.

அவள் பார்வை மண்ணையே குத்திட்டு நின்றது.

''சிட்டு... அன்னைக்கி நான் அனாதை இல்லைன்னு சொன்னேனே... அன்னைக்கி அது விளையாட்டா இருந்துச்சி...! இன்னைக்கி சத்தியமாயிடுச்சி...!'' தென்னவன் அவள் கையை அடித்துக் கண்கலங்கியபடியே சொன்னான்.

''ஊரு விட்டு ஊரு போயி அர்த்தமில்லாதவனா கத்திப் பேசிக்கிட்டுக் கன்னாபின்னான்னு வாழ்ந்துக்கிட்டிருந்தேன்! கடவுளா என் மேல கருணை வச்சி உன்னைய என் கிட்ட அனுப்பி இருக்காரு! சிட்டு...என்னைய உனக்குப் பிடிச்சிருக்கா...? நீ நெசமா என்னை விரும்புறியா...!!''

சிட்டு கலங்கி விட்டாள். தென்னவனுக்கு அவளை ஆறுதல்படுத்துவது பெரும்பாடாகி விட்டது.

''பின்னே என்னய்யா! பள்ளிக்கூடத்து வாத்தியாரு மாதிரி கேக்கறே...! உன்னால எல்லாத்தையும் பேசிட முடியுது...! பேசற ஆளுதானே நீ...? என்னால நூறு நெனைச்சா அதுல ரெண்டைக்கூடச் சரியாச் சொல்ல முடியலே...!''

''நீ சொல்லவே வேணாம் சிட்டு... எனக்குத் தெரியும்... மனசைப் புரிஞ்சிக்கிட்டவங்களுக்கு மௌனம் கூட பாஷைதான்... மனசைப் புரிஞ்சுக்காதவங்ககிட்ட ஆயிரம் பேசினாலும் அது அர்த்தமில்லாத இரைச்சல்தான்!''

சிட்டு அந்தப் 'பேச்சாளி' மறுபடியும் ஆரம்பித்து விட்டதைப் புன்னகையுடன் பார்த்தாள்.

''சிட்டு...உனக்கு நான் எதுவும் வாங்கிட்டு வரலேன்னு பாக்கறே இல்லே... முதல்ல நான் ஒரு நல்ல வேலை தேடிக்கணும்... உன்னைய கல்யாணம் பண்ணிக்கணும்... அப்புறம் சம்பளம் வாங்கி உன்னைய கூப்பிட்டுக்கிட்டுப் போயி உனக்கு என்ன தேவையோ அதை வாங்கிக் குடுக்கணும்...!''

அவளுக்கு அவன் மீது முழு நம்பிக்கையும் வரும்படி தென்னவன் பேசிக் கொண்டிருந்தான்.

சிட்டுவின் மனத்திலிருந்து அப்புறப்படுத்த முடியாதபடியான பிடிமானத்தில் அவன் இருந்தான்.

சந்தை வியாபார ஒப்பந்தத்தில் இந்த வாரம்தான் வந்திருப்பதாய்ச் சொன்னான். பயாஸ்கோப்காரன் செய்த உதவிகளைச் சொன்னான்.

சீக்கிரம் இந்த வேலையை விட்டு விடலாம் என்றான்.

இன்னும் சில நாட்கள் கழித்து இருவரும் சந்திக்கலாம் என்று முடிவு செய்தனர்.

எங்கு சந்திக்கலாம், எப்போது சந்திக்கலாம் என்பதைப் பயாஸ்கோப்காரன் மூலமாகச் சொல்வதாகச் சொன்னான்.

சிட்டு அவனிடம் நிறையப் பேச வேண்டும் என நினைத்தாள். எல்லாவற்றையும் இப்போதே பேச வேண்டாம் என முடிவு செய்தாள்.

தென்னவனைப் பற்றி முதலில் இருந்த நல்லெண்ணம் இப்போது நம்பிக்கையாக மாறி இருந்தது.

அடுத்த சந்திப்பில் என்ன என்ன பேசலாம் என்ற யோசனைக்கு இப்போதே தன்னைத் தயார் செய்தவளாய் நடந்து கொண்டிருந்தாள் சிட்டு. மெல்ல நடந்தாள். தாமரை ஞாபகத்திற்கு வந்தாள். துன்புறுத்தினாள். சீக்கிரம் போய்ச் சேர வேண்டும். இல்லையென்றால் தம்பட்டம் அடித்து ஊரைக் கூட்டி விடுவாள். தாமரை பயம் அவளைத் தரையிலேயே பறக்க வைத்தது.

தென்னவன் அவள் சென்ற திசையைப் பார்த்துவிட்டு ஒரு கல்லை எடுத்துத் தண்ணீரில் எறிந்தான்.

அவன் பிம்பம் கல்லால் அதிர்ச்சியடைந்து மெல்ல அழிந்து கொண்டிருந்தது.

(தொடரும்)

ஜெ. தொகுதிக்கு ஒரு விசிட்!

— நேரடி ரிப்போர்ட்

இதழில்......



வாசகர் பங்கு — II

பாட்டி செய்த பேருதவி!

விளையாட்டாக ஆரம்பித்து......

○○ பத்தாம் வகுப்புப் பரீட்சை முடிந்ததும் விடுமுறையில், பத்திரிகை விளம்பரங்களைப் பார்த்து, 'முழுமையான விவரங்கள்' பெற 15 பைசா போஸ்ட் கார்டுகள் எழுதினேன். பொழுது போகாமல் இதைச் செய்யப் போய், நிறையப் புத்தகங்களும் அட்டவணைகளும் கிடைத்தன. ஒரு பிரபல மாத நாவலுக்கு ஏஜென்ஸி எடுப்பது குறித்து விவரங்களும் மற்றும் விண்ணப்ப ஃபாரமும் இம் முறையில் கிடைத்தன. நானும் வீண் பொழுது கழிக்காமல் ஏஜென்ஸி எடுக்கலாமே என்று எடுத்து விட்டேன். இப்போது ஆறு மாத நாவல்களுக்கு இராமேஸ்வரத்தில் நான்தான் ஏஜெண்ட்! பன்னிரண்டாம் வகுப்பில் இரண்டாவது குரூப் படித்துக் கொண்டும் இருக்கிறேன்.

இராமேஸ்வரம், எம். முருகேசன்.

காலரி பொஸிஷன்!

○○ படிப்பில் முதலாவதாக வந்தாலும் எனக்கு விளையாட்டைக் கண்டால் அலர்ஜி. விளையாட்டு ஆசிரியர் என்னிடம் பிரியம் வைத்து, கிரிக்கெட் டீமில் சப்ஸ்டிடியூட் என்று எழுதி, ஒரு சர்டிஃபிகேட் கொடுத்து விட்டார். (ஜெயித்த அணி வேறு!) வேலைக்கு இண்டர்வியூவுக்குப் போன போது அந்த சர்டிஃபிகேட்டைப் பார்த்த அதிகாரிகள் "தம்பி எந்த பொஸிஷனில் ஃபீல்டிங் செய்தீர்கள்?" என்று கேட்க, நான் விழிக்க... "காலரி பொஸிஷன் தானே?" என்று ஒருவர் எடுத்துக் கொடுத்தார். நானும் அவசர அவசரமாக "ஆமாம்" என்றேன். எல்லோரும் 'கொல்' என்று சிரிக்க, நான் அசடு வழிந்து கொண்டு வெளியே வந்தேன். 'பொய்' சர்டிஃபிகேட்டை முதலில் கிழித்தெறிந்தேன்.

மன்னார்குடி, எஸ். ராஜேந்திரன்.



சின்னஞ்சிறு கோபு!

○○ ஒரு நாள் பள்ளிக்குத் தாமதமாய் வந்ததால் உடற்பயிற்சி ஆசிரியர் என்னைக் கிரவுண்டைச் சுற்றி நாலு ரவுண்ட் ஓடச் செய்தார். அந்தக் கடுப்பில், நான் நடத்தி வந்த கையெழுத்துப் பத்திரிகையின் அட்டைப் படத்தில் இப்படியொரு ஜோக் வெளியிட்டேன்:

மாணவன்: ஏன் இன்று உடற்பயிற்சி ஆசிரியரே கிரவுண்டைச் சுற்றி ஓடுகிறார்?

நண்பன்: இன்று அவரே பள்ளிக்கு லேட்டாக வந்துட்டாராம்!

பாபுலரான அந்த 'சின்னஞ்சிறு கோபு' இதழ் அந்த உடற்பயிற்சி ஆசிரியர் கைக்குப் போனது...

"அடேய்! என்னைப் போலவே கார்டூன் போட்டிருக்கியே!" என்று அவர் வியந்து பாராட்டின போதுதான் மூச்சு விட்டேன்!

முடிகண்டநல்லூர், க. ராஜேந்திரன்.

"சுரேஷ் காத்திருக்கிறார்!"

○○ எட்டு வருடங்களுக்கு முன் — என் கல்லூரி எகனாமிக்ஸ் ஆசிரியைக்குக் கல்யாணம். கலகலப்பாக எங்களுடன் பழகியவர் எங்களுக்குப் பத்திரிகையும் தந்தார். ஆனால் வெளியூரில் நடந்த கல்யாணத்துக்கு நாங்கள் போகவில்லை. ஒரு நாள் அவர் வகுப்பின் போது பாத்ரூம் போய் வருவதாகச் சொல்லி வெளியே போய் வந்து, அவரிடம் 'மிஸ்டர் சுரேஷ் உங்களுக்காக ரிசப்ஷனில் காத்திருக்கிறார்' என்றோம். அவர் முகம் சிவக்கப் புதுக் கணவனைப் பார்க்க வேக வேகமாய் ஓடினார். எங்கள் மாடி அறையிலிருந்து கீழே ரிசப்ஷன் தெரியும். அவர் அங்கு போய் ஏமாற்றத்துடன் திரும்பும் வரை நாங்கள்



ஜன்னல் வழியே பார்த்து விட்டு, எல்லோரும் அவர் வருவதற்கு முன், மேஜை மீது தலையைக் கவிழ்த்துக் கொண்டோம். (அவர் முகத்தைப் பார்க்கச் சகிக்காதே!). அவர் திரும்பி வந்து எனக்கு டோஸ் கொடுத்தது பசுமையாக நினைவிருக்கிறது.

கோவை — 9. ஜெயந்தி.

ராஜோபசாரம்!

○○ அட்மிஷனுக்காகப் பள்ளி மெயின் ஹாலில் காத்திருந்தேன். பியூன் எனது பெயரைச் சொல்லி, தலைமையாசிரியர் அழைப்பதாகச் சொன்னார். நான் போனதும் எச்.எம்., ''சௌக்கியமா? அப்பா எப்படி இருக்கார்..'' என்று ஒரே உபசாரம். காப்பி வந்தது. பயந்து கொண்டே குடித்தேன். ''அட்மிஷன் முடிந்ததும் சொல்லிக் கொண்டு போ தம்பி'' என்றார். நானும் அவ்வாறே செய்தேன். கிளம்பும் போது அப்பாவுக்குக் கொடுக்கச் சொல்லி கையில் ஒரு ஸ்வீட் பாக்கெட் வேறு கொடுத்தார்!

பள்ளி திறந்து ஒரு வாரம் சென்றதும் பியூன் என்னை மீண்டும் எச்.எம்., கூப்பிடுவதாக அழைத்துப் போனார். அப்போது தான் ''உங்கப்பா பெயரென்ன தம்பி?'' என எச்.எம். கேட்க... நான் சொன்னேன். ''நீ ....வுடைய பிள்ளை இல்லையா...?'' என்று அவநம்பிக்கையுடன் கேட்டார். நான் 'இல்லை' என்றதும், ''இங்கே நடந்ததை யாரிடமும் சொல்லாதே'' என்று கூறி அனுப்பி விட்டார்!

மற்றொரு ஆசிரியரிடம் நான் இதைக் கூறிச் சிரித்த போது தெரிந்தது — அத்தொகுதி எம்.எல்.ஏ.வின் மகன் பெயரும் என் பெயரும் ஒன்றே! எம்.எல்.ஏ. சிபாரிசில் எச்.எம்.இன் மகனுக்குக் காலேஜ் சீட் கிடைத்திருந்தது. எம்.எல்.ஏ.வின் மகன் பள்ளியில் புதிதாகச் சேர்ந்திருந்தான்.

பூந்தோட்டம். அம்சா ஜி. வெங்கடேசன்.

சுத்தத் தமிழர்கள்!

○○ என்ஜினியரிங் கல்லூரியில் சேர்ந்த முதல் நாள், ''தமிழ் மீடியம் பயின்றவர்களெல்லாம் எழுந்து நில்லுங்கள்'' என்று பேராசிரியர் வகுப்பில் கூற, வேறு சிலருடன் நானும் எழுந்தேன். இங்கிலீஷ் மீடியத்தில் படித்த மாணவர்கள் சிலர், ''இவங்கதான் சுத்த தமிழர்கள்டா'' என்று இளக்காரமாய் கமெண்ட் அடிக்க, வகுப்பே சிரித்தது. பேராசிரியர் எங்களை ஓர் அலட்சியப் பார்வை பார்த்து விட்டு உட்காரச் சொன்னார். மற்ற மாணவர்கள் எப்படியோ... நான் குன்றிப் போனேன். வெகு நாட்கள் இச் சம்பவம் என்னைப் பாதித்தது.

கொசுறு செய்தி: எங்களைக் கிண்டல் செய்த மாணவர்கள் உட்பட ஆங்கில மீடியத்தில் படித்த பலர், முதல் செமஸ்டர் தேர்வில் ஆங்கிலப் பாடத்திலேயே தோல்வியுற்றனர்! நான் கல்லூரியிலேயே ஆங்கிலப் பாடத்தில் முதல் மார்க் வாங்கினேன்.

திருநெல்வேலி — 2. பாளை செல்வ கணேசன்.

ஜிலேபிக்கு வோட்டு!

○○ நான் விவேகானந்தா கல்லூரியில் பி.யூ.சி. படித்த போது நடந்த மாணவத் தலைவர் தேர்தலில் மூவர் போட்டியிட்டனர். அவர்களுள் சம்பந்தன் என்பவர் இனிமையாகப் பழகி, சாதுர்யமாகப் பேசி, பிரசாரம் செய்ததால் அவரே வெற்றி பெறுவார் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் தேர்தல் அன்று காலை மற்றொரு (பணக்கார) வேட்பாளர் அருணாசலத்தின் சார்பில் திருமண வரவேற்பு போல் எல்லா மாணவர்களுக்கும் சந்தனம், பன்னீர், ரோஜா, இனிப்பு என்று வழங்கப்பட்டது — அருணாசலமே வெற்றி பெற்றார். அன்று மாலை வகுப்புத் தோழர்களைக் கேட்டேன், 'யாருக்கு வோட்டுப் போட்டீர்கள்?' என்று.

''அருணாசலத்துக்குத்தான்! பாவம் லட்டு ஜிலேபி எல்லாம் கொடுத்தாரே — தின்னுட்டு மோசம் பண்ணலாமா?'' என்றார்களே பார்க்கலாம்! இதைக் கடந்த 28 ஆண்டுகளாக என்னால் மறக்க முடியவில்லை. இன்றைக்கு இவர்களைப் போன்ற 17—18 வயதினர்தான் வாக்காளர் பட்டியலில் புதுமுகங்கள்!

அம்மையப்பன். அ. சி. மணியன்.

பட்டுப் பட்டென்று......

○○ ஏழாம் வகுப்பில் எங்களுடன் படித்த பட்டுவுக்கு அவன் பெயரை யாராவது உச்சரித்தாலே அலர்ஜி. 'பட்டு' என்று யாருமே கூப்பிடக் கூடாது' என்று ஆசிரியரே தடை விதித்து விட்டார்.

ஒரு நாள் நான் அடிக்கடி 'பட்டு' 'பட்டு' என்று கூறுவதாக அவன் ஆசிரியரிடம் புகார் செய்தான். நான், ''சார், எங்க பக்கத்து வீட்டுச் சின்னப் பையன் பட்டுச்சாமி,





அவன் அப்பாகிட்டே பட்டுச் சட்டை வேணும்னு பிடிவாதம் பிடிச்சான். அவர் அவனைப் பட்டுப் பட்டுன்னு அடிச்சார்— அதைச் சொன்னேன்...'' என்றேன்.

வகுப்பில் ஒரே சிரிப்பு! ஆசிரியர் கோப மாய், ''கிண்டலுக்குக் குறைச்சல் இல்லை; ஒரு திருக்குறள் ஒழுங்காச் சொல்ல வருமா?'' என்று வைதார்.

சற்றும் தாமதியாமல்,

''யாகாவா ராயினும் நாகாக்க —
காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் **பட்டு**''

என்றேன் நான்.


வகுப்பே அதிர்ந்தது. என் முதுகும் அதிர்ந்தது வேறு விஷயம்!

ஓசூர். வி. ஆர். ராஜேஷ்.

பாட்டி செய்த பேருதவி

OO ஹாஸ்டலில் தங்கிப் படிக்க வசதி யில்லை. எனவே பாட்டி வீட்டில் தங்கி திருச்சி செயின்ட் ஜோஸஃப்ஸில் படிக்க விண்ணப்பித்தேன். அட்மிஷன் கிடைக்க வில்லை. மேல்படிப்பு கேள்விக்குறியாகிய நிலையில் பாட்டி என்னை அழைத்துக் கொண்டு போய், கல்லூரியில் முதல்வர் அறை வாசலில் கியூவில் நின்று கொண் டார். எங்கள் முறை வந்ததும் உள்ளே சென்று, நான் கணிதத்தில் 100 வாங்கி யுள்ளதை எடுத்துச் சொல்லி என்னைக் கட்டாயம் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று முதல்வரிடம் விண்ணப்பித்தார். முதல்வரும் சிரித்துக் கொண்டே **'Regret'** கார்டிலேயே **'Admit'** என்று எழுதிக் கொடுத்து விட்டார். அன்று மட்டும் என் பாட்டி துணிச்சலுடன் முன் வந்திருக்கா விட்டால் என் எதிர்காலம் வீணாகியிருக் கும். இன்று நான் வசதியான வாழ்க்கை வாழக் காரணம் எழுத்தறிவு கூட இல்லாத என் பாட்டிதான்.

மேல்மங்கலம். இரா. இராகவன்.



இருபது நிமிஷத்தில்....

என்.டி.ஆரின் சினிமா அவரைக் காப்பாற்றுமா?

* என். சம்பத், திருச்சி.

? டி.வி.யில் 'பிறவி' படம் பார்த்தீர்களா?

! சின்னஞ் சிறு உண்மை நிகழ்ச்சியை வைத்துக் கொண்டு படைக்கப்பட்ட உயிரோட்டமுள்ள திரைக் காவியம். 85 வயதுக் கதாநாயகரின் ஜீவனுள்ள நடிப்பு. ஷாஜிக்கு ஒரு சபாஷ்!

* சுந்தர் சுந்தரி, கோவை.

? உயிர் கடிகார ஆராய்ச்சிக்கு வெளி உலகத் தொடர்பின்றி ஓர் அறையில் 35 நாட்கள் தங்கிச் சாதனை புரிந்த மாணவி கீதா பற்றி...?

! அவரது தியாகமும் துணிச்சலும் கணிசமானது. ஆராய்ச்சியின் பலன் அதனை ஈடுகட்டுவதாக இருந்தால் மகிழ்ச்சி.

* கே. வி. எஸ். மணியன், குடியாத்தம். *


? வாழப்பாடி ராமமூர்த்தி தலைவர் பதவி ஏற்றிருப்பது ராஜீவை நம்பியா? ஜெயலலிதாவை நம்பியா?

! அகில இந்திய ரீதியில் ராஜீவின் செல்வாக்கு தடுமாறுகிறது. தமிழகத்தைப் பொருத்தமட்டில் ஜெயலலிதாவின் செல்வாக்கு — இரு அணிகளும் இணைந்த பிறகு — மிகவும் உயர்ந்திருக்கிறது. அதிக நாள் தலைமறைவாகவே இருக்க மாட்டார் என்று நம்புவோமானால், 'வாழப்பாடி தமிழக காங்கிரஸுக்கு மட்டுமே தலைமைப் பதவி ஏற்றுள்ளார் என்பதையும் கவனித்தோமானால், அவர் ஜெயை நம்பித்தான் பதவி ஏற்றுள்ளார் எனலாம். ஒன்று நிச்சயம். தம்மைத் தாமே நம்பி அவர் பதவி ஏற்கவில்லை!

* ரூ. 20 பரிசு பெறுபவர்:
கே. வி. எஸ். மணியன்,
215, சந்தப்பேட்டை,
குடியாத்தம் — 632 602.



யாரை நம்பி...?



நம்பும் தவறுமாக...

* அர. மணிவண்ணன், ஆலத்தூர்.

? 'தெலுங்கு கங்கைத் திட்டத்தை நிறைவேற்ற விடாமல் ஆந்திர முதல் மந்திரி என்.டி.ஆர். முட்டுக்கட்டையாக இருக்கிறார்' என்று பிரதமர் ராஜீவ் குற்றம் சாட்டியுள்ளாரே?

! இருபதே நிமிஷங்களில் பேச்சு வார்த்தை பூர்த்தியாகி தெலுங்கு கங்கை சென்னைக்குப் பாயும் என்ற நம்பிக்கை மீண்டும் ஏற்பட்டிருக்கிறது. இது பிரதமருக்கு ஒரு மூக்குடைப்பு மட்டுமல்ல;

'மத்திய அரசின் ஒத்துழைப்பு இல்லாவிடினும் திட்டத்தை நிறைவேற்றுவோம்' என்று இரு முதல்வர்களும் கூறியிருப்பது முட்டுக் கட்டை போடுவது யார் என்பதையும் நிதர்சனமாக்குகிறது.

*** அ. முஸ்தபா, தக்கோலம்.**

? அ. தி. மு. க. வின் இப்போதைய ஸ்பெஷாலிடி என்ன?

! 'தலைவி எங்கே?' என்று ஆளுக்கு ஆள் தேடுவது!

*** கே. மகேஷ், சங்கராபுரம்.**

? 'தி. மு. க. அரசைக் கலைக்க மாட்டோம்' என மத்திய மந்திரி அருணாசலம் கூறியிருக்கிறாரே?

! நாடாளுமன்றத் தேர்தல், காங்கிரஸுக்குச் சாதகமாக அமையும் என்ற நம்பிக்கை அவருக்கு இல்லை போலிருக்கிறது!

*** ஆர். சுப்பிரமணியம், திருச்சி.**

? என். டி. ஆரின் சினிமா அவரைக் காப்பாற்றுமா?

! சரியாப் போச்சு! விசுவாமித்திரர் ஷூட்டிங் ஆரம்ப விழாவுக்கு வந்து குவிந்திருந்த தலைவர்களின் பட்டியலைப் பார்த்தால், என்.டி.ஆரை மட்டுமென்ன, ஜனதா தளம் உள்ளிட்ட தேசிய முன்னணியையே அந்தச் சினிமாதான் காப்பாற்றப் போகிறது என்று அவர்கள் அனைவரும் நம்புவது போலல்லவா தோன்றுகிறது!

*** ஜி. நீலா, மன்னார்குடி.**

? மத்திய அரசு ஆதிவாசிகளுக்காகக் கொடுக்கும் அரிசியை ஆந்திர அரசு கூடுதல் விலைக்கு விற்பதாகப் பிரதமர் கூறியிருப்பது பற்றி...?

! கர்நாடகாவில் நடந்த ஜனதா ஆட்சி பற்றி ஏதேதோ தப்பும் தவறுமாகச் சொன்னார்; ஹெக்டேயிடம் வாங்கிக் கட்டிக் கொண்டார். பிறகு ஆந்திராவில் என்.டி.ஆர். ஆட்சி பற்றி குற்றம் குறை கூறிப் பேசினார். 'என் பதில்களைப் பெறவே தகுதியற்றவர்' என்று என்.டி.ஆர். ஒரே போடாகப் போட்டு விட, உபேந்திராவும் மற்றவர்களும் பிரதமரின் கூற்றைக் கிழி கிழியென்று கிழித்தார்கள். 'பிரதமர் புளுகு மூட்டைகளைத் தேர்தல் நோக்கில் அவிழ்த்து விடுகிறார்' என்று கருத நாம் தயாராயில்லை; சரியான தகவல்கள் அவருக்குத் தரப்படவில்லை என்று நம்புவதற்குத்தான் விரும்புகிறோம். ஆனால் 'விசுவாமித்திரர் மேனகையுடன் டான்ஸ் ஆடுகிறார் என்றெல்லாம் பேசுவது ஒரு பிரதமருக்கு அழகில்லையே' என்ற எண்ணமும் கூடவே எழுகிறது.

*** பெ. அருள், கடலூர் — 1.**

? கஜானா நிரம்பி விட்டது போல் தெரிகிறதே?

! காலியான கஜானா அப்படியே இருக்குமானால் புதிதாக ஆட்சிக்கு வருகிறவருக்கு என்ன சிறப்பு இருக்க முடியும்? கஜானா நிரம்புவதற்குப் பல வழிகளையும் மேற்கொண்டு வெற்றி கண்டிருக்கிறார் முதல்வர். (உம்) சாராய சாம்ராஜ்ய ஊழலை ஒழித்துக் கட்டியது; முந்தைய ஆண்டுகளை விட அதிக லாபத்துக்கு மதுபானக் கடைகளை ஏலம் விட்டது; தேவையற்ற வாரியங்களுக்கு மூடு விழா நடத்தி பணத்தை மிச்சப்படுத்தியது; பட்ஜெட்டில் புதிய வரிகள்; வரி வசூலில் முன்னிலும் திறமை என்று பல. ஆனால் அதே நேரத்தில் எம்.ஜி.ஆர். பாணி இலவசங்களுக்காக அவர் அதிகமாக வாரி விடுவது கவலையளிப்பதாகவும் உள்ளது.

*** டி. எல். ரெட்டி, வேலிடுபட்டி.**

? மனிதாபிமானி என்று யாரைப் பாராட்டலாம்?

! வீழ்ந்து விட்ட அடையாறு ஆலமரத்துக்காக ஒருவனின் கண்கள் பனித்திருக்குமானால் அவனே மெய்யான மனிதாபிமானி!

*** அ. ஜமால் மொய்தீன், செங்குன்றம்.**

? 'கருணாநிதியின் கணக்கை முடிக்க நான் பொதுக் கணக்குக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளேன்' என குழந்தைவேலு கூறியிருக்கிறாரே?

! ஏதோ கிளுகிளுப்புக்காக இப்படிச் சொல்லி இருந்தால் சரி. மெய்யாலும் நம்பி பேசியிருந்தால், தமது அதிகார எல்லைகளையே புரிந்து கொள்ளாதவர்; அதனாலேயே அப் பதவி வகிக்கத் தகுதி இல்லாதவர் என்பதை நிரூபித்தவராகிறார்!

* சிக்கல் தீர்ந்தது!





* நிரூபிக்கிறார்!



உண்மைக் கதை

நரகத்திலிருந்து மேலும் கொடிய நரகத்துக்கு...

கீழ் ஃப்ளாட்டில் வசித்த மூன்று சகோதரிகளுடன் எனக்குச் சிநேகிதம் உண்டு. ஒருநாள் அவர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்த போது, அவர்களுடைய அப்பா என்னைப் பற்றிக் கிண்டலாய் மனம் புண்படும்படி கமெண்ட் அடிக்க, உடனே எனக்குக் கோபம் வந்து விட்டது. என் சிநேகிதிகள் முன்னால் கேலி செய்யப்படுவதை என்னால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. 'என்னையா கிண்டல் செய்கிறீர்கள்? நான் என்ன அத்தனை இளிச்சவாயனா?' என்று கோபத்தில் கத்தி விட்டு, நேரே என் ஃபிளாட்டிற்கு வந்தேன். வீட்டில் யாருமில்லை. ஃப்ரிட்ஜைத் திறந்தேன். வரிசையாய் விஸ்கி, பிராந்தி, பீர் என்று பாட்டில்கள். எல்லாம் மிக உயர்ந்த சரக்குகள். ஒவ்வொரு பாட்டிலாய் எடுத்து, என் இஷ்டப்படி வாயில் ஊற்றிக் கொண்டேன். எனக்குள் என்ன நடக்கிறது என்றே புரிந்து கொள்ள முடியாதபடியான ஓர் அனுபவம். தொடர்ந்து தலைசுற்றல், தள்ளாடித் தள்ளாடி சோபாவில் வந்து விழுந்ததுதான் எனக்குத் தெரியும்.

மறுபடி கண் விழித்துப் பார்த்த போது, என்னைப் படுக்கையில் கிடத்தியிருந்தார்கள். என்னைச் சுற்றி அம்மா, அப்பா, அக்கம் பக்கத்துக்காரர்கள், டாக்டர், ஓர் ஓரமாய் கீழ் ஃப்ளாட் சிநேகிதிகள்; அவர்களது அப்பா... இலேசாகச் சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன! நான் கிண்டல் செய்யப்பட்டது; கோபத்துடன் வந்து வரம்பு மீறிக் குடித்தது; சோபாவில் விழுந்தது...

''ஐ ஆம் ஸாரி! ஐ ஆம் ரியலி ஸாரி...!'' நீ என் கிண்டலை இவ்வளவு சீரியஸாய் எடுத்துக் கொள்ளுவாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை...' கீழ் ஃப்ளாட்டுக்காரர் மன்னிப்புக் கேட்டார். நான் வெற்றுப் பார்வை பார்த்தேன்.

டாக்டர், 'பயப்பட ஒன்றுமில்லை. ஹி இஸ் ஓ.கே...' என்று கூற, அப்பா, அம்மா முகத்தில் நிம்மதி.

நான் அளவுக்கு மீறி மது அருந்தியது பலத்த ஷாக் என்றாலும் கூட ஏதோ உணர்ச்சி வேகத்தில் முதல் தடவையாய் குடித்து விட்டான் என்றே அவர்கள் நம்பினார்கள். ஆனால் அது நிஜமில்லை. நான் ஏற்கெனவே பலமுறை குடித்திருந்தேன்!

என் அப்பா, பம்பாயில் ஓர் அயல் நாட்டு கம்பெனியில் மிகப் பெரிய பதவியில் இருந்ததால், மதுவருந்துவது அவருக்கு வழக்கமானது. வீட்டிலேயே கூட அடிக்கடி 'காக்டெயில் பார்ட்டிகள்' நடக்கும். நானும், என் தம்பியும் வரும் விருந்தாளிகளுக்கு, ஐஸ் தருவது, மது அருந்துவதற்கு ஐஸ் கட்டிகள், சோடா, தண்ணீர் இவை கொடுப்பது போன்ற சிறு சிறு வேலைகள் எல்லாம் செய்வோம். ஆனால் மதுவைத் தொட மாட்டோம்.

நாளடைவில் ''எப்படித்தான் இருக்கிறது... நாமும் ருசித்துப் பார்த்தால் என்ன?'' என்கிற எண்ணம் அடிக்கடி என் மனத்தில் எழுந்தது. அதைக் கட்டுப்படுத்த என்னால் ஓரளவுக்குத்தான் முடிந்தது. ஒரு நாள் வீட்டில் யாருமில்லாத சமயம் பார்த்து, ஃப்ரிட்ஜிலிருந்து, மது பாட்டிலைத் திறந்து



"மாணவர்கள் என்ன கோரிக்கையைக் கறதுன்னு ஒரு விவஸ்தையே இல்லாம போச்சு."

"என்ன கேட்கிறாங்க?"

"ஸ்ரீதேவியை அவங்க கிளாஸ் டீச்சராப் போடணுமாம்."

ஒரு வாய் ஊற்றிக் கொண்டேன். நானும் பெரிய மனிதன் ஆகி விட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. மண்டைக்குள் ஓடிய குறுகுறுப்பைச் சந்தோஷத்துடன் அனுபவித்தேன். யாரும் வீட்டில் இல்லாத போது, பாட்டிலைத் திறந்து, இரண்டு வாய் குடிப்பது என்பது நாளடைவில், வீட்டில் பெற்றோர் இருந்தாலும் கூட, யாரும் பார்க்காத சமயத்தில் குடிப்பது என்று மாறியது. இன்னும் சில நாட்களுக்குப் பின்னர், ஒன்றிரண்டு 'விழுங்கு'கள் என்பது, ஐந்தாறாக உயர்ந்தது. பாட்டிலில் மது கணிசமான அளவு குறைவதை அப்பா கண்டுபிடித்து விடுவாரோ என்கிற நிலை வந்த போது, அதிலே தண்ணீர் ஊற்றி நிரப்பி வைக்க ஆரம்பித்தேன்!

நாட்கள் நகர, நகர, நண்பர்கள் வீட்டில் போய்க் குடிக்க ஆரம்பித்தேன்; எனக்குக் கிடைத்த பணத்தையெல்லாம் மதுவுக்காகவே செலவழிக்க ஆரம்பித்தேன்.

இதற்கிடையில் படிப்பிலே கவனம் குறைந்தது. காலேஜில் முதல் வருடம் பரீட்சையில் ஃபெயில்! இது எனக்கே பெரிய அதிர்ச்சி. காரணம், சென்னையில் நான் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த நாட்களில் புத்திசாலி என்று பேரெடுத்தவன். எப்போதுமே வகுப்பில் முதல் ரேங்க் நான்தான். தவிர, பேச்சுப் போட்டியா? அனைத்துப் பள்ளி அளவில் முதற் பரிசு எனக்குத்தான். பள்ளி ஆண்டு விழாவா? தமிழிலோ, ஆங்கிலத்திலோ நிச்சயம் நான் ஒரு நாடகம் எழுதி, இயக்குவேன். அத்தனை பேரும் ரசித்துப் பாராட்டுவார்கள். எனக்குப் பரிசு நிச்சயம்.

ஆனால் பம்பாய் வந்து கல்லூரியில் சேர்ந்த பிறகு ஏன் நான் இப்படி மாறிப் போனேன் என்று எனக்கே ஆச்சரியமாய் இருந்தது. காலையில் எழுந்ததும் குளித்து விட்டு, சுவாமி முன் உட்கார்ந்து ஸ்லோகங்கள் சொல்லிக் கொண்டிருந்தவன் நான். விஷ்ணு சகஸ்ரநாமம், சுப்ரபாதம், ஆதித்ய ஹிருதயம்என்று அத்தனையும்மனப்பாடம்... இப்போது காலையில் எழுந்ததும் விஸ்கி அல்லவா கேட்கிறது!

பரீட்சையில் ஃபெயிலாகி விட்டதன் விளைவு... வீட்டிலே கெட்ட பெயர். யாரும் சிறிது கூட அனுதாபப்படவில்லை. அடுத்த பரீட்சை சமயத்தில், "இந்த மாத்திரையைப் போட்டுக் கொண்டால், இரவு நெடுநேரம் கண் விழித்திருக்கலாம்.. நிறைய படிக்க முடியும்" என்று நண்பன் ஒரு மாத்திரையை அறிமுகம் செய்தான். நானும் அதை முயன்று பார்த்தேன். நெடுநேரம் கண் விழித்திருக்க அந்த மாத்திரை உதவியது உண்மைதான். ஆனால் என்னால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை; எங்கேயோ மிதப்பது போல இருந்தது; மனம் சந்தோஷத்தில் குதிப்பது போலத் தோன்றியது. அந்த மாத்திரையை மறுபடி மறுபடி சாப்பிட என்னையறியாமல் உந்துதல் ஏற்பட்டது. வாரத்துக்கு ஒன்றரை மாத்திரை என்று தொடங்கிய நான் சில மாதங்களுக்குள்ளாக வாரத்துக்கு நூற்றைந்து வரை போட்டுக் கொள்ள ஆரம்பித்தேன்! நான், கட்டுப்பாட்டை இழந்து கொண்டிருப்பதை என்னால் நன்கு உணர முடிந்தது. ஆனாலும், என்னால் அந்த அடிமைத்தனத்திலிருந்து மீள முடியவில்லை.

தினம் தினம் நான் உட்கொண்ட மதுவின் அளவும் அதிகரித்துக் கொண்டே போனது. குடித்து விட்டு, ஒருநாள் இரவு கார் ஓட்டிச் சென்ற போது, விளக்குக் கம்பத்தில் மோதி, காரின் முன் பகுதி நசுங்கியது. அதிருஷ்டவசமாய் நான் சிறு காயமுமின்றித் தப்பினேன். என் பெற்றோருக்கு நான் பெரும் பிரச்னையானேன். ஒரு கட்டத்தில், அவர்கள் மனம் வெறுத்துப் போய், என்னை வீட்டை விட்டு வெளியேறச் சொல்லி விட்டார்கள்.

கொஞ்ச காலம் **'paying guest'** ஆக ஒரு வீட்டில் தங்கினேன். அயல்நாடு போய்ப் படிக்க வேண்டும்; பணிபுரிய வேண்டும் என்ற எனது பாலப்பருவ ஆசை நிறைவேற வழியில்லை என்றதும் ஏமாற்றமும் சோர்வும் அதிகமாயின.. நல்ல வேலை கிடைக்கவில்லை. கிடைத்த சாதாரண வேலைகளில் எனக்குத் திருப்தியுமில்லை; என்னால் முழுமையான ஈடுபாட்டுடன் பணிபுரியவும் முடியவில்லை.

அலைந்து திரிந்து கோவா போய்ச் சேர்ந்தேன். அங்கு ஹிப்பிகளுடன் பதினைந்து நாட்கள் இருந்தேன். கட்டுப்பாடற்ற அவர்கள் வாழ்க்கையில் நானும் ஒருவனானேன். விதம் விதமான போதைப் பொருட்களை எனக்கு அறிமுகப்படுத்தினார்கள். உலகத்தின் அத்தனை விதமான போதை மருந்துகள், மது வகைகள் அனைத்தையுமே அங்கே நான் ருசித்தேன். சில கொடிய போதை மருந்துகளை உட்கொண்டு என்னை மறந்து கிடந்த நிலையில் நான் வண்ணங்களைக் கேட்பது போலவும், இசையைப் பார்ப்பது போலவும், அண்ட வெளியில் பறப்பது போலவும், தண்ணீரில் மிதப்பது போலவும் உணர்ந்தேன். இவை தவிர **free sex** ... கட்டுப்பாடில்லாத கோவா வாழ்க்கைக்குப் பின் மீண்டும் பம்பாய் திரும்பினேன்.

என் பெற்றோர்கள் நான்கு நாள் வெளியூர் போயிருந்த போது, ஓர் அன்றைக்குள்



''எங்க அப்பா ரொம்ப மோசம், மச்சி.''

''என்ன பண்றார்?''

''அவருக்கு அரியர்ஸ் வந்தா மட்டும் எல்லோருக்கும் ஸ்வீட் வாங்கித் தர்றார். எனக்கு ரெண்டு சப்ஜக்ட்லே அரியர்ஸ் வந்ததுக்கு அடிக்க வர்றார்.''

என்னை வைத்துப் பூட்டிக் கொண்டு, போதை மருந்து, மது எதையுமே தொடாமல் இருக்க முடிவு செய்தேன். அந்த அனுபவம்... அப்பப்பா! மிகக் கொடுமையானது. புழுவாய்த் துடித்தேன். திட உணவு சாப்பிட முடியாது. இரண்டு மூன்று நிமிடங்களுக்கு மேல் ஒரு நிலையில் உட்காரவோ, படுக்கவோ முடியாது. உடம்பு முழுக்க விண்விண்ணென்று தெறிக்கும். கண்களிலிருந்தும், நாக்கிலிருந்தும் தண்ணீராய்க் கொட்டும். நெருப்பில் போட்ட புழுவைப் போல ஒரு துடிப்பு. எழுபத்திரண்டு மணி நேரம் அதைத் தாங்கிக் கொண்டு விட்டால் கண்டம் தப்பித்தாற் போல நான் தப்பித்தேன். ஆனால் அடுத்த இரண்டாவது நாளில் மீண்டும் என் கட்டுப்பாட்டை இழந்து விட்டேன்.

மது, போதை மருந்துகள் தவிர நான் அடிமையாகிப் போன இன்னொரு விஷயம் சிகரெட். தினசரி ஒன்று என்று ஆரம்பித்தது, தினத்துக்கு நாற்பெழுபது சிகரெட் வரை பிடித்தேன்.

இந்த மதுவும், போதை மருந்துகளும் என்னை என்னென்ன கீழ்த்தரமான வேலைகளையெல்லாம் செய்யத் தூண்டின, செய்ய வைத்தன, அதன் விளைவுகள் என்னென்ன என்றெல்லாம் சொன்னால் நீங்கள் வாயடைத்துப் போவீர்கள். வீட்டிலேயே பணம் திருடியிருக்கிறேன்; பொருட்களைத் திருடி அடிமட்ட விலைக்கு விற்றிருக்கிறேன். பிக்பாக்கெட் அடித்திருக்கிறேன். இரண்டு மூன்று புட்டிகள் குடிக்க வேண்டும் என்கிற நிலையில் கையில் பணமில்லாமல் கள்ளச் சாராயம் குடித்திருக்கிறேன். இரவு முழுக்க பிளாட்பாரங்களில் நினைவிழந்து கிடந்திருக்கிறேன். விபசார விடுதிகளில், அங்கேயுள்ள போதை மருந்து கிடங்குகளில் பல நாட்கள் கழித்திருக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரை எல்லாமே முடிந்து விட்டது என்கிற நிலையை அடைந்தேன். உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் என்னால் ஒன்றும் செய்ய இயலாத நிலையில், 'ஆண்டவனே கதி' என்று முடிவு செய்தேன். என் அப்பாவின் நண்பர் ஒருவரிடம் உதவி கோரினேன். அவருக்கோ பண உதவி செய்ய மனமில்லை; காரணம் என் மீது அவருக்கு நம்பிக்கையில்லை. (அந்த நாட்களில் யார்தான் என்னை நம்பினார்கள்!) மிகவும் கெஞ்சிக் கேட்டதால், சென்னைக்கு ரயில் கட்டணம் மட்டும் தந்தார். பதினெட்டு ஆண்டுகள் என்னைப் பலவிதங்களில் ஆட்டுவித்த பம்பாய்க்கு 'குட்பை' சொல்லி விட்டுச் சென்னைக்கு ரயில் ஏறினேன்.

சென்னையில் ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். எட்டு நாட்கள் சுய நினைவற்ற நிலையில் கிடந்தேன். ஒன்பதாம் நாள் கண் விழித்தபோது, ஒரு புதிய மனிதனாகி விட்டது போல உணர்ந்தேன். அன்றைய தினம் முதல் நான் மதுவையோ, போதை மருந்துகளையோ, சிகரெட்டையோ தொடவில்லை.

பம்பாயில் பலமுறை **de-toxification** எனப்படும் நச்சுப் பொருட்களை உடலிலிருந்து வெளியேற்றும் சிகிச்சையைச் செய்து கொண்டேன். என் பெற்றோரும் உற்றார் உறவினரும் எனக்குப் பொருள் ரீதியாகவும் அன்பான அரவணைப்புக் கொடுத்தும் உதவினார்கள். ஒவ்வொரு முறை சிகிச்சை எடுத்துக் கொள்ளும் போதும் சித்திரவதையை அனுபவிப்பேன். ஆனால் சிகிச்சை முடிந்ததும் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் மீண்டும் போதைப் பொருட்களிடம் சரணாகதி அடைந்து விடுவேன்.

சென்னை சிகிச்சைக்குப் பிறகுதான் எனக்கு முன்னைப்போதையும் விட அதிக மனவலிமை பிறந்தது. என்னை ஒரு புதிய மனிதனாக்கியதற்காக டாக்டருக்கு நன்றி கூறினேன். அதை அவர் ஏற்க மறுத்தார். ''இன்று ஒரு புதிய மனிதனாக நீங்கள் இருக்கிறீர்கள் என்றால் அதற்கு ஆண்டவனின் கருணைதான் காரணம்'' என்றார். ''இந்தப் பழக்கங்களுக்கு அடிமையாகி விட்டால், மீண்டு வருவது என்பது மிகவும் சிரமமானது. மீண்டு வந்தாலும் அந்த விடுதலை நிரந்தரமாக இருப்பது சந்தேகமே! ஏதோ லட்சத்தில் ஒரு கேஸ் நீங்கள். தொடர்ந்து இதே வைராக்கியத்துடன் இருக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

கேட்டு எழுதியவர்: **எஸ். சந்திரமௌலி**

பி.கு.: **சம்பந்தப்பட்டவரின் வேண்டுகோளுக்கிணங்கி, படத்தையும், நிஜப் பெயரையும் பிரசுரிக்கவில்லை. சொல்லியுள்ள சம்பவங்கள் சிறிதும் கற்பனைக் கலப்பில்லாதவை.**

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை ஸெரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது: பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.



6 மாதங்களிலிருந்து

4 மாதங்களிலிருந்து

6 மாதங்களிலிருந்து

இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

RK SWAMY/FSL/5112/TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

